Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 மார்கழி 20 சனிக்கிழமை (04.01.2014) பக்கங்கள் 20 ஓசை - 095

## வலி. வடக்கு மீள்குடியமர்வு; ஜனாதிபதிக்கு விசேட அறிக்கை

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கு மக்கள் தொடர்பில் விபரங்களைத் திரட்டி ஜனாதிபதிக்கு வழங்கி அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதன் மூலம் இம்மக்களின் குடியேற்றத்திற்கு தீர்வுகாணமுடியும். தன்னிச்சையாக எந்த முடிவையும் நான் எடுக்கமுடியாது என மீள்குடியேற்ற அமைச்சர் சரத் குணரட்ண வீரக்கோன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்ட அமைச்சர் யாழ். செயலகத்தில் அரச அதிபர் .மற்றும் உதவி அரச அதிபரையும் சந்தித்து கலந்துரையாடினார்.

இங்கு இடம்பெயர்ந்திருக்கும் மக்களின் விருப்பு, அவர்களின் வாழ்வாதாரம் மற்றும் பங்கிடப்படும் காணி என்பன குறித்து ஆராய்ந்துள்ளோம். அதன் விபரங்களை எமது செயலாளர்கள், பிரதேச செயலர்கள் ஊடாக பெறவுள்ளதுடன், பலாலிக்கு அண்டிய பகுதிகளுக்கும் நான் சென்றேன். நிலைமைகளை கேட்டறிந்து கொண்டதுடன், உதவிகளையும் வழங்கியுள்ளேன்.

இராணுவத்தினரின் உதவியுடன் இங்கு மட்டுமல்ல,

19 ஆம் பக்கம் பார்க்க

## படையினர் வசமிருந்த காணிகள் உரிமையாளர்களிடம் கையளிப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் கடந்த நான்கு வருடங்களாக இராணுவத்தினரின் பயன்பாட்டில் இருந்த 24 காணிகள் நேற்று உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டன.

நேற்றுப் பிற்பகல் 3.00 மணியளவில் கிளிநொச்சியில் அமைந்துள்ள

19 ஆம் பக்கம் பார்க்க

# இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்ட அரசை இணங்கவைக்க இந்தியா முயற்சி



(புதுடில்லி)

இலங்கைத் தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு உரிய தீர்வுகளைக் காண்பதற்காக இலங்கை அரசை இணங்கச்செய்வதற்கான எல்லா நடவடிக்கைகளையும் இந்தியா எடுத்துள்ளது என்று இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்தார்.

மேலும் இலங்கையின் வடக்கில் தமிழர்களின் இருப்புக்கும் பாதுகாப்புக்கும் உத்தரவாதமளிக்கும் வகையில் இலங்கை அரசுடன் இந்தியா பல தடவைகள் விவாதித்துள்ளது. தொடர்ந்தும் இவ்விடயத்தில் இந்திய அரசு முனைப்புடன் செயற்படும் எனறும் இந்தியப் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் தமிழக மீனவர் பிரச்சினை தீர வடக்கு மாகாண அரசும் தமிழ்நாட்டுத் தமிழர்களும் பேசுவது தான் ஒரே வழி என்கிறார் பிரதமர்.

இலங்கைத் தமிழர்கள் தொடர்பில் இந்தியா அக்கறை கொண்டிருக்கவில்லை என்று கூறப்படுவதில் உண்மையில்லை என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு தீர்வுகாண்பதற்காக இலங்கை அரசாங்கத்தை இணங்கச்செய்வதற்கான எல்லா நடவடிக்கைகளையும் இந்தியா எடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மன்மோகன் சிங்கின் 10 ஆண்டுகால ஆட்சியில் மூன்றாவது செய்தியாளர் சந்திப்பு டில்லியில் நேற்று நடந்தது.

அதன்போது, இலங்கைத் தமிழர்கள் தொடர்பில் இந்திய அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுக்காதது ஏன் என்று

19 ஆம் பக்கம் பார்க்க

## எந்நேரமும் கலைக்கப்படலாம் மேல் மாகாணசபை

(கொழும்பு)

மேல்மாகாணசபை மற்றும் தென்மாகாண சபை ஆகியவை எந்த நேரத்திலும் கலைக்கப்படலாம் என்று அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அமைச்சர் மேற்படி தகவலை வெளியிட்டார்.

மேலும் அடுத்த அமைச்சரவை கூட்டத்திற்கு முன்னர் தென் மற்றும் மேல் மாகாண சபைகள் கலைக்கப்படலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கைத்தொழில் முயற்சிக்கு மூலப்பொருள் விநியோகம்

### உற்பத்திக்கு வலுவான ஊக்குவிப்பு



(கொழும்பு)

சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு மூலப்பொருட்களை இலகுவாகவும், மலிவாகவும் வழங்குவதை உறுதி செய்யும் நோக்கில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் மேற்படி அமைச்சில் நேற்றைய தினம் கலந்துரையாடலொன்று இடம் பெற்றது.

பல்வேறு துறைகள் சார்ந்த கைத்தொழிலாளர்கள் கலந்துகொண்ட இக் கலந்துரையாடலின் போது இரும்பு, அலுமினியம், செம்பு, பித்தளை, உருக்கு போன்ற மூலப்பொருட்களை இலகுவாகவும்

19 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய மீனவர்கள் 25 பேர் கைது

(கொழும்பு)

இலங்கை கடல் எல்லையில் மீன் பிடித்துக்கொண்டிருந்த இந்திய மீனவர்கள் 25 பேரை கடற்படையினர் கைது செய்துள்ளதுடன் ஐந்து படகுகளையும் கைப்பற்றியுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

அவர்களை கற்பிட்டி மற்றும் மன்னார் பொலிஸ் நிலையங்களில் ஒப்படைத்துள்ளதாகவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

மன்னார், தாழ்வுபாட்டு கடற்

19 ஆம் பக்கம் பார்க்க

## வாள்வெட்டில் 6 பேர் காயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள்களில் வந்த இனந்தெரியாத குழுவினரின் வாள்வெட்டிற்கு இலக்காகி 6 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்த 6 பேரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் யாழ். வசாவிளான் கோணாவளைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க

07



பிணை

08



மோதல்

## கூரை மீது போராட்டம்; கைதிகள் உண்ணாவிரதம்

(கொழும்பு)

கண்டி - போகம்பர சிறைச்சாலையில் கூரையின் மீதேறி கைதிகள் சிலர் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.


மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகள் சிலரே இவ்வாறு உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் சந்திரரத்ன பல்லேகம தெரிவித்தார்.

தமக்கு விதிக்கப்பட்டுள்ள மரண தண்டனையை இரத்துச் செய்யுமாறு வலியுறுத்தியே இந்தக் கைதிகள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

போகம்பர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 450 கைதிகள் மாத்திரமே தற்போது இந்த சிறைச்சாலையில் இருப்பதாகவும், ஏனையோர் வேறு சிறைச்சாலைகளில் தடுத்து வைத்திருப்பதாகவும்

19 ஆம் பக்கம் பார்க்க

# மேலும் நான்கு எலும்புக்கூடுகள் மன்னார் புதைகுழியில் மீட்பு



### மனித எச்சங்களுக்கு உச்ச பாதுகாப்பு

(கொழும்பு)

மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் இதுவரை 11 இற்கும் மேற்பட்ட மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில் மன்னார் நீதவானின் உத்தரவிற்கமைவாக மீண்டும் நேற்றுக் காலை முதல் குறித்த பகுதியில் உள்ள மனிதப் புதைகுழி தோண்டப்பட்டது.

மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் மற்றும் அநுராதபுர சட்ட வைத்திய நிபுணர்

19 ஆம் பக்கம் பார்க்க

# பிரபந்தப் பெருந்திரட்டு நூல் வெளியீட்டு விழா

புலவர்மணி கா.நீலகண்டன், செல்லத்துரை சுதர்சன் ஆகியோரைப் பதிப்பாளர்களாகக் கொண்டு வெளிவரும் உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் பிரபந்தப் பெருந்திரட்டு நூலின் வெளியீட்டு விழா நாளை பிற்பகல் 2.00 மணிக்கு உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் வல்வை ந.அனந்தராஜ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, பேராசிரியர் கி.விசாகரூபன், பேராசிரியர். வ.மகேஸ்வரன், பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் பூ.சோதிநாதன், அதிபர் சு.கிருஷ்ணகுமார், ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி இ.தில்லையம்பலம் ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளனர்.

இந் நிகழ்வில் வைத்திய கலாநிதி ந.குகதார்சன், பேராசிரியர் சி. சிறீசற்குணராசா, வைத்திய கலாநிதி பானு பிரசன்னா, விரிவுரையாளர் ந.சஞ்ஜீவன், பொறியியலாளர் நீ.நித்தியானந்தன், சிவப்பிரம்மஸ்ரீ வைத்தியநாதக்குருக்கள், திருமதி தாரணி செல்வநேசன், யாழ் பிரதம நூலகர் திருமதி இமெல்டா கருணாகரன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கின்றனர்.

19 ஆம் நூற்றாண்டில் ஈழத்தின் பெரும்புலவராகத் திகழ்ந்த உடுப்பிட்டி சிவசம்புப் புலவரின் படைப்புக்களைக் கொண்ட பெருந்திரட்டாக வெளியிடப்படும் இந்நிகழ்வு வடமராட்சிப் புலமைப் பாரம்பரியத்தின் பெருமையை அறிவதற்கு ஒரு ஆவணமாகத் திகழ்கின்றது.

# புத்தூர் யுவதியின் மரணம்; இளைஞனின் விளக்கமறியல் நீடிப்பு

புத்தூரில் யுவதி ஒருவரின் சடலம் கிணற்றிலிருந்து மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த இளைஞரைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் அச்சுவேலிப் பகுதியில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக அமுதலிங்கம் கிருஷ்ணதீபன் என்ற இளைஞன் அச்சுவேலிப் பொலிஸாரினால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இவ்வழக்கு நேற்றைய தினம் மல்லாகம் நீதவான் பசீர் முகமட்டினால் மீண்டும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, சந்தேக நபரை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்துள்ளார். (க.ர)

# உண்டியல் திருவிழா

சிறுவர்களின் சேமிப்பை ஊக்குவிக்கும் வகையில் மக்கள் வங்கி 'உண்டியல் திருவிழா' எனும் பெயரில் விசேட சிறுவர் சேமிப்பு ஊக்குவிப்பு திட்ட நிகழ்வு இன்று மாலை 3.00 மணிக்கு வங்கியின் பிராந்திய அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே வங்கியால் வழங்கப்பட்ட உண்டியலில் அதிகளவில் பணம் சேகரித்த சிறுவர்களைக் கௌரவித்து பசிரில் வழங்கப்படவுள்ளது. (54, கி)

# விபத்தில் படுகாயம்

யாழ்ப்பாணம், பருத்தித்துறை வீதி ஆனைப்பந்திச் சந்தியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை வீதியிலிருந்து யாழ்.நோக்கி வந்துகொண்டிருந்த சிறிய ரக வடி வாகனமும், நாவலர் வீதியூடாக வந்த மோட்டார் வாகனமும் மோதுண்டதில் மோட்டார் வாகனத்தில் வந்த இளைஞர் படுகாயமடைந்தார். இவ் விபத்து தொடர்பாக பொலிஸார் விசாரணையை மேற்கொண்டனர். (க.ர)


## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1022 | திகதி 02.01.2014

வெற்றி எண்கள்: 23 38 39 45 | ஆங்கில எழுத்து: I

ஜக்பொட் பரிசு ரூ. 1,82,77,120/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 1,82,77,120/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7 | 50,000/= | ரூ. 3,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 269 | 1,000/= | ரூ. 2,69,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 459 | 1,000/= | ரூ. 4,59,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11805 | 60/= | ரூ. 7,08,300/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6086 | 40/= | ரூ. 2,43,440/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 154732 | 20/= | ரூ. 30,94,640/= |
| ஆங்கில எழுத்து | 22557 | 20/= | ரூ. 4,51,140/= |
| | | மொத்தம் ரூ. | 65,75,520/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| மாத்தறை | 705486356-7-47 |
| ஹம்பாந்தொட்டை | 705490764-2-02 |
| அம்பாறை | 705480029-3-33 |
| திருக்கோணாமலை | 705493618-5-35 |
| அநுராதபுரம் | 705486969-3-43 |
| பொலன்னறுவை | 705483489-8-28 |
| மாத்தளை | 705494616-3-43 |
| குருநாகல் | 705490114-1-11 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 69,75,520/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா 18,579,780/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.01.06 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02
தொலைபேசி: 2 335546/7

(C/3264)



# இனிய வாழ்த்துக்கள்...

இன்று 42 ஆவது அகவை காணும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் காரைநகர் அமைப்பாளரும், காரைநகர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான

## வீரமுத்து கண்ணன் (ரஜனி) அவர்கள்

சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்



மக்கள் சேவையே முழு மூச்சாக
நெஞ்சினில் உரம் கொண்டு
நேர்மைத்திறன் கொண்டு
வெள்ளைச் சிரிப்பினிலே
குழந்தை முகத்துடனே
சிறியவர் முதல் பெரியவர் மனங்களில்
வாழும் எங்கள் வீட்டுப் பிள்ளை கண்ணனே
உன் இனிய இந்நாளில் வாழ்க
வளமுடன் என வாழ்த்துகின்றோம்...

- தோப்புக்காடு கிராம அபிவிருத்திச் சங்கம்
- தோப்புக்காடு விளையாட்டுக் கழகம்
- பிட்டியெல்லை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்
- பிட்டியெல்லை கிராம அபிவிருத்திச் சங்கம்
- மருதபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம்
- காரை. தென்றல் கிராம அபிவிருத்திச் சங்கம்
- மருதமலை முருகன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்
- காரை.தெற்கு நெய்தல் கிராம அபிவிருத்திச் சங்கம்
- பிட்டியெல்லை அம்பாள் விளையாட்டுக் கழகம்

(C/2594)

# ஊழியர் சேமலாப நிதியத்தின் கீழ் கடந்த ஆண்டில் 362 நிறுவனங்கள்

## பிரதித் தொழில் ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

ஊழியர் சேமலாப நிதியத்தின் கீழ் கடந்த ஜனவரி முதல் நவம்பர் வரை வட மாகாணத்தில் 362 நிறுவனங்கள் புதிதாக இணைந்துள்ளதாக வடமாகாண பிரதித் தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய 5 மாவட்டங்களிலும் கடந்த 11 மாதங்களில் 362 நிறுவனங்கள் புதிய பதிவுகளை மேற்கொண்டுள்ளன மட்டுமல்லாது இக்காலப்பகுதியில் தீர்க்கப்படாதிருந்த 105 ஊழியர் சேமலாப நிதியப்பிணக்குகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தீர்த்துவைக்கப்பட்ட பிணக்குகளில் சில கொடுப்பனவுகள் இன்றி தீர்க்கப்பட்ட போதிலும் 36 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வரையான ஊழியர் சேமலாப நிதியக் கொடுப்பனவுகள் பயனாளிகளுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டில் இவ்வாறு ஊழியர் சேமலாப நிதியத்தில் கூடுதலான நிறுவனங்கள் தம்மை இணைத்துக் கொண்டுள்ள போதிலும் மன்னார் மாவட்டத்தில் குறைந்தளவிலான பதிவுகளே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒப்பீட்டளவில் யாழ்மாவட்டத்தில் அதிகளவான நிறுவனங்கள் ஊழியர் சேமலாம நிதியத்தின் கீழ் புதிதாக பதிவுகளை மேற்கொண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# மாணவர் விடுதி திறப்பு

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட மாணவர் விடுதியானது சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளது.

இவ் மாணவர் விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்க விரும்பும் மாணவர்களை எதிர்வரும் 15 ஆம் திகதி புதன் கிழமைக்கு முன்பாக அனுமதிகளினை பெற்றுக்கொள்ளுமாறு கல்லூரி அதிபர் எஸ்.சிவனேஸ்வரன் அறிவித்துள்ளார். இங்கு கல்வி கற்கும் திறன் காணப்பட்டும் வறுமை காரணமாக கல்வியினை தொடர முடியாது இடர்படும் மாணவர்கள் கல்வி கற்பதற்கு ஏற்ற வகையில் விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் வறுமை காரணமாக விடுதியில் தங்கி கல்வியினைப் பயிலவுள்ள மாணவர்களிற்கு உதவியினை வழங்க விரும்புகின்றவர்கள் பாடசாலைச் சமூகத்துடன் தொடர்புகளினை மேற்கொண்டு உதவ முடியும். இவ் மாணவர் விடுதியானது கல்லூரியின் பழைய மாணவனும் தொழில திபருமாகிய ஸ்ரீரஞ்சன் நடராசா என்பவரினால் 90 இலட்சம் ரூபா பெறுமதியில் நவீன வசதிகளுடன் கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (90)

# நூலகம் நிறுவனத்தின் 9ஆவது ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

நூல்களை எண்ணி ஆவணங்களாக தன்னகத்தே கொண்டுள்ள நூலகம் நிறுவனத்தின் ஒன்பதாவது ஆண்டு நிறைவு விழா இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ணன் மிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அத்துடன் இந்நிகழ்வில் ஈழத்து தமிழ் சூழலில் ஆவணப்படுத்தலும் பேணிப்பாதுகாத்தலும் எனும் தொனிப்பொருளில் நடாத்தப்பட்ட தமிழ் ஆவண மாநாடு 2013 சமர்பிக்கப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து ஆய்வுக் கட்டுரைச் சேவையும் வெளியிடவுள்ளது.

பேராசிரியர் மௌனகுருவின் நெறியாள்கையில் மட்டக்களப்பு அரங்க ஆய்வுகூடம் வழங்கும் 'இராவணேசன் - வடமோடி' நாடகமும், நிருத்தத் ஷேத்ரா நாட்டியப்பள்ளி (அவுஸ்ரேலியா) மாணவிகள் வழங்கும் 'தென் துருவ 'சலங்கை' எனும் பரத நிகழ்வும் இடம் பெறவுள்ளது.

தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக முறைசார் கல்வி அமைப்புக்கிணங்க ஏனைய கல்வி வளங்களையிணைத்து பள்ளிக்கூடம் செயற்றிட்டத்தினூடாக பயனர் தோழமையுடன் கூடிய மெய்நிகர் கற்றல் பள்ளிக்கூடம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டவுள்ளது. (கி)

# சதுர்த்தி உற்சவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி விநாயகர் ஆலய சதுர்த்தி உற்சவம் இன்று இடம் பெறுகின்றது. மு.ப. 10 மணிக்கு நவகும்ப பூசை இடம்பெற்று விசேட அபிசேகம் நிகழ்வதுடன் விசேட பூசையும் இடம்பெறும்.


வசந்த மண்டப பூசை விசேடமாக இடம்பெற்று விநாயகப் பெருமான் உள் வீதி உலாவருவதுடன் நண்பகல் மகேஸ்வரபூசை இடம்பெற்று வழமைபோல அன்னதானமும் இடம்பெறும்

இச் சதுர்த்தி உற்சவம் ஆலய பிரதமகுரு கலாநிதி து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ளன. (இ)

# மின் விநியோகம் தடை

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை, இடம் நகர்த்துவதற்காகவும் புதிய மின்மாற்றியை நிறுவுவதற்காகவும் இன்று சனிக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை களபூமி, கடற்படைத்தளம், ஊரி, ஊர்காவற்றுறை, தீவகம் முழுவதும், மானிப்பாயின் ஒரு பகுதி, சங்கரப்பிள்ளை வீதி, மேதர் பிரதேசம் ஆகிய, இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். என யாழ்.பிராந்திய மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.



வடமாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் க.பொ.த உயர்தரப் பெறுபேற்றில் மாவட்ட மட்டத்தில் முதலாமிடம் பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்ட மாணவர்களுடன் ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் பிரதிநிதிகள் அமர்ந்திருப்பதைக் காணலாம். (படம்: ஆர்.இராஜகுமார்)

# ஏழைகளின் வயிற்றில் எழுதப்படும் கணக்கு...




இலங்கை அரசாங்கம் ஏணிகளை இறக்குமதி செய்தால் அது உபயோகமாக இருக்கும். ஏழை, எளிய மக்கள் விலைவாசி உயர்வை எட்டிப் பிடிக்க வேண்டும் என்றால் இதைத் தவிர இந்த அரசாங்கம் செய்யக் கூடிய மிகப் பெரிய மனிதாபிமான உதவி வேறில்லை. அதிலும் வருமானம் குறைந்த நிலையில் இருக்கும் மூன்றில் இரண்டு பங்கு மக்களுக்காக இந்த உதவியை அரசாங்கம் கண்டிப்பாகச் செய்துதான் ஆக வேண்டும்.

அரசாங்கத்தின் அதிபதியாக இருக்கும் மகிந்த ராஜபக்ஷ தன்னுடைய சிந்தனையை 'மகிந்த சிந்தனை' என தேசத்தின் மகுட வாக்கியமாக்கி அதை நடைமுறைப்படுத்துவதற்காக முயற்சிக்கிறார்.

மன்னர்களும் தலைவர்களும் இப்படியெல்லாம் சிந்திப்பது புதிதல்ல. ஆனால், இந்த மாதிரியான சிந்தனைகளால் சனங்களுக்கு நன்மைகள் கிடைப்பதுதான் புதினம். இலங்கையில் துரிதகதியிலே பெரும் அபிவிருத்திகள் நடக்கின்றன. கண்கொள்ளாக் காட்சிகளாக, நம்பக் கடினமான ஆச்சரியங்களாக பல காரியங்கள் நடந்திருக்கின்றன. இன்னும் நடந்து கொண்டிருக்கின்றன.

ஆனால், அந்த அளவுக்கு ஊழலும் முறைகேடுகளும் தாராளமாகவே வளர்ந்திருக்கின்றன. இதை யாரும் மறுக்க முடியாது. அப்படி யாரும் மறுத்தாலும் அதை யாரும் நம்பப்போவதும் இல்லை.

அரசாங்கத்தின் உயர் மட்டத்திலேயே இதைப்பற்றிய கதைகளைப் பகிரங்கமாகவே பலரும் பேசிக் கொள்கிறார்கள். தலையிலிருந்து கால்வரையில் ஊழல் பெருத்து விட்டது.

இது இலங்கையை வறிய ஆபிரிக்க நாடொன்றைப்போல கையேந்தும் நிலைக்குக் கொண்டு போகப்போகிறது என்று துக்கப்படுகிறார் விவரங்களை அறிந்த நண்பர் ஒருவர்.

மகிந்த சிந்தனை வறுமையை ஒழிப்பதற்காக பாடுபடுவதாகக் கூறுகிறது. ஆனால், அரசாங்கத்தின் எழுதப்படாத – அறிவிக்கப்படாத கொள்கை நாட்டிலே வறுமையையே அதிகரிக்கிறது.

திவிநெகும–வாழ்வின் எழுச்சி–என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தை பெருமெடுப்பில் அறிமுகப்படுத்துகிறது. இந்தத் திட்டம் கிராமங்களைக் கட்டியெழுப்புதல், வறுமையை ஒழித்தல், சுயபொருளாதாரத்தை நிமிர்வுறுத்துதல், ஏழைகளை இல்லாதொழித்தல் எனப் பெரியதொரு பட்டியலைத் தன்னிடத்தில் வைத்திருக்கிறது.

ஆனால், நடைமுறையில் ஏழைகளே பெருகிக் கொண்டிருக்கிறார்கள். வறுமையும் பஞ்சமும் காட்டுச் செடியைப்போல வளர்ந்து வருகிறது.

இதற்கு என்ன காரணம்? இந்தக் காரணத்தைக் கண்டுபிடிப்பதற்கு யாருக்கும் பூதக்கண்ணாடி தேவையில்லை. அல்லது ஆய்வுகளும் வேண்டியதில்லை.

அரசாங்கத்தின் ஆடம்பரச் செலவுகளில் பாதியைக் குறைத்தாலே போதும் பாதி வறுமையை ஒழித்துவிட முடியும். நாடுமுழுவதிலும் கட்டப்பட்ட 'கட்டவுட்'களுக்குச் செலவழித்த பணத்தில் பாதிபோதும் பல கிராமங்களை முழுதாக முன்னேற்றுவதற்கு. 'கட்டவுட்' கலாசாரத்தை உருவாக்கிய அளவுக்கு நாட்டில் அமைதியை நோக்கிய கலாசாரம், நல்லெண்ணத்தை நோக்கிய பண்பாடு உருவாக்கப்படவில்லை என்பது வரலாற்றுச் சோகம்.

இதைவிட ஆடம்பர வாகனங்கள், சொகுசு வண்டிகள் என்று எல்லைகடந்த செலவீனங்கள்.

அரச திணைக்களங்களில் நிரம்பி வழியும் வாகனங்கள் அளவுக்கு அவற்றின் சேவை மங்கலாகியிருக்கிறது. ஊழியர் தொகை என்றுமில்லாத அளவுக்கு அரச சேவையில் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

ஏராளமான திட்டங்களை வைத்திருக்கும் அரசாங்கமாக இந்த அரசாங்கமே உள்ளதாக வரலாற்றுப் பதிவுகள் சொல்கின்றன. ஆனால் மக்களோ இந்தத் திட்டங்களால் சுரண்டப்படுகிறார்கள்.

ஒவ்வொரு திட்டம் வரும்போதும் மக்கள் அவற்றினால் வளம்பெறுவதை விட அலைக்கழிக்கப்படுவதே அதிகமாக உள்ளது. இந்தத்திட்டங்களின் ஆரம்ப விழாக்கள் பெரும் கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது. பின்பு இவற்றின் கதியென்ன, கதையென்ன என்று தெரியப்படுத்தப்படுவதில்லை.

எல்லாக் கொண்டாட்டத்திற்கும் எழுதப்படும் கணக்கும் தீர்க்கப்படும் கணக்கும் ஏழைகளின் வயிற்றிலேயே போய் அடியாக விழுகிறது.

உலகம் முழுவதிலும் கடன்பட்டு நாட்டை அலங்காரமாகக் கட்டியெழுப்புவது வேறு. சொந்த மக்களை அவர்களுடைய வாழ்க்கையில் நிமிர வைப்பது வேறு. சொந்த மக்கள் நிமிர்ந்தால் தானாகவே நாடு உயரும். அதற்குக் கடன்பட்டால் தகும். அதாவது சுயபொருள்ாதார விருத்திக்காகக் கடன்பட்டால் அது பெறுமதி.

ஆனால், இன்றைய இலங்கையின் கடன்படுகை என்பது கொமிசன்களை அதிகமாகப் பெறுவதற்கான ஒரு உபாயம் என்பதே பொது நம்பிக்கை. இந்தப் போக்கு கடந்த அரசாங்கங்களிலும் இருந்த ஒன்றுதான். ஆனால், இப்பொழுது அது அதிகரித்திருக்கிறது.

இந்த மாதிரியான குறைகளால்தான் அரசாங்கம் பால்மா தொடக்கம் மக்களின் அத்தியாவசியப் பொருட்களின் விலைலை உச்சமாக அதிகரிக்க வேண்டியேற்பட்டது. இந்த விலையேற்றம் சனங்களின் வயிற்றிலடித்திருக்கிறது.

தங்களின் வயிற்றிலடிக்கும் எந்தக் காரியங்களையும் அவர்கள் என்றும் மன்னிப்பதில்லை.

எவன் பூரணமாக அகத்தூய்மை உள்ளவனோ அவனே உண்மையான பக்திமானாகிறான். - சுவாமி விவேகானந்தர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## ஈழத் தமிழர் என்னும் புண்!

நமது மக்களின் வாழ்வைப் புண்ணாக்கிவிட்டு, அதை மேலும் குத்திப் புண்ணாக்கிக் காட்டிக் காட்டியே அரசியல் செய்துகொண்டிருப்பதும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாகாண சபை உறுப்பினர்கள் பிரதேச சபை உறுப்பினர்கள் என அரச சலுகைகளோடு வாழும் பதவிகளைப் பெற்றுக்கொண்டு உல்லாசத்தில் மிதப்பதும் இங்குள்ள தமிழ்த் தலைவர்கள் மட்டும்தான் என நினைத்திருந்தோம்.

ஆனால், நமது மக்களின் வாழ்வுப்புண் ருசியை பிற நாடுகளில் அரசியல் பதவிகளைப் பிடிப்பவர்களும், உலகம் தழுவிய ஊடகங்களில் கதாநாயகப் புகழை அடைய விரும்புபவர்களும் கூட அறிந்துகொண்டு இங்கு படையெடுத்து வருவதை அண்மைக்காலங்களில் அதிகமாகவே காணமுடிகிறது.

நமது மக்களின் அவலங்களைச் சொல்லி, அரச எதிர்ப்பு வீர வசனங்களைப் பேசினால் உலகெங்கும் நல்ல விலைக்குப் போகிறது என்னும் வியாபாரத்தைப் பலரும் கண்டுகொண்டுவிட்டார்கள்.

“சிங்கள அரசிடம் சிக்கிச் சீரழியும் இலங்கைத் தமிழர்” என்கிற சித்திரம் நன்கு விலைபோகிறது என்று கண்டவர்கள், சிதைந்து கிடக்கும் இந்தச் சித்திரத்தில் மாற்றமேதும் வந்துவிடாமலும் பார்த்துக் கொள்கிறார்கள்.

உள்ளூரில் ஏற்கனவே ருசிகண்டுகொண்டிருப்பவர்களைத் தெரிந்து, வெளியிலிருந்து வருகிறவர்கள் நேரடியாக அவர்களிடமே வந்து அவர்களது உதவியோடும், சித்திரத்தை விதவிதமாகப் படம் பிடித்துக் கொள்கிறார்கள். பின்னர் அதை வைத்து வியாபாரத்தை நடத்தினால் உலகம் முழுவதும் பணம், புகழ், பதவிக்கு உத்தரவாதமிருப்பதைக் கண்டுகொண்டுவிட்டார்கள்.

கடந்த ஐந்தாறு மாதங்களில் உலகெங்கும் தமிழ் ஊடகங்களால் கொண்டாடப்பட்டவர்களை மேலோட்டமாகப் பார்த்தாலே, இந்த வியாபாரத்தின் போக்கும், அவர்களது நீலிக்கண்ணீருக்குரிய நமது மக்களின் வாழ்வு அப்படியே கிடப்பதும், நமது வாழ்வுக்கு எந்தவொரு துரும்பையும் எடுத்துப் போட்டுவிடாதபடி அவர்கள் கவனமாக நடந்துகொண்டிருப்பதும் விளங்கும்.

தமிழகத்துப் பெண்கவிஞர் இங்கு வந்து அரச எதிர்ப்புப் படம் எடுத்தார். எப்படி? படம் எடுத்த ஒவ்வொரு நாளும் தான் எங்கு நிற்கிறேன், என்ன படம் பிடிக்கிறேன் என்பதை தனது பேஸ்புக்கில் எழுதியபடியே அந்த “ரகசியப் புரட்சியை” செய்துமுடித்தார். அவர் கொண்டுசென்ற விவரணப்படத்திற்கு உலகெங்கும் நல்ல வியாபாரம்!

பிறகு இலங்கைக் கவிஞர்–தமிழக சினிமா நடிகர்–அத்தோடு நோர்வே குடிமகனுமானவர் வந்தார். இலங்கை அமைச்சர்களிலிருந்து நோர்வே அமைச்சர்கள் வரை எல்லோரையும் தொலைபேசி தொடர்பில் வைத்திருந்தபடியே தனது அரச எதிர்ப்புப் புகழை உலகெங்கிலும் பரப்பிவிட்டுச் சென்றார்.

அவ்வளவு ஏன், பிரிட்டிஷ் பிரதமரே ஒரு பஸ் நிறைய ஊடகக்காரர்களுடன் வந்து, இலங்கைப் புண்ணை இங்கிலாந்துத் தேர்தலுக்கு எப்படிப் பயன்படுத்துவது என்கிற வித்தையைத் திறம்படக் காட்டித் திரும்பினார்.

பிறகு, ஆனந்தவிகடன் பத்திரிகையாளர். சுற்றுலா விசாவில் வந்து, வந்திருக்கும் நாட்டுக்கு எதிராகவே செய்திகளும் படங்களும் சேகரித்துக் கொண்டிருந்தவரை இந்தநாட்டுச் சட்டம் விசாரித்தது. அவ்வளவுதான், சேகுவேரா பொலிவிய மண்ணில் சிறைப்பிடிக்கப்பட்டது போல அப்படியொரு உலகத்தமிழ் ஊடகப்புகழ் அவருக்கு!

இதோ கடைசியாக, கனடியத் தமிழ் வேட்பாளர். இங்கு எதுவும் விசாரிக்கப்படாமலே, நின்ற ஒவ்வொருநாளும் வெறும் ஊகங்களையே கொட்டை எழுத்துச் செய்திகளாகத் தரும் நந்தமிழ்ஊடகத்தாரின் பாக்கியத்தைப் பெற்றார். மனநிறைவோடு தன்நாட்டில் தேர்தலை எதிர்கொள்ளச் சென்றிருக்கிறார்.

இவையெல்லாம் நமது மக்களுக்குத் தந்த/தரப்போகும் லாபம் என்ன? தங்கர் பச்சான் போலவேதான் கேட்கவேண்டியிருக்கிறது... என்னங்க நடக்குது இங்கே?

- ஆசிரியர்.

# ராதிகா சிற்சபேசனின் இனவாதத்தால் வேதனை

## வெளிவிவகார பிரதியமைச்சர் வருத்தம்

(கொழும்பு)

கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபேசன் இலங்கை விஜயம் குறித்து நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். ஆனால் அவர் இனவாதப் போக்கில் செயற்படுவது வேதனையளிக்கின்றது என பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபேசனுக்கு இங்குள்ள தமிழர்களைப் பற்றி எவ்வித அக்கறையோ கவலையோ இல்லை. அவர் வெளிநாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழர்களை திருப்திப்படுத்துவதற்காகவே இங்கு வந்து நடிக்கிறார். இவர் இலங்கை பற்றி ஒரு அறிக்கையை பகிரங்கப்படுத்தினால் அது நிச்சயமாக சர்வதேச அரங்கில் எடுபடாது.

கனடாவில் உள்ள இலங்கைத் தமிழர்களின் வாக்குப் பலத்தின் மூலமே இந்தப் பெண் கனடிய நாடாளுமன்றத் திற்கு தெரிவு செய்யப்பட்டுள் ளார். ஆகவேதான் தமது வாக்காளர்களைத் திருப்தி செய்வதற்காக இவர் சுற்றுலா விசாவில் இலங்கை வந்து இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுகிறார். இலங்கையில் உள்ள அகதி முகாம்களின் ஒழிவு மறைவற்ற செயற்பாடுகள் குறித்து கேள்வி எழுப்பும் இந்த கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் இலங்கை அரசாங்கத்திடம் அதைப்பற்றி கேட்பதற்கு பதில் தமிழ் மக்களை அகதிகளாக்கிய புலிகளிடையே இதற்கான விளக்கத்தை கேட்க வேண்டும்.

ஜனநாயக சுதந்திரம் இலங்கையிலும் கனடாவிலும் கடைப்பிடிக்கப்படுகின்ற போதிலும் ராதிகா சிற்சபேசன் போன்ற கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எங்கள் நாட்டில் ஜனநாயக செயற்பாடுகளை சந்தேகக் கண்ணோடுதான் பார்க்கிறார்கள். இவ்விரு நாடுகளிலும் ஜனநாயக சுதந்திரம் இருக்கின்ற போதிலும் இவ்விரு நாடுகளின் அரசாங்க நிர்வாக அமைப்பில் பாரிய மாற்றங்கள் இருப்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கையை பொறுத்தமட்டில் அரசியல் மற்றும் தேர்தல் நடவடிக்கைகள் ஒழிவு மறைவற்ற முறையில் நடத்தப்படுகிறது. கனடாவில் வாக்காளர் தங்கள் மீது நம்பிக்கை வைக்கக்கூடிய முறையில் அரசியல்வாதிகள் நடந்து கொண்டு மக்களின் வாக்குகளைத் திருடுகிறார்கள். ராதிகா சிற்சபேசன் திறந்த மனதுடன் இந்த விஜயத்தை இலங்கைக்கு மேற்கொள்ளவில்லை. அவர் ஏதோ ஒரு குறிக்கோளை அடிப்படையாக வைத்தே இங்கு வந்து எங்கள் நாட்டின் குறைபாடுகளை கண்டுபிடிப்பதிலேயே ஆர்வம் காட்டுகிறார்.

எவ்வாறாயினும் இவர் இலங்கைக்கெதிராக கூறும் கருத்துக்கள் பக்கச்சார்புடையவை. ஆதலினால் இவை சர்வதேச அரங்கில் செல்லுபடியாகாது என்றார்.

# இளைஞர்களின் அபிவிருத்தியில் 2014 முக்கியமான ஆண்டாகும்

## தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பில் உலக இளைஞர் மாநாடு நடைபெறவுள்ளதால், 2014ஆம் ஆண்டு இலங்கை இளைஞர்கள் அபிவிருத்தியில் முக்கியமானதாக இருக்குமென தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் சட்டத்தரணி லலித் பியும் பெரேரா தெரிவித்துள்ளார்.

இளைஞர்கள் தொடர்பில் இலங்கையினால் மேற்கொள்ளப்படும் வரவேற்கத்தக்க முயற்சிகள் காரணமாக, இலங்கை ஒரு சிறந்த நாடு என்ற சமிக்ஞையினை வெளிப்படுத்துகின்றது.

ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர் இளைஞர் அபிவிருத்தி என்பது சமூக நலன் என்ற மனோபாவத்துடன் பேசப்பட்டது. தேசத்தை கட்டியெழுப்பும் பணிக்கு இணையாக அரசாங்கத்தினால் இந்த மனோபாவத்தை மாற்ற முடியும்.

அபிவிருத்தியின் முக்கியத்துவம் மிக்க பிரிவினராக இளைஞர் உள்ளனர் என்ற மனோநிலை நாடு முழுவதும் வியாபிக்கச் செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக இளைஞர்கள் தொடர்பான நிகழ்ச்சி நிரல் சர்வதேச ரீதியான நற்பெயரை பெற்று குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தையும் அடைந்துள்ளது.

ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ மூன் 2012 இல் வெளியிட்ட உலக இளைஞர் அபிவிருத்தி தொடர்பில் சமர்ப்பித்த பத்திரத்தில் இலங்கை பற்றி 14 தடவைகள் குறிப்பிட்டிருந்தமையானது இலங்கை எவ்வளவு தூரம் முன்னேற்றம் கண்டுள்ளது என்பதைக் காட்டுகிறது.

உட்கட்டமைப்பு மற்றும் இளைஞர் திறன் ஆகியவற்றை பற்றாக்குறை எதுவுமின்றி நாடு கொண்டிருப்பதன் காரணமாக உலக அளவிலான எந்த ஒரு நிகழ்வையும் நடத்த முடியும் என்ற நம்பிக்கை உள்ளது.

சர்வதேச அரங்கில் இளைஞர் தொடர்பில் பேசப்படும் போது இலங்கை பற்றியும் பேசப்படும் நிலை விரைவில் உருவாகும்.

உலக இளைஞர் மாநாட்டினை மே மாதம் 6 ஆம் திகதி தொடக்கம் 9 ஆம் திகதி வரை பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடாத்துவதற்கு ஆர்வத்துடனும் அர்ப்பணிப்புடனும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றது என்றார்.

# முதலீட்டு ஏற்றுமதி வருமானமாக 8.8 பில்லியன் டொலர் எதிர்பார்ப்பு

(கொழும்பு)

முதலீட்டுச்சபையினால் அனுமதிக்கப்பட்ட திட்டங்களினால் 2014ஆம் ஆண்டில் 8.8 பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஏற்றுமதி வருமானமாக எதிர்பார்ப்பதாக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஷமன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

பத்தாயிரம் தொழில்வாய்ப்புக்களை இந்த வருடம் உருவாக்க எதிர்பார்த்துள்ளதாக முதலீட்டுச் சபை தெரிவித்துள்ளது. தற்போது நடைமுறையிலுள்ள திட்டங்கள் மற்றும் வருமானமீட்டக்கூடிய அபிவிருத்தித் திட்டங்கள் என்பனவற்றினூடாக இந்த தொழில் வாய்ப்புகள் வழங்கப்படவுள்ளன.

உல்லாசத்துறை ஹோட்டல்கள், தொழில்நுட்பம், வீதி அபிவிருத்தி, மின்சக்தி உட்பட பல துறைகளில் தொழில்வாய்ப்புகள் காணப்படுகின்றது.

தனியார் துறையிலும் பல தொழில்வாய்ப்புகள் காணப்படுகின்றன. தேவையான தகைமைகள் இன்மையே அந்த தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கு தடையாக உள்ளது. நாட்டில் உள்ள தொழில்வாய்ப்புகளுக்கமைய கல்வி மற்றும் பயிற்சிகளை வழங்குவதற்கான நடவடிக்கை களை ஆரம்பிக்க அரசு தீர்மானித்துள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# வாக்குகளை மட்டும் எதிர்பார்க்கும் வேட்பாளர்கள் வேண்டாம்

## பவ்ரல் அமைப்பு

(கொழும்பு)

தேர்தல்களின் போது, மக்களின் வாக்குகளை மாத்திரம் எதிர்பார்க்கும் வேட்பாளர்களை தெரிவு செய்ய வேண்டாம் என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல், அரசியல் கட்சிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதன் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டி ஆராய்ச்சி இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

மக்களின் நலன் தொடர்பில் அக்கறை கொண்டுள்ளவர்களே வேட்பாளர்களாக தெரிவு செய்யப்பட வேண்டும்.

அதேபோன்று, வேட்பாளர்கள் தெரிவு செய்யப்படுகின்ற முறைமை தொடர்பில் மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும் அத்துடன் வேட்பாளர்களுக்கான ஒழுக்கக்கோவை ஒன்றும் தயாரிக்கப்பட வேண்டும் என்றார்.

# 2014... ஏகாதிபத்திய மேலாதிக்கமும் உலகப் பொருளாதார நெருக்கடியும்

■ சீத்தாராம் யெச்சூரி கட்டுரையிலிருந்து


**அமெரிக்காவால் தூண்டப்பட்ட சிரியா மீதான உள்நாட்டு யுத்தம் லெபனான் போன்ற அண்டை நாடுகளுக்கும் பரவிக் கொண்டிருக்கிறது. அமெரிக்க ஆக்கிரமிப்பின் விளைவாக, இராக்கில் பல்வேறு குழுக்கள் சண்டையிட்டுக்கொள்வதன் மூலம் பெரும்பான்மையான அப்பாவி மக்கள் பலியாகிக் கொண்டிருக்கிறார்கள். அதேபோன்று துனீசியா, லிபியா ஆகிய நாடுகளிலும் கிளர்ச்சிகள்நீடிக்கின்றன. சூடான் இரு நாடுகளாகப் பிரிந்திருக்கிறது. சோமா லியாவில் மிகவும் பயங்கரமானமுறையில் மோதல் தொடர்கிறது... நேபாளத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரமற்றதன்மை, வங்க தேசத்தில், அடிப்படைவாத சக்திகள் உருவாக்கியுள்ள உள்நாட்டுப் பதட்ட நிலைமை, பாகிஸ்தானுக்குள் ஆப்கானிஸ்தானுடைய தாலிபான் பயங்கரவாதம் பொங்கிவழிந்துகொண்டிருப்பது, மாலத் தீவில் உள்ள அரசியல் ஸ்திரமற்ற தன்மை, இலங்கையில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையே தொடரும் இனப் பதட்டநிலைமை - இவ்வாறு அமெரிக்க ஏகாதிபத்தியம் தன்னுடைய மேலாதிக்கத்தை விரிவாக்கிடுவதற்காக அனைத்து நாடுகளிலும் தலையிட்டுக் கொண்டிருப்பது தொடர்கிறது.**

முதலாளித்துவப் பொருளாதாரம், 2008இல் உலகப் பொருளாதாரத்தைப் பீடித்த நெருக்கடியிலிருந்து மீண்டுவிட பகீரதப் பிரயத்தனம் செய்தபோதிலும்,அது தன்னுடைய நெருக்கடியிலிருந்துமீள முடியாமல் 2013இலும்தொடர்ந்து தள்ளாடிக் கொண்டும் தடுமாறிக் கொண்டும்தான் இருந்தது.

உலகப் பொருளாதார நெருக்கடி 2013இல்ஐந்தாவது கட்டத்திற்குள் நுழைந்திருக்கிறது. இந்நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக அது மேற்கொண்ட ஒவ்வொரு நடவடிக்கையும் புதிய நெருக்கடிக்கான விதைகளையேவிதைத்துள்ளன. எவ்விதக் கட்டுப்பாடுமில்லாது இருந்து வந்த ஏகாதிபத்திய உலகமயம் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு உலகில் சமத்துவமின்மையை உருவாக்கியதாலும், உலகில் பெரும்பான்மையான மக்களின் வாங்கும் சக்தியையும் வீழ்ச்சியுற வைத்ததாலும், பொருளாதார வளர்ச்சியில் நெருக்கடியை ஏற்படுத்தியது.

இதிலிருந்து எப்படியாவது மீள வேண்டும் என்பதற்காக அது "மலிவான" அல்லது "எளிய" (`cheap' or `sub-prime') தவணைகளில் கடன்களை அளித்தது. இது உலகில் உற்பத்தி வளர்ச்சிக்குப் பாய்ச்சலை ஏற்படுத்தும் என்றும் அதன் மூலம் மக்களின் ஒட்டுமொத்த தேவைகளையும் தாங்கிப் பிடித்திடலாம் என்றும் முதலாளித்துவம் நம்பியது. ஆனால் கடன் வாங்கியவர்களில் பெரும்பாலானவர்கள் கடனைத் திருப்பிக் கட்ட முடியாத நிலை ஏற்பட்டதால், 2008 பொருளாதார நெருக்கடி மேலும் அதிகரித்து பல பன்னாட்டு நிதிநிறுவனங்கள் திவாலாகும் நிலை ஏற்பட்டன.

இந்நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக முதலாளித்துவ நாடுகளில் ஆட்சி புரிந்த அரசுகள் முதலாளிகளுக்கு முழுமையான அளவில் நிதியை *பாரி வழங்கின. அவ்வாறு செய்ததன் மூலம் கார்ப்பரேட்டுகளின் திவால் நிலைமைகள் அரசின் திவால் நிலைமைகளாக மாறின. இதனை அடுத்து, அரசாங்கங்கள் தங்கள் திவால்தன்மையைச் சரிக்கட்டு வதற்காக, தாங்கள்சமூகநலத்திட்டங்களுக்காக ஒதுக்கி வைத்த தொகைகளையும், தொழிலாளர்களின் ஊதியங்களையும் வெட்டிக் குறைத்தன, புதிதாக எவரையும் வேலைக்கு எடுக்கவில்லை, ஊழியர்களின் வேலை நேரங்களையும் அதிகரித்தன, ஓய்வூதியம் மற்றும் இதர உதவித் திட்டங்களையும் தயவுதாட்சண்யமின்றிவெட்டியுள்ளன. இவ்வாறு இவை மேற்கொண்ட நடவடிக்கைகள் உலகப் பொருளாதார நெருக்கடியில் புதிய கட்டத்தை எட்டியுள்ளது. அதாவது இவற்றின் விளைவாக மக்களின் வாங்கும் சக்தி மிகவும் குறுகியதால், அது பொருளாதார நிலைமை மேலும் சுருங்குவதற்கு இட்டுச் சென்றுள்ளன.



பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக மக்கள் உலகம் முழுதும் சக்தி மிக்க போராட்டங்களை நடத்தினார்கள். குறிப்பாக, ஐரோப்பிய நாட்டு மக்கள், அதிலும் குறிப்பாக கிரீஸ், போர்த்துக்கல், ஸ்பெயின், இத்தாலி நாட்டு மக்கள் வீரம் செறிந்த போராட்டங்கள் பலவற்றை நடத்தியதைப் பார்த்தோம். மக்கள் மத்தியில் இவ்வாறு கோபாவேசம் மிகவும் ஆக்ரோஷமாக வளர்ந்தோங்கி இருந்ததன் காரணமாக,

அந்நாடுகளில் நடைபெற்ற தேர்தல்களில் ஆளும் அரசாங்கங்கள் பல மண்ணைக் கவ்வின.

இவ்வாறு மக்கள் மத்தியில் கோபம் இருந்த போதிலும், உலகம் முழுதும் அரசியலில் வலதுசாரிப்பக்கம் சாய்மானம் நிகழ்ந்திருப்பதும் நடந்திருக்கிறது. எனினும், அதே சமயத்தில், ஜப்பான், போர்த்துக்கல், செக் குடியரசு, சிலி போன்ற நாடுகளில் நடைபெற்ற தேர்தல்களில் கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆதாயம் அடைந்துள்ளதையும் பார்க்க முடிகிறது.

ஏகாதிபத்தியம் தனக்கேற்பட்ட நெருக்கடியின் சுமைகளை மூன்றாம் உலக நாடுகளின் மீது ஏற்ற மேற்கொண்ட முயற்சிகளுக்கு எதிராக அந்நாடுகளில் நடைபெற்ற போராட்டங்களும் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. குறிப்பாக இலத்தீன் அமெரிக்க நாடுகளில் நடைபெற்ற போராட்டங்களைக் கூறிடலாம். இந்நாடுகளில் அமைந்துள்ள முற்போக்கான ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் நவீன தாராளமய எதிர்ப்பு அரசாங்கங்கள், இந்தியா போன்ற நவீன தாராளமய பொருளாதார சீர்திருத்தங்களை எவ்விதக் கூச்சநாச்சமுமின்றித் தழுவிக் கொண்ட மூன்றாம் உலக நாடுகளைப் போல் அல்லாமல், மக்களுக்கு நிவாரணம் அளித்திட மேற்கொள்ளும் முயற்சிகள் தொடர்கின்றன.

அமெரிக்க ஏகாதிபத்தியமானது வெனிசுலாவில் சாவேஸ் மரணத்திற்குப் பின் அத்துணைக்கண்டத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பு அணுகுமுறை கைவிடப்படலாம் என்று கனவு கண்டு கொண்டிருந்தது.அதிலும் குறிப்பாக சாவேஸுக்குப் பின் பொறுப்புக்கு வந்த மதுரோ மார்ச்சில் நடைபெற்ற தேர்தலில் மிகக் குறுகிய வித்தியாசத்தில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து அமெரிக்க ஏகாதிபத்தியம் இதில் மிக நம்பிக்கையுடன் இருந்தது. ஆயினும், டிசம்பரில் நடைபெற்ற நகராட்சிகளுக்கான தேர்தல்களில் சாவேஸின் சோசலிஸ்ட் கட்சி மகத்தான வெற்றி பெற்று, மக்கள் தொடர்ந்து ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசியல் மனோபாவத்துடனேயே இருப்பதை உறுதிப்படுத்தினார்கள்.

முதலாளித்துவத்திற்கு மாற்று நவீன தாராளமயம் அல்ல, மாறாக சோசலிசம்தான் என்பதை உலகுக்குப் பறைசாற்றும் வண்ணம், இலத்தீன் அமெரிக்க நாடுகளில் நடைபெற்று வரும் முற்போக்கான நடவடிக்கைகள் தொடர்கின்றன. இவ்வாறு,நவீன தாராளமய ஏகாதிபத்தியம் விளைவித்துள்ள துன்ப துயரங்களுக்கு எதிராக போராடிக் கொண்டிருக்கும் அனைவருக்கும் உத்வேகத்தை அளிக்கும் மாமருந்தாக, இலத்தீன் அமெரிக்க நாடுகளின் முற்போக்கு நடவடிக்கைகளில் 2014ஆம் ஆண்டு திகழும் என்பதும் திண்ணம்.

இத்தகைய சூழ்நிலைகளில், அமெரிக்க ஏகாதிபத்தியம், தன்னுடைய உலகளாவிய மேலாதிக்கத்தை ஒருமுனைப்படுத்துவதற்காக, உலகைத் தன்னுடைய ஒருதுருவ உலகாக உருவாக்கிட மேற்கொண்டிடும் முயற்சிகள், அதற்கு அவ்வளவு எளிதானவைகளாக் இல்லாமல் மிகவும் கடினமாகிவிட்டன. அது, இந்தத் தடவை சிரியாவிற்கு எதிராக மற்றொரு ஏகாதிபத்திய ராணுவ ஆக்கிரமிப்பைக் கட்டவிழ்த்து விட முயற்சிகள் மேற்கொண்ட போதிலும், இதில் ஐ.நா.வை ஈடுபடுத்த அமெரிக்க மேற்கொண்ட முயற்சிகளை ரஷ்யாவும் சீனாவும் தங்கள் வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி வெற்றிகரமாகத் தகர்த்துவிட்டன. இராக்கில் ராணுவ ஆக்கிரமிப்பை மேற்கொண்டதுபோலவே ஈரானிலும் மேற்கொள்ள அமெரிக்காவிற்கு நமைச்சல் எடுத்தபோதிலும், அதனால் அதில் வெற்றிபெற முடியவில்லை. அமெரிக்க ஏகாதிப்பத்தியம் இப்பிராந்தியத்தில் பதட்டம் இல்லாதவாறு அமையக்கூடிய விதத்தில், ஈரானுடன் ஒருவிதமான ஒப்பந்தத்தை செய்துகொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும், அமெரிக்க ஏகாதிபத்தியம், மேற்கு ஆசியா மற்றும் வட ஆபிரிக்காவில் உள்ள சுதந்திர நாடுகளின் உள்விவகாரங்களில் தன்னுடைய கிரிமினல்தனமான தலையீடுகளைத் தொடர்கிறது. "அரபு வசந்தம்" போன்று மெய்யான ஜனநாயகங்களுக்காக இந்நாடுகளில் இயக்கங்கள் நடைபெற்றபோதிலும், இந்நாடுகள் பல நெருக்கடிக்குள் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்றன. எகிப்தில் ஜனநாயகரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம், முஸ்லீம் பிரதர்ஹுட் கட்சியின் செல்வாக்கின் கீழ் அடிப்படைவாதத்தை மேம்படுத்த முயன்றதால், அதற்கு எதிராக ராணுவம் தலையிட வேண்டியிருந்தது.

அமெரிக்காவால் தூண்டப்பட்ட சிரியா மீதான உள்நாட்டு யுத்தம் லெபனான் போன்ற அண்டை நாடுகளுக்கும் பரவிக் கொண்டிருக்கிறது. அமெரிக்க ஆக்கிரமிப்பின் விளைவாக, இராக்கில் பல்வேறு குழுக்கள் சண்டையிட்டுக் கொள் வதன் மூலம் பெரும்பான்மையான அப்பாவி மக்கள் பலியாகிக் கொண்டிருக்கிறார்கள். அதேபோன்று துனீசியா, லிபியா ஆகிய நாடுகளிலும் கிளர்ச்சிகள் நீடிக்கின்றன. சூடான் இரு நாடுகளாகப் பிரிந்திருக்கிறது. சோமாலியாவில் மிகவும் பயங்கரமான முறையில் மோதல் தொடர்கிறது. இவ்வாறு அமெரிக்க ஏகாதிபத்தியம் தன்னுடைய மேலாதிக்கத்தை விரிவாக்கிடுவதற்காக அனைத்து நாடுகளிலும் தலையிட்டுக் கொண்டிருப்பது தொடர்கிறது.

அமெரிக்காவின் இத்தகைய மேலாதிக்க முயற்சிகளை புவிவெப்பமயமாதல் மற்றும் உலக வர்த்தக அமைப்பின்கீழ் விவசாயம் தொடர்பான ஒப்பந்தம் ஆகியவை குறித்த சர்வதேச பேச்சுவார்த்தைகளின்போதும் பார்க்க முடிகிறது. சமீபத்தில் முதலாவது நிகழ்ச்சிநிரல் தொடர்பாக வார்சாவிலும், இரண்டாவது நிகழ்ச்சிநிரல் தொடர்பாக பாலியிலும் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது, வளர்ந்த (முதலாளித்துவ) நாடுகள் பொருளாதாரத்தில் மீட்சி அடைவதற்கு சாதகமான நிலைமைகளை உருவாக்கக்கூடிய விதத்தில் வளர்முக நாடுகளை மிரட்டிப் பணியவைத்திடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதைப் பார்த்தோம்.

ஏகாதிபத்தியம் தன்னுடைய நலன்களை முன்னெடுத்துச் செல்வதற்காக, இந்தியாவைச் சுற்றிலும் உள்ள அண்டை நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதற்கு மிகவும் ஆர்வம் காட்டிக் கொண்டிருக்கிறது. சமீபத்திய தேர்தல்களுக்குப்பின் நேபாளத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரமற்றதன்மை, வங்க தேசத்தில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள சமயத்தில், அடிப்படைவாத சக்திகள் உருவாக்கியுள்ள உள்நாட்டுப் பதட்ட நிலைமை, இந்தியாவிற்கு உண்மையான ஆபத்தாக இருக்கக்கூடிய விதத்தில் பாகிஸ்தானுக்குள் ஆப்கானிஸ்தானுடைய தாலிபான் பயங்கரவாதம் பொங்கிவழிந்துகொண்டிருப்பது, மாலத் தீவில் உள்ள அரசியல் ஸ்திரமற்றதன்மை, இலங்கையில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையே தொடரும் இனப் பதட்டநிலைமை - இவை அனைத்துமே அமெரிக்க ஏகாதிபத்தியம் தன்னுடைய மேலாதிக்க முயற்சிகளை பிரயோகிப்பதற்கு வளமான சூழ்நிலைகளாகும்.

2013ஆம் ஆண்டு, உலகம் முழுதும் உள்ள மக்களின் விடுதலைக்காகவும், மனிதகுலத்தின் பொன்னான மார்க்கத்துக்காகவும் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட மாபெரும் மனிதரான நெல்சன் மாண்டெலாவின் மரணத்துடன் முடிந்திருக்கிறது. இன ஒடுக்கல் முறையிலிருந்து விடுதலை பெறுவதற்காகத் தென் ஆபிரிக்க மக்கள் நடத்திய போராட்டத்திற்குத் தலைமை தாங்கியபோது அவர் விடுத்த எழுச்சிமிகு அறைகூவல்: "உலகம் முழுதும் உள்ள மனிதகுலம் முழுமையாக அடிமைத்தளையிலிருந்து விடுதலை பெறும் வரை - போராட்டம் தொடரும்."

முற்போக்கு உலகத்துடன் நாமும் இணைந்து நின்று அவருக்கு அஞ்சலி செலுத்தியபோது, அவர் விடுத்துச்சென்றுள்ள அறைகூவலை முன்னெடுத்துச் செல்வதற்கான நம் தீர்மானத்தை இரட்டிப்பாக்கிக் கொள்வோம், 2014இல் மக்கள் போராட்டங்களை வலுப்படுத்திடுவோம்.

# பொருளாதாரம் தொடர்பான மத்திய வங்கியின் கூற்று உண்மையா?
## கேட்கிறார் பேராசிரியர் கணேசமூர்த்தி

இலங்கை பொருளாதாரம் குறித்து மத்திய வங்கி கூறுவதெல்லாம் உண்மைதானா? என கொழும்பு பல்கலைக்கழக பொருளாதாரத் துறைபேராசிரியா எம்.கணேசமூர்த்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கையில் பொருளாதாரம் வளர்ச்சியடைந்து வருகிறது, பணவீக்கம் குறைந்து வருகிறது என்று மத்திய வங்கி கூறுகின்றது.

நாட்டின் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், தாங்கள் சர்வதேச நாணய நிதியத்தின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து வட்டி வீதங்களை அதிகரிக்கவில்லை என்றும், பணவீக்கம் கணிசமான அளவுக்கு குறைந்துள்ளது என்றும் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

ஆனால் சந்தைக்குச் சென்று பொருட்களை வாங்கும்போது பார்த்தால் அரசு கூறும் தகவல்கள் எந்த அளவுக்கு யதார்த்தமானது என்பது தெரியவரும்.


எனினும் கடந்த சில மாதங்களில் மரக்கறி போன்ற சில பொருட்களின் விலை குறைந்துள்ளது என்றும், அதை மட்டும் வைத்துக் கொண்டு பணவீக்கம் குறைந்துவிட்டதாகக் கருத முடியாது எனவும் அவர் கூறுகிறார்.

தனது தரப்பை வலுப்படுத்த அரசு வெளியிட்டுள்ள தரவுகளில் பல குளறுபடிகள் இருக்கின்றன. இதற்கு முன்பு கூட பலமுறை இப்படியாக சொல்லப்பட்ட வளர்ச்சி வீதங்களை பின்னர் அரசு குறைத்து அறிக்கைகளை வெளியிட்டது. இலங்கையின் பொருளாதாரம் மிகவும் உறுதியான நிலையில் உள்ளது என்று கூறுவதெல்லாம் மிகைப்படுத்தப்பட்ட ஒன்று ஆகும்.

நாட்டினுடைய தலையாய நிதி நிறுவனமான மத்திய வங்கி கணக்கிடும் அளவுகளையே அனைவரும் சட்டபூர்வமானது என ஏற்றுக்கொள்ளும் வேளையில், அதில் எந்த அளவுக்கு உண்மைத் தன்மை உள்ளது என்பது மிகப்பெரிய கேள்விக்குறியாகும்.

நிதி நெருக்கடிகள் ஏற்படும் போது சர்வதேச நாணய நிதியத்திடம் செல்ல வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# புள்ளிவிபரத் தகவல்களில் திருத்தம் செய்யப்படவில்லை



புள்ளி விபரத் தகவல்கள் திருத்தி அமைக்கப்படவில்லை என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கி மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களம் ஆகியன வெளியிடும் தகவல்கள் பிழையானவை எனவும் திரிபுபடுத்தப்பட்டவை எனவும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

எனினும், இந்தக் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்திற்குத் தேவையான வகையில் புள்ளி விபரத் தகவல்கள் மாற்றியமைக்கப்பட்டன என்ற குற்றச்சாட்டு ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல.

சர்வதேச நிறுவனங்களினால் இந்த புள்ளி விபரத் தகவல்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

திணைக்கள அதிகாரி ஒருவரினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைமீறல் மனுவினை மையமாகக் கொண்டே குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றன.

எனினும், இந்தக் குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையும் கிடையாது என்றார்.

# இலங்கையரை அழைத்துவர ஏற்பாடு

தென்சூடானில் மோதல்களில் சிக்கியுள்ள இலங்கையர்களை மீள நாட்டிற்கு அழைத்துவரத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

அந்த நாட்டில் மோதல்களில் சிக்கியுள்ள 12 இலங்கையர்கள் நாட்டிற்கு அழைத்துவரப்படவுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் ஊடகப் பேச்சாளரும், பிரதி பொது முகாமையாளருமான மங்கல ரந்தெனிய தெரிவித்துள்ளார்.

இந்த இலங்கையர்கள் நாடு திரும்புவதற்காக, அவர்களுக்குரிய விமானச் சீட்டுகளை அனுப்பிவைத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# மதங்களை நிர்ப்பந்திப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது

## சிறிலங்கா விழுக்திபலவேகய செயலர் தெரிவிப்பு



நான் ஒரு தூயபௌத்தன். பௌத்த மதக்கோட்பாடுகளையும், புத்த பெருமானுடைய போதனைகளையும் முழுமையாக கடைப்பிடித்து வருபவன். பௌத்த மதக்கோட்பாடுகளுக்கமைய சகல இனமக்களையும் ஒன்றாகவே மதிக்கின்றேன். சகல மதங்களும் நல்லனவற்றையே போதிக்கின்றன. சரியான விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளாமல் ஒரு மதத்தை நிந்திப்பதை நான் முழுமையாக எதிர்க்கின்றேன்.

இவ்வாறு மகியங்கனை ரொட்டலிவள விகாரையின் தலைமைப் பிக்குவும், மகியங்கனை உள்ளூராட்சி சபையின் உறுப்பினரும், சிறிலங்கா விமுக்தி பலவேகய அமைப்பின் பிரதம காரியதரிசியுமான வட்டரக விஜித ஹிமி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

2009ஆம் ஆண்டு வடக்குக் கிழக்கு யுத்தம் முடிவுக்கு வந்ததையடுத்து இலங்கை முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் இனவாத மதவாதப் பிரசாரங்கள் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில் அண்மைக் காலமாக முஸ்லிம்களின் வணக்கத்தலங்களை மூடிவிடுவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அது மட்டுமல்ல முஸ்லிம்கள் காலாகாலமாக வாழ்ந்து வரும் பகுதிகளில் இருந்து அவர்களை வெளியேற்றுவதற்கான திட்டமிட்ட செயற்பாடுகளும் நடந்த வண்ணமேயுள்ளன.

ஒவ்வொரு உண்மையான பௌத்தனையும் தலை குனியச் செய்யும் ஒரு விடயமாகவே இதனை நான் காண்கின்றேன். பௌத்த முஸ்லிம் மக்களிடையே காணப்படும் நல்லுறவை சீர்குலைக்க 2009ஆம் ஆண்டின் பின்னர் தோன்றிய சில அமைப்புக்களின் இச் செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிக்கின்றேன். இது பௌத்த மதக்கோட்பாடுகளுக்கு முரணானது.

புத்தபெருமான் உலகில் வாழும் அனைத்து மக்களையும் ஒன்றாகவே மதித்தார். எந்தவொரு மனிதனுக்கோ, மதத்துக்கோ, வேறுபாடு காட்டக்கூடாது என்றே போதித்தார். நீங்கள் அமர்ந்து கொண்டிருக்கும் போதும் சரியே, நின்று கொண்டிருக்கும் போதும் சரியே, படுத்திருக்கும் போதும் சரியே, நடமாடும் போதும் சரியே சகலருக்கும் அனைத்து விடயங்களும் நலமாகவே அமைய வேண்டுமென்றே நினைத்துக் கொள்ளுங்கள். அனைவரினதும் வறுமை ஒழியவேண்டும், பொருளாதாரம் செழிக்க வேண்டும் இதனூடாக அமைதியும், சாந்தியும், சமாதானமும் நிலைக்க வேண்டும் என்று தான் பௌத்தம் போதிக்கின்றது.

இன்னொரு மதத்தாரின் மதக் கலாசாரங் களையும் மதக்கிரியைகளையும் தடைசெய்ய வேண்டுமெனவோ மதஸ்தானங்களை மூடவேண்டும் தாக்க வேண்டும் எனவோ எந்தவொரு இடத்திலும் பிரஸ்தாபித்ததில்லை. இவ்வாறாக அந்த அமைப்புகள் மேற்கொள்வது பௌத்த மதத்தையே இழிவுபடுததும் ஒரு செயற்பாடாகும். ஒரு தூய பௌத்தன் இதுபோன்ற செயல்களுக்கு என்றும் துணை போகமாட்டான் என்றார்.

# ஈரானிடமிருந்து எரிபொருள் இறக்குமதி செய்வதற்கு தடை

(கொழும்பு)

ஈரானிடமிருந்து எரிபொருள் இறக்குமதி செய்ய முடியாது என இலங்கை அரசாங்கத்திற்கு அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஈரானிற்கு எதிராக அமெரிக்கா தடைகளை விதித்துள்ளது.

எவ்வாறெனினும், ஈரானிடமிருந்து மசகு எண்ணெய் இறக்குமதி செய்வதற்கு இலங்கை உள்ளிட்ட சில நாடுகளுக்கு சலுகை வழங்கியிருந்தது.

எனினும், ஈரானிடமிருந்து மசகு எண்ணெய் இறக்குமதி செய்யக்கூடாது என அமெரிக்கா இலங்கைக்கு மீளவும் அறிவுறுத்தியுள்ளதாக பெற்றோலிய வள அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மசகு எண்ணெய் இறக்குமதி தொடர்பில் அமெரிக்காவுடன் இலங்கை பல சுற்றுப்பேச்சு வார்த்தைகளை நடாத்தியுள்ளது.

ஈரானுக்கு எதிரான பொருளாதாரத் தடைகளை தளர்த்துவதற்கு உலகத் தலைவர்கள் அண்மையில் இணக்கம் வெளியிட்டிருந்தனர்.

எனினும், மசகு எண்ணெய் ஏற்றுமதி செய்ய ஈரானுக்கு இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை.

ஈரானிய மசகு எண்ணெயை சுத்திகரிக்கும் நோக்கிலேயே சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டதாகவும், தற்போது ஈரானிடமிருந்து மசகு எண்ணெய் இறக்குமதி செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளமை வருத்தமளிப்பதாகவும் பெற்றோலிய வள அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

மேலும் ஆறுமாதங்களுக்கு மசகு எண்ணெய் இறக்குமதி செய்ய இலங்கைக்கு கடந்த நவம்பர் மாதம் அமெரிக்கா சலுகை அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டு துப்பாக்கிகளுடன் பெண்ணொருவர் கைது

(கொழும்பு)

கொஸ்வத்த - கிரிமெட்டியான பகுதியில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகள் மற்றும் அதற்கு பயன்படுத்தப்படும் ரவைகளுடன் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட 37 வயதான பெண் மூன்று பிள்ளைகளின் தாய் என்பதுடன், அவரது கணவர் இத்தாலியில் பணிபுரிகிறார் எனத் தெரியவந்துள்ளது.

ஸ்பெயினில் தயாரிக்கப்பட்ட 8 மி மீ ரக துப்பாக்கி, வாயு துப்பாக்கி நீருக்குள் மீன்களைக் கொல்லும் இத்தாலி தயாரிப்பு துப்பாக்கி, 7.65மி மீ ரவைகள் 12, 12, வாயு துப்பாக்கிக்கு பயனபடும் 12 ரவைகள் போன்றவை மீட்கப்பட்டுள்ளன.

துப்பாக்கிகள் மற்றும் ரவைகள் வீட்டுத் தரையில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட பெண்ணின் கணவரே இத்தாலியில் இருந்து சில துப்பாக்கிகளை கொண்டு வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# பிள்ளைகளின் கல்வி அழுத்தத்தை பெற்றோரால் தாங்க முடியவில்லை



நாட்டின் நிலைமை குறித்து நாம் அனைவரும் அறிவோம். பிள்ளைகளின் கல்வி அழுத்தத்தை பெற்றோர்களினால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அரசியல்வாதிகளுக்கு விரும்பிய நபர்களை, பிரபல்ய பாடசாலைகளில் அனுமதிப்பதற்காகவே, 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை இரத்துச் செய்யப்படுகின்றது என ஜனநாயக கட்சியின் கொலன்னாவ தொகுதி அமைப்பாளர் சுசில் கிந்தேல்பிட்டிய தெரிவித்தார்.

கொலன்னாவ பகுதியிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு சுசில் கிந்தேல்பிட்டி நேற்று முன்தினம் அப்பியாசக் கொப்பிகளை பகிர்ந்தளித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்

கல்விக்காக 6 வீதத்தை ஒதுக்குமாறு நாட்டிலுள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஆசிரியர் சங்கங்களின் ஆசிரியர்கள் என அனைவரும் கோரிக்கை விடுக்கின்றனர். 5ஆம் தர புலமை பரிசில் பரீட்சையை இல்லாது செய்ய முயற்சிக்கின்றனர். இந்தப் பரீட்சையை இல்லாது செய்து, நாடு பூராகவும் பிரபல்ய பாடசாலைகள் பலவற்றை நிறுவநடவடிக்கை எடுத்துள்ளனர். இந்தப்பரீட்சையை இல்லாது செய்து, அரசியல்வாதிகளுக்கு தேவையானவர்களை பிரபல்ய பாடசாலைகளுக்கு உள்வாங்க நடவடிக்கை எடுக்கின்றனர் என்றார்.

# வைத்தியசாலை நலன்புரிச்சங்கத்தை இயங்க வைக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் பிரதேச வைத்தியசாலையின் நோயாளர் நலன புரிச்சங்கம் செயற்படாமல் இருப்பதால் இவ் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வைத்தியசாலையில் பெருமளவான நோயாளர்கள் வருகை தருகின்ற நிலையில் இச்சங்கம் பல மாதங்களாக செயற்படாமல் உள்ளதால் வைத்தியசாலையின் அபிவிருத்திப் பணிகளும் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

தென்மராட்சி பிரதேச் செயலர் பிரிவிலுள்ள 15இற்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 251 பேர் இவ்வைத்தியசாலையை பயன்படுத்துகின்றனர்.

இதைவிட கிளாலி, எழுதுமட்டுவாள், முகமாலை போன்ற பிரதேசங்களிலிருந்தும் அதிகளவான மக்கள் சிகிச்சைக்காக இவ்வைத்தியசாலைக்கு வருகை தருகின்றனர்.

இந்நிலையில் சிகிச்சை பெறும் நோயாளர்களின் நன்மைகருதி செயற்படாதுள்ள நோயாளர் நலன்புரிச் சங்கத்தை இயங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## நிலையம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி சங்கானை வீதியில் சிகரம் கிட்ஸ் வேல்ட் சிறுவர்களுக்கான பொருட்கள் விற்பனை நிலையம் ஒன்று அண்மையில் திறந்துவைக்கப் பட்டுள்ளது.

இங்கு குழந்தைகளுக்குத் தேவையான ஆடைக்ள் மற்றும் விளையாட்டுச் சாதனப் பொருட்கள், பரிசுப் பொருட்கள் மற்றும் கர்ப்பிணித்தாய்மார்களுக்கான பொருட்கள் என்பன விற்பனை செய்யப் படுகிறது. (85)

## நீர்வேலி பிரதேசத்தில் திருட்டுக்கள் அதிகரிப்பு

(அச்சுவேலி)

நீர்வேலி கரந்தன் பிரதேசத்தில் அண்மைக்காலமாக கால்நடைகள் திருட்டுப் போவதால் கால்நடைவளர்ப்பில் ஈடுபடுவோர் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இப்பிரதேசத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் மேய்ச்சலுக்காக கட்டப்பட்ட கன்றுத் தாச்சி மாடு ஒன்று திருட்டுப்போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதைவிட வெங்காயம் போன்றனவும் திருடர்களால் சாதுரியமான முறையில் திருடிச் செல்லப்படுவதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். தொடர்ச்சியாக இப்பிரதேசத்தில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவதால் தாம் என்ன செய்வதென்று தெரியாது பயப்பீதியுடன் வாழ்வதாக தெரிவிக்கின்றனர். (85)

# பலாலி சோளன்பொத்தி யாழ்.நகரில் விற்பனை

(யாழ்ப்பாணம்)

பலாலி சோளன் பொத்தி, தீவுப்பகுதி பனங்கிழங்கு என்பன யாழ்.நகர சந்தைகளில் அமோகமாக விற்பனையாகி வருகின்றது.

பலாலிப்பகுதியில் படையினரினால் உற்பத்தி செய்யப்பட்ட சோளன் பொத்திகள் அங்கிருந்து வியாபாரிகளினால் கொள்வனவு செய்யப்பட்டு யாழ்.நகரின் பிரதான சந்திகள், சந்தைகள் முதலியவற்றில் வைத்து அவித்தும் அவிக்காத நிலையிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இவ்வாறு விற்பனை செய்யப்படும் சோளன் பொத்தி ஒன்று அவித்த நிலையில் 25 ரூபாவுக்கும் அவிக்காத நிலையில் 100 ரூபாவிற்கு ஆறு வரையான சோளன் பொத்திகளும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதேவேளை தீவுப் பகுதிகளில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட பனங்கிழங்குகளும் இவ்வாறு விற்பனையாகி வருகின்றன. பதினைந்து கிழங்கு நூறு ரூபாவிற்கு விற்பனைசெய்யப்படுகிறது.

யாழ்.நகரிற்கு வருகின்ற சுற்றுலாப்பயணிகள் உட்படப் பலரும் இவற்றைக் கொள்வனவு செய்து வருகின்றனர். (பா)



நெடுங்கேணி தேவாலயத்தில் புது வருடப் பிறப்பை முன்னிட்டு கடந்த புதன்கிழமை அதிகாலை பூசைகள் இடம் பெறுவதைக் காணலாம். (40)

## புதிய நிர்வாகத்தெரிவு

(கோப்பாய்)

நீர்வேலி வடக்கு முதியோர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய உத்தியோகத்தர் தெரிவும் நீர்வேலி வடக்கு பொது நோக்கு மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் சு.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. கீழ்வருவோர் புதிய உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக மீண்டும் சு.சுப்பிரமணியமும், உபதலைவராக யோ.ஞானஅமிர்தமும், செயலாளராக க.நாகரத்தினமும், உபசெயலாளராக சி.லோகநாதனும், செயற்குழு உறுப்பினர்களாக ச.குணவதி, நா.தங்கபூபதி, க.பத்மநாதன், இ.இராஜேஸ்வரி, சி.மதியாபரணம் ஆகியோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். (08)


# உங்களின் தொழில் தெரிவுக்கு வழிகாட்டும் ஜோதிடம்

ஜோதிர் வித்யாரத்னா வி.ஏ.சிவராசா

## பிறந்த திகதிகள் 02,11,20,29

கற்பனா சக்தி கொண்டதொழில்களில் ஈடுபட்டு பிரகாசமடையலாம். பத்திரிகைத் தொழில், சட்டத்தரணி, அரசியல் கட்சிகளில் ஈடுபட்டு நடத்தவேண்டிய தொழில்கள், விவசாய முயற்சிகள், மக்களின் மனதை கொள்ளை கொள்ளும் புடவைகள், ஆபரணங்கள், விளையாட்டுப் பொருட்கள், பானவகைகள், போட்டோக் கலை, மதம், கடவுள், ஆராய்ச்சிகள், நிறம் பூசுதல், துணிதைத்தல், துணிகள்வெளுத்தல், பாற்பொருட்கள் உற்பத்தி செய்தல், தானியங்கள், பழங்கள், காய்கறிகள், முதலியன உற்பத்தி செய்தல், வாசனைத்திரவியங்கள், காகிதம், புத்தகங்கள், எழுதும் சாதனங்களாலும் பொருளீட்டலாம்.

(தொடரும்)


# கடலாமை பிடித்த இருவருக்கு பிணை

சட்டவிரோதமாக கடலாமை பிடித்த இருவரை ஒரு இலட்சம் ரூபா சரீரப்பிணையில் செல்வதற்கு மல்லாகம் நீதிமன்ற நீதவான் அனுமதியளித்துள்ளார். அத்துடன், இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட கடலாமைகளை கடலினுள் விடுமாறும் பொலிஸாருக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மல்லாகம் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் சந்தேக நபர்கள் இருவரையும் கடந்த புதன்கிழமை ஆஜர்படுத்தியபோதே, நீதவான் மேற்படி உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளார்.

மாதகல் கடற்கரையில் 02 கடலாமைகளை வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இவர்கள் இருவரையும் கடந்த செவ்வாய்க்கிழமை இளவாலைப் பொலிஸார் கைதுசெய்ததுடன், இவர்களிடமிருந்து 3.5 அடி மற்றும் 2.5 அடி நீளமுள்ள 02 கடலாமைகளையும் கைப்பற்றினர். மேலும், இந்த வழக்கை எதிர்வரும் 22ஆம் திகதிக்கு நீதவான் ஒத்திவைத்துள்ளார்.

# ஆளுநர் சபைதெரிவு

(கோப்பாய்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கொழும்பு தேசியதலைமையகத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் ஆளுநர் சபைக்கான தேர்தலும் கடந்த ஞாயிற்றுக் கிழமை கொழும்பில் நடைபெற்றது.

ஆளுநர் சபைத் தேர்தலில் போட்டியிட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். மாவட்டக்கிளையின் தலைவர் கு.பாலகிருஷ்ணன் தெரிவாகியுள்ளார்.

இத்தேர்தலில் இலங்கையிலுள்ள ஒவ்வொரு மாவட்ட செஞ்சிலுவைச் சங்க கிளைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பிரதி நிதிகள் கலந்து கொண்டனர். இம் முறை இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ்.மாவட்டக்கிளையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (08)

## முரசின் இன்றைய பலன்

(04.01.2014 சனிக்கிழமை)



விஜய வருஷம் மார்கழி மாதம் 20 ஆம் திகதி.
திருவோண நட்சத்திரம் காலை 06.56 வரை. பின் அவிட்டம்.
சதுர்த்தி விரம். மரணயோகம்/திருதியை.
இராகுகாலம் 09.31 - 11.01 வரை. சுபநேரம் 03.31 - 05.01 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | செய்கின்ற தொழிலில் எதையும் சமாளிக்கக் கூடிய பலமும் புத்திக் கூர்மையும் தக்க வைத்தல், சகோதரர் உறவில் நிலவிய சிறுபிணக்கு சமரசமாக தீர்த்து வைத்தல். |
| ரிஷபம் | இழுபட்டுக் கொண்டிருந்த விவாகம் பேச்சு வார்த்தை உடன்பாட்டினால் நிறைவேறல், ஈடுபடும் முயற்சிகளில் எதிர்நீச்சல் போட்டு வெற்றிகர முடிவுக்கு கொண்டுவருதல். |
| மிதுனம் | நண்பனின் தொடர்பினால் கைவிட்ட பயணம் மீண்டும் ஏற்படும் நிலையுண்டு, குடும்பத்தில் மங்களகரமான சுபகாரியம் கைகூடும் கைங்கரியம் உண்டாகும். |
| கடகம் | தேவையற்ற விடயங்களில் தலையிடாது தப்பிக் கொள்ளப்பார்ப்பதுடன் பொறுமையினையும் கடைப்பிடியுங்கள், தாயாரின் தேக சுகம் கவலைக்கிடமாக இருந்து தேறுவதால் மகிழ்வு. |
| சிம்மம் | தேங்கிய பொருட்களை விற்பனை செய்ய புதிய யுக்தியை மேற்கொள்ள முன்வரல், பேச்சுக்களை பிறர் மனம் புண்படாமல் கையாள்வது நன்மைதரும். |
| கன்னி | உடல் ஆரோக்கியத்தில் உஷ்ணசம்பந்தமான வியாதிகளின் பாதிப்பு தாக்கக்கூடும், எதிர்பாராத விருந்தாளிகள் வந்து சேர்ந்ததால் பராமரிக்க அயலவரின் உதவியை நாடுதல். |
| துலாம் | உத்தியோகத்தில் சகபாடிகளின் ஒத்துழைப்புக் கிடைப்பதால் பணியில் தேக்கநிலை அற்றுப்போதல், வீட்டுப்பாதுகாப்பின் கவனக்குறைவினால் திருட்டு முயற்சி ஏற்படும் அச்ச நிலை. |
| விருச்சிகம் | பணம் கொடுக்கல் வாங்குதலில் கவனமாகச் செயற்படுவதுடன் எதையும் எழுத்து மூலமாகப் பெற்றுக கொள்ளுங்கள், குடும்பத்தில் நிலவிவரும் கருத்து முரண்பாடுகள் விலகி ஒற்றுமைதக்க வைக்கும். |
| தனுசு | தானுண்டு தன் வேலையுண்டு என இருப்பதினால் பிரச்சினைகள் அணுகாதிருக்கும், பூமிப்பேறு வெளியூர் மக்களினால் அனுப்பும் பணத்தினால் கைகூடும். |
| மகரம் | நண்பர்களையும், ஊழியர்களையும் அனுசரித்து நடந்து கொள்வதனால் அனுகூலமுண்டு, எடுத்துக் கொண்ட காரியத்தில் கண்ணாக இருப்பதினால் பிரச்சினைகள் வர இடமிருக்காது. |
| கும்பம் | பொருளாதார நிலை சிறப்பாக அமைவதனால் குடும்பத்தேவைகள் பூர்த்தியடையும், தூக்கமின்மை, அலைச்சல் மற்றும் தேகசுகம் பாதிக்கப்படல். |
| மீனம் | பொருளாதார மேம்பாடு காரணமாக வியாபார முயற்சியில் சுபீட்சம் ஏற்படும், பூர்விக சொத்துக்களினால் பிரச்சினை தோன்றினாலும் இறுதியில் சுமுக நிலை தோன்றும். |




# ஸ்மித்தால் மீண்டது ஆஸி.

(சிட்னி)

ஸ்ரீபன் ஸ்மித்தின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் சிட்னி டெஸ்டில் அவுஸ்ரேலிய அணி வலு வான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுள்ளது. இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடை யிலான வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி நேற்று சிட்னியில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற் கமைய முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய அவுஸ் ரேலிய அணி இங்கிலாந்தின் வேகங்களிற்கு ஈடு கொடுக்க முடியாமல் பணிய ஆரம்பித்தது. குறிப்பாக, ஸ்டோக்ஸின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியா-மல் திணறிய அவுஸ்ரேலிய அணி பெரும் சரிவை எதிர்நோக்கியது. ஒரு கட்டத்தில் அவுஸ்ரேலிய அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 97 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இந்நிலையில் ஆறாவது விக்கெட்டுக் காக இணைந்த ஸ்ரீபன் ஸ்மித், ஹடின் இணை மிக நிதானமாக ஆடியது. இதில் ஸ்ரீபன் ஸ்மித் அதிர டியாக ஆடி ஓட்டங்களைக் குவிக்க, அவருக்கு ஒத் துழைப்பு வழங்கும் வகையில் ஹடின் செயற்பட்டார். இருப்பினும் இந்த ஜோடி இணைப்பாட்டமாக 128 ஓட்டங்களைப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. மறு முனையில் உறுதியுடன் போராடிய ஸ்ரீபன் ஸ்மித் தனது மூன்றாவது டெஸ்ட் சதத்தை அடித்து அசத்தினார். இறுதியில் அவுஸ்ரேலிய அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 326 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஸ்ரீபன் ஸ்மித் 157 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், 17 பவுண்டரிகள் அடங்கலாக 115, ஹடின் 90 பந்துகளை எதிர்கொண்டு 13 பவுண்டரிகள் அடங்கலாக 72, வட்சன் 43, ஹரிஸ் 27 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஸ்டோக்ஸ் ஆறு, ஸ்ரூவெட் புரொட் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிவரும் இங்கிலாந்து அணி நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்ட வேளை ஒரு விக்கெட்டை இழந்து 8 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும். இதேவேளை, அவுஸ்ரேலிய அணி இங்கிலாந்து அணிக்கு வெள்ளையடிப்புச் செய்யும் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# லலித் மோடியா? பி.சி.சி.ஐ.யா?

(புதுடில்லி)

நிதிமுறைகேட்டில் சிக்கிய ஐ.பி.எல். முன்னாள் தலைவர் லலித்மோடிக்கு இந்திய கிரிக்கெட் சபை ஆயுட்கால தடை விதித்தது. லண்டனில் பதுங்கி இருக்கும் அவர் அங்கிருந்தபடியே, ராஜஸ்தான் விளையாட்டு சட்டத்தின் 2005இன்படி ராஜஸ்தான் கிரிக்கெட் சங்க நிர்வாகிகள் தேர்தலில் தலைவர் பதவிக்கு போட்டியிட்டுள்ளார். பெரும் பாலான நிர்வாகிகள் ஆதரவு இருப்ப தால் லலித்மோடி ராஜஸ்தான் கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் பதவியை மீண்டும் கைப்பற்றுவது ஏறக்குறைய் உறுதியாகி விட்டது. தேர்தல் முடிவை உயர் நீதிமன்றம் விரைவில் வெளியிடவுள்ளது.


இந்த நிலையில் லலித்மோடியின் மறுபிரவேசத்தை தடுத்து நிறுத்து வதற்கான முயற்சியில் இந்திய கிரிக் கெட் சபை தீவிரம் காட்டி வருகிறது.

அவர், ராஜஸ்தான் கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் ஆவதை தடுத்து நிறுத்தக்கோரி அவருக்கு எதிராக இந்திய கிரிக்கெட் சபை சார்பில் உயர் நீதிமன்றில் நேற்று முன்தினம் வழக்கு தொடரப்பட்டது. அதில், ராஜஸ்தான் கிரிக்கெட் சங்கத்துடனான லலித்மோடி யின் எத்தகைய தொடர்பும், அது இந்திய கிரிக்கெட் சபையின் புகழுக்கு களங்கத்தை ஏற்படுத்தும். லலித்மோடி யின் வேட்பு மனுவை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று இந்திய கிரிக்கெட் சபை எதிர்ப்புத் தெரிவித்தும் அதை ராஜஸ்தான் கிரிக்கெட் சங்கம் நிராகரித்து மனுவை ஏற்றது தவறானது. மேலும் இந்தத் தேர்தல் இந்திய கிரிக்கெட் சபையின் விதிகளின்படி நடைபெறவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கு, ராஜஸ்தான் கிரிக்கெட் சங்க நிர்வாகிகள் தேர்தல்முடிவு வெளி யாகும் என்று எதிர்பார்க்கப்படும் வரு கிற 6ஆம் திகதி விசாரணைக்கு வரு கிறது.

# வல்லரசுகளின் மோதல்





(பிரிஸ்பேன்)

அவுஸ்ரேலியாவின் பிரிஸ்பேன் நக ரில் நடைபெற்று வரும் ரென்னிஸ் போட்டியின் அரையிறுதியில் நடப்புச் சம்பியனான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸும், ரஷ்யாவின் மரியா ஷரபோவாவும் மோதவுள்ளனர்.

தரவரிசையில் முதல் இடத்தில் உள்ள செரீனா, சமீபகாலமாக தோற் கடிக்கப்பட முடியாத வீராங்கனையாக உருவெடுத்து வருகிறார். அவருடன் மோதும் அறையிறுதி ஆட்டம் ஷர போவாவுக்கு சவாலாக இருக்கும் என்பதில் சந்தேமில்லை.

இவர்களிருவரும் 16 ஆட்டங்களில் மோதியுள்ளனர். இதில், செரீனா 14 ஆட்டங்களிலும், ஷரபோவா 2 ஆட்டங்களிலும் வெற்றி பெற்றுள்ளனர். இருவருக்குமிடையே கடைசியாக நடை பெற்ற 13 ஆட்டங்களில் செரீனாவே வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக் கது. முன்னதாக, நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் செரீ-னா வில்லியம்ஸ் 6-3, 6-3 என்ற நேர் செட்களில் ஸ்லோவேகியாவின் டொமி-னிகா சிபுல்கோவாவையும், ஷரபோவா 4-6, 6-3, 6-2 என்ற செட்களில் எஸ் டோனியாவின் கானேபியையும் வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறினர்.

மற்றொரு அரையிறுதிப் போட்டி யில் பெலாரஸின் விக்டோரியா அசரென் காவும், செர்பியாவின் ஜெலீனா ஜான் கோவிச்சும் மோதுகின்றனர். காலிறுதி ஆட்டங்களில் அசரென்கா, சுவிட்சர்லாந் தின் ஸ்டெபானி வோஜலியையும், ஜோன்கோவிச், ஜேர்மனியின் ஏஞ் செலிக் கெர்பரையும் வீழ்த்தி அரை யிறுதிக்கு முன்னேறினர்.

# முடிவிற்கு வருகிறது மலிங்கவின் ஆட்டம்?

இலங்கை கிரிக்கெட் அணியிலிருந்து வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க நீக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அவரது அண்மைக்காலப் பெறுபேறுகள் சிறப்பாக அமையாததன் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை கிரிக்கெட் சபையின் மூத்த அதிகாரிகளுக்கிடையில் இடம்பெற்ற சந்திப்பையடுத்து புதிய வருடத்தில் அதிகளவிலான மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் இலங்கை தோல்வி அடைந்திருந்தது. இதன்படி முழுமையான திறமைகளை வெளிப்படுத்தாத சிரேஷ்ட வீரர்களைக் கொண்டு போட்டிகளை வெற்றி கொள்ள முடியாது எனத் தெரிவிக்கப்பட்டதாகவும், அதன் காரணமாக லசித் மலிங்க இலங்கை அணியிலிருந்து நீக்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# மே.தீவு, நியூசிலாந்து இன்று 4ஆவது ஒரு நாள்

(நெல்சன்)

மேற்கிந்தியத்தீவுகள், நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான நான்காவது ஒரு நாள் போட்டி இன்றைய தினம் நியூசிலாந்தின் நெல்சனில் நடைபெற வுள்ளது.

நியூசிலாந்திற்கான கிரிக்கெட் சுற் றுலாவை மேற்கொண்டுள்ள மேற் கிந்தியத்தீவுகள் அணி தற்போது ஒரு நாள் தொடரில் பங்கேற்று வரு கின்றது. இதில் முதல் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணியும், மூன்றாவது போட்டியில் நியூசிலாந்து அணியும் வெற்றிபெற்றுள்ளன. இரண் டாவது போட்டி மழை காரண-மாக கைவிடப்பட்டது. இந்நிலையில் நான்காவது போட்டி இன்றைய தினம் நெல்சனில் நடைபெறவுள்ளது.

இதில் இரு அணிகளும் வெற்றியைப் பெற்றுக்கொள்ள முனைப்புடன் போரா டும் என் எதிர்பார்க்கப்படுகிறது. இதே வேளை, டெஸ்ட் தொடரில் அடைந்த தோல்விக்குப் பழிதீர்க்கும் வகையில் மேற்கிந்தியத்தீவுகள் அணி ஏனைய இரு போட்டிகளிலும் வென்று தொடரை வெல்ல முயற்சிக்கும் என மேற்கிந் தியத்தீவுகள் அணியின் முன்னாள் வீரர் கூப்பர் தெரிவித்துள்ளார்.

# அனுஷ்காவின் விருந்தில் ஆட்டம் போட்ட ஹோலி



பிரபல நடிகை அனுஷ்கா கொடுத்த புத்தாண்டு விருந்தில் விடிய விடிய ஆட்டம் போட்டுள்ளார் வீராட் ஹோலி.

தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடிய இந்திய அணி, கடந்த 31ஆம் திகதி இரவு மும்பை விமான நிலையத்தில் வந்திறங் கியது. வீரர்கள் அனைவரும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட விடுதிக்குச் சென்றனர், ஆனால் ஹோலி மட்டும் பிரபல நடிகை அனுஷ்காவின் வீட்டுக்குச் சென்று விட்டார்.

ஹோலி, அனுஷ்கா மற்றும் அவரின் இரண்டு நண்பர்கள் இந்த விருந்தில் கலந்து கொண்டுள்ளனர்.

விடிய விடிய விருந்து நடந்துள் ளது, மறுநாள் மதியம் தான் ஹோலி அங்கிருந்து சென்றுள்ளார்.

இதுகுறித்து அனுஷ்காவோ, நான் ஹோலியை டேட் செய்யவில்லை, அவர் எனது நல்ல நண்பர். இரண்டு பேர் நண்பர்களாக இருந்தால் அவர்களின் வீட்டுக்குச் செல்லத் தான் செய்வார்கள் என்று தெரிவித்துள்ளார்.



# மத்தியூஸ் பொறுப்பான ஆட்டம் சமநிலையாகுமா முதல் டெஸ்ட்

பாகிஸ்தான் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் தோல்வியைத் தவிர்க்கும் யுக்தியுடன் இலங்கை அணி ஆடிவருகின்றது. இலங்கை, பாகிஸ்தான் அணி களுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டம் டுபாயில் நடைபெற்று வருகின்றது.179 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவதுஇனிங்ஸிற் காக ஆடிய இலங்கை அணி மிக நிதானமாக ஆடி ஓட்டங்களைப் பெற்று வருகின்றது. இருப்பினும் சீரானதொரு இடை வெளியில் பாகிஸ்தான் அணியால் விக்கெட்டுக்கள் சரிக்கப்பட்டது. ஒரு கட்டத்தில் இலங்கை அணி நான்கு விக்கெட்டுக்களை இழந்து 186 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இந்நிலையில் ஐந்தாவது விக்கெட்டுக்காக இணைந்த கப்டன் மத்தியூஸ், சண்டிமால் இணை பொறுமையாக ஆடி ஓட்டங்களை வேகமாகக் குவித்தது. இந்த ஜோடி 138 ஓட்டங்களை இணைப்பட்டமாகப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. இருப்பினும் உறுதி தளராது ஒரு முனையில் கப்டன் மத்தியூஸ் ஓட்டங்களைக் குவித்து வருகின்றார். இறுதியில் நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் தேநீர் இடைவேளைக்காக நிறுத்தப்பட்ட வேளை இலங்கை அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 355 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் ஜே.கே. சில்வா 81, சண்டிமால் 89, சங்கக்கார 55 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். கப்டன் மத்தியூஸ் 210 பந்துகளை எதிர்கொண்டு ஒன்பது பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக ஆட்டமிழக்காது 87 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். பந்து வீச்சில் யுனைட்கான் மூன்று, பிலாவெல் பத்ரி இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளனர். இன்று போட்டியின் இறுதி நாளாகும். இலங்கை முதல் இனிங்ஸ் 204. பாகிஸ்தான் முதல் இனிங்ஸ் 383.

## விளையாட்டுச் செய்திகள்

# சர்வதேச தரத்திற்கு உயரும் இலங்கையின் விளையாட்டுத்துறை



(கொழும்பு)

புதுவருடத்தில் கிராமிய மட்டம் தொடக்கம் தேசிய ரீதியிலான பல உட்கட்டமைப்பு வேலைத்திட்டங்கள் அமுல் செய்யப்படவுள்ளன. இதன் மூலம் விளையாட்டுத்துறையினை சர்வதேச தரத்துக்கு உயர்த்த முடியும் என அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

விளையாட்டுத்துறை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு கடந்த வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட மாகாண மற்றும் மாவட்ட ரீதியில் நிர்மாணிக்கப்படும் விளையாட்டரங்கு திட்டத்தின் கீழ் வடமாகாணத்தில் கிளிநொச்சி விளையாட்டரங்கு, அனுராதபுர விளையாட்டரங்கு, ஊவாமாகாணத்தின் வின்ஸ்டன் டயஸ் விளையாட்டரங்கு களுத்துறை - பண்டாரகம, மாத்தறை, புத்தளம், அம்பாறை, பொலன் நறுவை, மட்டக்களப்பு மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டரங்குகளும் புத்தாண்டில் மக்கள் பாவனைக்காக திறந்துவைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்விளையாட் டரங்குகள் மக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்பட்டதன் பின்னர் இப்பிரதேசத்திலுள்ள விளையாட்டு வீர, வீராங்கனைகளின் விளையாட்டுத் திறன்கள் மேம்பட வழிவகுக்கும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்தகாலத்தில் அரசாங்கத்தினால் விளையாட்டுத்துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் மூலம் பல குறுங்கால மற்றும் நீண்டகால வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு அதன் மூலம் சிறந்த பயனும் பெற்றுக்கொள்ளப்பட்டது.

புதுவருடத்தில் 2981 மில்லியன் ரூபா விளையாட்டுத்துறைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தில் ஒதுக்கப்பட்ட நிதியினை விட 338 மில்லியன் இவ்வாண்டில் அதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# பொங்கலை முன்னிட்டு மென்பந்து கிரிக்கெட்

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் தைப்பொங்கலை முன்னிட்டு வருடாந்தம் நடாத்தி வரும் மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் இவ்வருடமும் இடம்பெறவுள்ளன.

வடமாகாண ரீதியில் இடம்பெறவுள்ள இச் சுற்றுப் போட்டியில் முதலில் பதிவு செய்யும் அணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

அணிக்கு 6 பேர் 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்டதாக இப்போட்டிகள் அமையவுள்ளன.

முதற் கட்டப் போட்டிகள் மானிப்பாய் செல்ல முத்து விளையாட்டரங்கில் 11, 12ஆம் திகதிகளில் இடம்பெறும்.

அரையிறுதிப் போட்டிகளும், இறுதிப் போட்டியும் தைப்பொங்கல் தினத்தன்று இடம்பெறவுள்ளது.

வெற்றி பெறும் அணிகளுக்கு, கடந்த வருடம் வழங்கப்பட்டதைப் போன்று பெறும்மதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

பங்குபற்ற விரும்பும் அணிகள் எதிர்வரும் புதன் கிழமைக்கு முன்னர் 0770869345, மற்றும் 0771641413 ஆகிய தொலைபேசி இலக்கங்களூடாக தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினர் அறிவித்துள்ளனர். (48)



முல்லைத்தீவு மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தினால் நடாத்தப்பட்ட ஒரு நாள் கூடைப்பந்தாட்டத் தொடரில் சம்பியன் பட்டம் வென்ற லதீபனுக்கு பரிசு வழங்கப்படுவதைக் காணலாம். இப்போட்டி தனி நபர்களுக்கிடையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (48)

# இளவாலை இளைஞர் கழகத்தின் மாபெரும் விளையாட்டுப் போட்டி

தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு இளவாலை இளைஞர் கழகம் வடமாகாண ரீதியாக பாரம்பரிய போட்டிகளை நடாத்தவுள்ளது.

கபடி, ஆண்களுக்கான மரதன், பட்டம் ஏற்றுதல் போன்ற போட்டிகளை நடாத்தவுள்ளது.

இதில் கபடி சுற்றுப் போட்டியில் முதலிடத்தைப் பிடிக்கும் அணிக்கு 10000 ரூபாவும், 2ஆம் இடத்தைப் பெறும் அணிக்கு 5000ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

ஆண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டி திறந்த போட்டியாக இடம்பெறவுள்ளது. இதில் முதலிடம் பெறுபவருக்கு 5000 ரூபா பணப் பரிசிலும் 2ஆம் இடம பெறுபவருக்கு 3000 ரூபா பணப்பரிசிலும் வழங்கப்படும்.

பட்டமேற்று போட்டியில் முதலிடம் பிடிக்கும் வீரருக்கு 2500 ரூபாவும், இரண்டாமிடத்தைப் பிடிக்கும் வீரருக்கு 1500 ரூபாவும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சறுக்கு மரம் ஏறல், தயிர் முட்டி உடைத்தல், தலையணைச் சண்டை, திருமணமான, திருமணமாகாதவர்களுக்கான கயிறுழுத்தல் போட்டி போன்றனவும் இடம்பெறவுள்ளன. இவை யாவும் திறந்த போட்டிகளாகவும் அனைவரும் கலந்துகொள்ள முடியும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கபடிப் போட்டியில் பங்குகொள்ள விரும்புவோர் 5ஆம் திகதிக்கு முன்னரும், மரதன் போட்டியில் பங்குகொள்ள விரும்புவோர் 11ஆம் திகதிக்கு முன்னரும், பட்டம் ஏற்றுதல் போட்டியில் பங்குகொள்ள விரும்புவோர் 12ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பங்கு கொள்ள விரும்பும் போட்டியாளர்கள் மேற்படி குறிப்பிட்ட காலங்களுக்கு முன்னதாக 0773992478 அல்லது 0750416493 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும்போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93, 48)

# கந்தையா நல்லதம்பி நினைவு கால்பந்து லீக் ஆட்டத்தில் டையமன்ஸ் வெற்றி

கந்தையா நல்லதம்பி நினைவு கால்பந்தாட்டத் தொடரின் லீக் ஆட்டத்தில் வதிரி டையமன்ஸ் அணி வெற்றிபெற்றது.

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் சுன்னாகம் சூராவத்தை நியூவொரியஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் கந்தையா நல்லதம்பி நினைவு கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர் நியூவொரியஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் இரவு இரண்டு போட்டிகள் நடைபெற்றன. முதல் போட்டியில் ஊரெழு றோயல் அணியும், இளவாலை யங்ஹென்றிஸ் அணியும் மோதின. இதில் இரு அணிகளுமே மாறி மாறி கோல்களைப் பெற்று வந்தன. இறுதியில் 5-5 என்ற கோல் கணக்கில் இருந்த நிலையில் இப்போட்டி சமநிலையில் நிறைவுற்றது. தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் வதிரி டையமன்ஸ் அணியும், அராலி ஜேம்ஸ் அணியும் மோதின. இதில் வதிரி டையமன்ஸ் அணி 5-4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. போட்டிகள் தொடர்ந்தும் நடைபெற்று வருவதாகவும், புள்ளிகள் அடிப்படையில் இரண்டாவது சுற்றுக்கு அணிகள் தெரிவு செய்யப்படும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

# வென்றது யாழ். மத்தி

யாழ். மத்திய கல்லூரி அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. யாழ். மத்திய கல்லூரியின் 19வயது பிரிவு அணிக்கும் சுழிபுரம் விக்டோரியன்ஸ் அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டி கடந்த திங்கட்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. முதலில் ஆடிய விக்டோரியன்ஸ் அணி 23.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 72 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அரிதரன் 18, கணேஸ் 14, சஜந்தன் 13ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் அலன்ராஜ் ஆறு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். பதிலுக்கு 73 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். மத்திய கல்லூரி அணி 26 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் டினேதஜன்16,சங்சஜன்12, நிரோஜன் 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் சுரேந்திரன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். (48)

# யுத், சுழிபுரம் அம்பாள் அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம்

மாவத்தை யுத், சுழிபுரம் அம்பாள் அணிகள்அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன. தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு அராலி மாவத்தை விளையாட்டுக் கழகத்தினால் மின்னொளியில் நடாத்தப்பட்டு வரும் மாபெரும் கரப்பந்தாட்டத் தொடர் மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் நேற்று முன்தினம் இரவு இரு ஆட்டங்கள் நடைபெற்றன. இதில் முதல் போட்டியில் மாவத்தை யுத் அணியும், வட்டுக்கோட்டை அணியும் மோதின. ஆரம்பம் முதலே அசத்திய மாவத்தை யுத் அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வென்[illegible] அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

மற்றைய போட்டியில் காரைநகர் அம்பாள் அணியும்,, சுழிபுரம் அம்பாள் அணியும் மோதின. இதில் சுழிபுரம் அம்பாள் அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குமுன்னேறியுள்ளது(93)

# கிளி, முல்லை சிறுவர் இல்லங்களின் விளையாட்டு வெற்றியீட்டியோர் விபரம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முள்ளியவளை பாரதி இல்லம், முல்லைத்தீவு முத்தையன் கட்டு அன்பு இல்லம் கிளிநொச்சி செஞ்சோலை சிறுவர் இல்லம் ஆகிய இல்லங்களைச் சேர்ந்த சிறுவர்களின் புதுவருட விளையாட்டுவிழா நிகழ்வுகள் முல்லைத்தீவு முத்தையன்கட்டு அன்பு இல்ல விளையாட்டு மைதானத்தில் சிறப்புற நடைபெற்றன.

இதில் கயிறடித்தல், தொப்பி மாற்றுதல், வளையம் எறிதல், பலூன் ஊதுதல் போன்ற பல போட்டிகள் நடைபெற்றன.

முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விபரம் வருமாறு:

கயிறடித்தல் முதலாமிடம் கி.வகீசனா (செஞ்சோலை சிறுவர் இல்லம்) இரண்டாமிடம் ச.சண்முகப்பிரியா (பாரதி இல்லம்) மூன்றாமிடம் நே.அனுசிகா. (பாரதி இல்லம்)

பணிஸ் சாப்பிடுதல் முதலாமிடம் ர.கிந்துசா (செஞ்சோலை சிறுவர் இல்லம்) இரண்டாமிடம் அ.ஜெனித் (அன்பு இல்லம்) மூன்றாமிடம் அ.ஜெனஸ்ரீபன் (அன்பு இல்லம்)

பலூன் ஊதுதல் முதலாமிடம் பு.ரகுபரன் (அன்பு இல்லம்) இரண்டாமிடம் வி.நர்மதா (பாரதி இல்லம்) மூன்றாமிடம் க.கஜீபன் (அன்பு இல்லம்)

பந்து வாளியினுள் எறிதல் முதலாமிடம் கி.கிசாந்தன் ( அன்பு இல்லம்) இரண்டாமிடம் த.நிலவன் (அன்பு இல்லம்) மூன்றாமிடம் த.சோதிகா (செஞ்சோலை சிறுவர் இல்லம்)

தொப்பி மாற்றுதல் முதலாமிடம் க.கலைமதி (செஞ்சோலை சிறுவர் இல்லம்) சு.நித்தியலட்சுமி (பாரதி இல்லம்) உ.கோபிகா (பாரதி இல்லம்)

மாவு ஊதுதல் முதலாமிடம் சொ.சுகிந்தன் (அன்பு இல்லம்) வி.பிரியங்கா (பாரதி இல்லம்) கு.குயின்றன் (அன்பு இல்லம்) வளையம் எறிதல் முதலாமிடம் உ.சயந்தா (பாரதி இல்லம்) இரண்டாமிடம் கு.பவிதா (செஞ்சோலை சிறுவர் இல்லம்) மூன்றாமிடம் ம. கோபி (அன்பு இல்லம்)

பந்து மாற்றல் முதலாமிடம் நிசாந்தினி (செஞ்சோலை சிறுவர் இல்லம்) இரண்டாமிடம் நிரோஜினி (பாரதி இல்லம்) மூன்றாமிடம் தர்சிகா ( பாரதி இல்லம்)

நீர்நிரப்புதல் முதலாமிடம் (அன்பு இல்லம்) இரண்டாமிடம் (செஞ்சோலை சிறுவர்) இல்லம் மூன்றாமிடம் (பாரதி இல்லம்)

யானைக்குகண் வைத்தல் கமல் சுதா (அன்பு இல்லம்) கயல்விழி அலோசியா (செஞ்சோலை சிறுவர் இல்லம்)


# கனடா நாடாளுமன்ற உறுப்பினரின் கனவை மெய்ப்பட வைக்குமா இலங்கை அரசு?

அண்மையிலே சுற்றுலா விசாவில் இலங்கை சென்ற ஜெயபாலன் அரசியலில் ஈடுபட்டமைக்காக விசாரணைக் குட்படுத்தப்பட்டு இலங்கை யிலிருந்து திருப்பியனுப்பப் பட்டது யாவரும் அறிந்ததே. உள்ளூர், புலம்பெயர் நாடுகளிலுள்ள பத்திரிகைகள் கொட்டை எழுத்துக்களில் செய்திகள் வெளியிட்டன. அரச எதிர்ப்பையே அரசிய லாக கொண்டவர்கள் மத்தியில் ஜெயபாலன் கதாநாயகன் ஆனார். ஒருகாலத்தில் புலிகளின் கொலைப்பட்டியலில் இருந்த ஜெயபாலன் தியாகியானார்.

இதன் பின்னர், ஜெயபாலன் நாடுகடத்தப் பட்டது தெரிந்திருந்தும் தமிழ்நாட்டைச் சேர்ந்த மகாதமிழ் பிரபாகரன் சுற்றுலா விசாவில் இலங்கை சென்றார். இலங்கை சென்ற தமிழ் பிரபாகரன் இன்னும் ஒருபடி மேலே சென்று நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் வீட்டிலேயே தங்கியிருந்ததுடன் பாதுகாப்பு படைகளின் முகாம்களையும் படம் எடுத்திருக்கின்றார். இதன் பின்னர் இவரும் விசாரணைக்குட்படுத்தப்பட்டு நாடுகடத்தப்பட்டார்.

ஜெயபாலனைப் போலவே தமிழ் பிரபாகனும் தமிழ் மக்கள் மத்தியில் மாவீரனாக்கப்பட்டார். ஒரு காலத்தில் “வயித்து வலியை நம்பினாலும் வடக்கத்தையானை நம்பாதே” என்ற புலம்பெயர் தமிழ் மக்களில் ஒரு சிலர் தமிழ்பிரபாகரனுடன் தொடர்பு கொண்டு அவரது “தியாகத்துக்கும்”, “வீரத்துக்குமாக” பொற்கிழி வழங்கியதாகவும் தெரிகிறது.

ஜெயபாலன், தமிழ் பிரபாகரன் ஆகியோர் நாடு கடத்தப்பட்டது நன்கு தெரிந்த பின்னரும் இலங்கையில் பிறந்த, கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபைசன் (அம்மணிக்கு தற்போது மங்குசனி என்பதால் சிற்சபே சனை சிற்சபைசன் என மாற்றி யுள்ளார்) அவர்கள் சுற்றுலா விசாவில் இலங்கை சென்றுள்ளார்.



- பொன். வாதவூரன் -

ராதிகா அவர்கள் ஜெயபாலன், தமிழ் பிரபாகரன் போன்றவர்கள் சந்தித்தவர்களை விட மேலும் பல முக்கியஸ்தர்களை சந்தித்திருக்கிறார். சாதாரண அப்பாவித்தமிழர்கள் எண்ணக் கூடும் இவளல்லவா புறநானூ ற்று தமிழ்ப்பெண், இவள் அல்லவா உண்மையான பெண்புலி என்று... எங்கள் வீரவேங்கை ராதிகா அவர்கள் இலங்கையில் இடம்பெற்ற படுகொலைகள் சம்பந்தமான விபரங்களைத் திரட்டி ஐக்கிய நாடுகள் சபையில் அம்பலப் படுத்துவாரென இன்னும் சிலர் எண்ணக்கூடும்.

ஆனால் உண்மை அதுவல்ல. காரணத்துடன் தான் ராதிகா இலங்கை சென்றுள்ளார். ராதிகா போட்டியிட்ட தொகுதி யில் பல வருடங்களாக நாடாளுமன்ற உறுப்பினராக விருந்த டெரெக் லீ என்பவர் சென்ற முறை தேர்தலில் போட்டியிடவில்லை. அத்துடன் சென்ற முறை தேர்தலின்போது ராதிகா போட்டியிட்ட புதிய ஜனநாயக கட்சியின் செல்வாக்கு வழக்கத்திற்கு மாறாக கூடியிருந்தது. ராதிகா வென்றால் புலிகளிற்கு ஆதரவாக செயற்படுவார் என்ற நம்பிக்கையில் புலிகள் ராதிகாவிற்கு ஆதரவு கொடுத்தார்கள். இதனால் தான் சென்றமுறை ராதிகா வெற்றிபெற்றார்.

ஆனால் இம்முறை நிலைமை அவ்வாறல்ல. இம்முறை புதிய ஜனநாயக கட்சியின் செல்வாக்கு வெகுவாக குறைந்துள்ளது. புலிகளின் மாவீரர் தின வைபவங்களில் ராதிகா கலந்து கொள்ளாததால் இம்முறை புலிகள் ராதிகாவை ஆதரிக்கப்போவதில்லை. இன்னுமொரு தமிழர் ராதிகாவின் தொகுதியில் போட்டியிடவுள்ள தால் தமிழர்களின் வாக்குகள் பிரிவதற்கான சாத்தியம் உண்டு. எதிர்வரும் தேர்தலில் ஏற்படவிருக்கும் தோல்வி பீதியினால்தான் ராதிகா அம்மை யார் அவர்கள் இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

தான் சுற்றுலா விசாவில் சென்று ஸ்ரீதரன் போன்றவர் களை மட்டுமல்லாமல் மேலும் சிலரை சந்தித்தால், இலங்கை அரசு தன்னை நாடுகடத்தாவிட்டாலும் தன்மீது விசாரணையாவது நடத்தும். தமிழ் ஊடகங்கள் மட்டுமல்லாது ஆங்கில ஊடகங்களும் தன் மீதான விசாரணைக்கு முக்கியத்துவம் கொடுக்கும். தமிழ் மக்கள் மத்தியில், குறிப்பாக கனேடிய தமிழர் மத்தியில் தனக்கு ஆதரவு அலை வீசும். இந்த அலை தனது தேர்தல் வெற்றிக்கு உதவும் என்ற நப்பாசையுடன் தான் ராதிகா இலங்கை சென்றுள்ளார். ஆனால் எதிர்பார்த்தது நடக்காததால் சோர்ந்து போயுள்ளார்.

ராதிகா அவர்களை தேவையற்ற விசாரணைக்குட் படுத்தி அவரது கனவை மெய்ப்பட வைப்பதும், ராதி-காவின் வருகையை தற்போது கண்டும் காணாமல் விட்டுவிட்டு பின்னர் ராஜதந்திர ரீதியில் அணுகுவதும் இலங்கையின் கையில் தான் உள்ளது.

இலங்கையில் பிறந்த, கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபைசன் அவர்கள் கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினர்களையும் வேறு சிலரையும் சந்தித்ததாக வும் சபாபதிப்பிள்ளை அகதி முகாமிற்கு விஜயம் செய்ததாக வும் செய்திகள் கூறுகின்றன.

# இவன் வேற மாதிரி - பிரியாணி

- சுரேஷ் கண்ணன் -

வெங்கட்பிரபு “மங்காத்தா”வின் ஹாங்ஓவரில் இருக்கிறார் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. அதைப் போலவே பரபரப்பான திரைக்கதையை அமைக்க முயன்று வெற்றி பெறலாம் என்று நினைத்து தோற்றுப் போயிருக்கிறார். மங்காத்தாவின் வெற்றிக்குக் காரணம் பரபரப்பான திரைக்கதையைத் தாண்டிய ஒரு முக்கியமான காரணம் உண்டு. அது அஜித். நரைமுடியுடன் கூடிய இயல்பான தோற்றத்தில் எதிர்நாயகனாக





இயக்குநரால் நடிக்க வைக்கப்பட்டதும். ஷாருக்கான் “தர்” திரைப்படத்தில் எதிர்நாயகனாக நடித்து வெற்றி பெற்றதற்கு சமமானது இது. ஆனால் அது போன்ற திரைக்கதையை கார்த்தியையும் பிரேம்ஜியையும் கவர்ச்சியையும் வைத்து ஒப்பேற்ற முயன்றால் அது தோல்வியை அடையலாம் என்று வெங்கட்பிரபு யூகித்திருக்க வேண்டும்.

வெங்கட்பிரபு இயக்கிய முதல் படமான சென்னை - 28 தான் அவரின் அழுத்தமான அடையாளம். சுஜாதாவின் நிலாநிழல் நாவலை நினைவுபடுத்துவது போல் நடுத்தரவர்க்க இளைஞர்களையும் தெருவோர கிரிக்கெட்டையும் அவர்களுக்கிடையான நட்பையும் காதலால் ஏற்படும் குறுக்கீட்டையும் இயல்பான நகைச்சுவையில் புதிதான ட்ரீட்மெண்டில் சொன்னதாலேயே அது பெருவாரியான வெற்றியைப் பெற்றது. சலிக்க வைத்த தமிழ் சினி மாவில் சென்னை-28 அப்போது ஒரு புதிய அனுபவமாக இருந்தது. அவர் அடுத்திய இயக்கிய சரோஜா ஏதோ வொரு ஹொலிவுட்டின் நகல் என்று நினைவு. ஏறக்குறைய அதே இளைஞர் பட்டாளத்தை கொண்டிருந்தாலும் சொதப்பலான திரைக்கதையால் மோசமான திரைப்படமாக அமைந்தது. அடுத்த திரைப்படமான “கோவா” மாறுதலாக ஒரு நல்ல முயற்சி.

ஆனால் சென்னை - 28இல் இருந்து விலகி வெற்றிகரமான வணிக இயக்குநர் என்கிற நிலையை அடைய வேண்டும் என்கிற விருப்பத்தினால் வெங்கட்பிரபு அவரது பிரத்யேக அடையாளத்தை இழக்கிறார் என்பதை உணர வேண்டும். பிரியாணி அதைத்தான் நிரூபிக்கிறது.

“வாகனங்களை பாதுகாப்பாக ஓட்டுங்கள், போக்குவரத்து விதிகளை பின்பற்றுங்கள்” என்கிற உபதேசத்திற் கான அரசின் ஆவணப்படத்தைப் போன்ற திரைக்கதையை “எங்கேயும் எப்போதும்” கொண்டிருந்தாலும் இரண்டு இளம் காதலர்களைப் பற்றின இரண்டு தனித்தனி இழைகள் மிகமிக சுவாரசிய மானதாகவும் குறும்புத்தனத்துடன் அமைந்திருந்ததே சரவணன் மீது எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. இறுதிப்பகுதி மெலோடிராமாவாக அமைந்திருந்தாலும் வாகனங்களை, இயக்குபவர்களின் அலட்சியத்தினால் சில தனிநபர்களின் கனவுகளும் வாழ்க்கையும் எவ்வாறு சிதைந்து போகிறது என்கிற செய்தியை அழுத்தமாகச் சொன்னது “எங்கேயும் எப்போதும்”.

இந்த நிலையில் சரவணனின் அடுத்த திரைப்படத்தைப் பார்க்கும் போது அவரும் தனது அடையாளங்களை இழந்து விட்டு வெற்றிகரமான இயக்குநர் களின் நகலாக முயன்றிருக்கிறார் என்பது தெரிகிறது. 2008இல் சட்டக் கல்லூரியில் இருபிரிவு மாணவர்களி டையே நிகழ்ந்த கலவரத்தை அச்சு அசலாக காண்பித்திருப்பதில் படம் துவங்கும் போது, பெரியவர்களிடமிருந்து இளம் தலைமுறையினரிடமும் பரவியிருக்கும் சாதி என்னும் புற்றுநோயையும் அதன் பின்னிருக்கும் சாதிய அரசியலைப் பற்றி இயக்குநர் பேசப் போகிறார் என்று நிமிர்ந்து உட்கார்ந்தால் “நீங்க பார்த்துக் கொண்டிருப்பது தமிழ் சினிமா” என்று தலையில் தட்டி உட்கார்த்தி வைத்து விடுகிறார்.

இயக்குநர் ஷங்கர் உருவாக்கி வைத்திருக்கும் அதே டெம்ப்ளேட்டை மணம் மாறாமல் கையில் எடுத்துக் கொண்டிருக்கிறார் சரவணன். மிகப் பெரிய வலைப்பின்னல்களில் இயங்கும் ஊழல் அரசியல்வாதிகளை இலட்சிய நோக்கு கொண்ட ஒரு தனிமனிதன் ரகசியமான செய்கைகளால் தண்டிப்பது போன்ற ரொபின்ஹூட் வகை திரைக் கதை. புகழ்பெற்ற நடிகர்களின் வாரிசு களின் திணிப்புகளால் விக்ரம் பிரபு போன்றவர்களை நாம் சகித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. வழக்கம் போல புத்தி பேதலித்த மாதிரியான ஹீரோயின்.

கொக்கு தலையில் வெண்ணையை வைத்து அது வழிந்தோடி கண்களை மறைத்த பின் அதைப் பிடிப்பது போன்று எதற்காக வில்லனை கடத்தி வந்து பிற்பாடு தெருவில் விட்டு விடுகி றார் என்பது இயக்குநருக்கே வெளிச்சம். அப்போதுதான் அவன் பழிவாங்கும் நோக்கில் இரண்டாம் பாதியை நகர்த்த முடியும் என்பதுதான் திரைக்கதை உத்தி என்றால் தமிழ் சினிமாவை ஆண்டவ னால் கூட காப்பாற்ற முடியாது.

முதல் திரைப்படங்களில் புதுமையான தனது கனவுகளையும் எண்ணங்களையும் இறைத்து விட்டு “அட பரவாயில்லையே” என்று இவர்களை வியக்கும் போது “ஹிஹி.. நாங்களும் சம்பாதிக்கத்தான் வந்திருக்கிறோம்.” என்று இவர்கள் ஹிட் இயக்குநர்கள் வரிசையில் இணைய அலைமோதுவதைப் பார்க்க பரிதாபமாகத்தான் இருக்கிறது.

# தென்னிலங்கை குறித்து தீவிர தமிழ் செயற்பாட்டாளர்களின் கவனத்துக்கு!...



- சாலையூரான் -

வடமாகாண சபை தற்போது எதிர்கொண்டிருக்கும் நெருக்கடிக்கு அரசும் தமிழ் கூட்டமைப்பும் பேச்சுக்களில் இறங்குவதே ஒரே தீர்வாக இருக்குமென அரசியல் ஆய்வாளர் கலாநிதி தயான் ஜயதிலக குறிப்பிட்டிருக்கிறார்.

ஆனால் தமிழக அரசியல்வாதிகள், புலம்பெயர் தமிழ் அமைப்புக்களது தீவிர எதிர்ப்பின் மத்தியில் விக்கினேஸ்வரன் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டிருப்பதை பொருட்டாக மதித்து வடக்கு மாகாண சபையின் சீரான செயற்பாட்டுக்கு அரசு ஒத்துழைப்பது அவசியமென்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இருந்தும் ஆட்சியதிகார கட்டமைப்புக்குள் மிகவும் நெருக்கமானவர்களின் கடுமையான நிலைப்பாடுகளையும், பாதுகாப்புத் தரப்பு உயர் அதிகாரிகளது ஆட்சேபனைகளையும் புறந்தள்ளி ஜனாதிபதி வடக்கு மாகாண தேர்தலை நடத்துவதில் செயற்பட்டிருக்கிறார்.

பிரிவினைக்கான பிரசாரங்க்ளை முன்னெடுக்க கூடாதென்பது தேர்தலுக்கான ஒரு ஒழுங்கு விதியாக இருந்தும், புலித்தலைவர் பிரபாகரனுக்கு ஆதரவாக பிரசாரங்களை தமிழ் கூட்டமைப்பினர் முன்னெடுத்த விதம் அரசாங்கத்திற்குள்ளிருக்கும் கடும் போக்காளர்களுக்கு ஒரு வலுச் சேர்க்கும் நடவடிக்கையாகவே போய் முடிந்திருப்பதை தீவிர தமிழ் செயற்பாட்டாளர்கள் காணத்தவறியிருப்பது வருந்தத்தக்க ஒரு நிலைமையாகும்.

தற்போதைய திசையிலேயே இந்த நகர்வுகள் தொடருமாயின் நாமெல்லாரும் செங்குத்தான பாறையொன்றின் மேலாக அல்லது மலையருவி மேலாக நடப்பதைப்போன்ற ஆபத்தான ஒரு சூழ்நிலை உருவாகலாமென்பதையும் தயான் ஜயதிலக சுட்டிக்காட்டியிருக்கிறார்.

வேறு ஒரு நாட்டிலெனின் இராணுவச்சட்டத்தை பிரகடனம் செய்கின்ற அல்லது முழு நாட்டையுமே இராணுவம் பொறுப்பேற்கின்ற ஒரு நிலை உருவாகியிருக்கும் என்பது அவரது கருத்தாக இருக்கிறது.

அவ்வாறான ஒரு நிலைமை உருவாகாமல் இருப்பதற்கு சிங்கள மக்கள் மத்தியிலும் இராணுவத்தின் மத்தியிலும் ஜனாதிபதிக்கு இருக்கும் மிகுந்த செல்வாக்கு ஒரு பிரதான காரணமென்பதையும் அவர் குறிப்பிடுகிறார்.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை யென்பது நாட்டுக்கு வெளியே புலம்பெயர் தமிழர்களால் வழிநடத்தப்படும் விவகாரமாக இப்போது உணரப்பட்டிருக்கும் நிலையில் தமிழர் பிரச்சினையை முன்னிலைப்படுத்தி தமது நிறுவனங்களை, அமைப்புக்களை முன்னிலைப்படுத்தும் போக்கும் அந்தந்த நாடுகளில் முனைப்பு பெற்றிருக்கிறது.

இந்த அமைப்புக்கள் தம்மை வலுப்படுத்திக் கொள்வதென்பதும் அதனூடான நிதியீட்டம் என்பதும் உள்நாட்டில் தமிழர் பிரச்சினை எந்தளவுக்கு கூர்மைப்படுத்தப்படுகிறது என்பதைப் பொறுத்தே இருப்பதால் உள்நாட்டில் தமிழர்களுக்கும் அரசுக்குமிடையிலான சுமுக உறவுகள் ஏற்படாதிருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டிய தேவை இந்த புலம்பெயர் அமைப்புக்களுக்கு இருக்கிறது.

இந்தப் போக்கு உச்சம் பெற்றிருப்பதன் மறுவிளைவு, அரசுக்கும் தமிழ் மக்களுக்குமிடையிலான உறவு எவ்வாறிருக்க வேண்டுமென்பதை தமிழ் கூட்டமைப்பினர் தீர்மானிக்க முடியாத நிலைக்கு சென்றிருப்பதாகும்.

தமிழ் கூட்டமைப்பினர் எதிர் கொள்ளும் இந்த சங்கடமான நிலைக்கு பிரதான காரணம் இவர்களுக்கான வாக்குவங்கியை இந்த புலம்பெயர் அமைப்புக்கள் தீர்மானிக்கும் நிலையிலிருப்பதாகும்.

கூடவே தேர்தல் காலங்களில் தேவைப்படும் நிதிச்செலவீனங்களுக்காக இதே அமைப்புக்களை எதிர்பார்த்திருக்கும் நிலைமை என்பதும் தமிழ் கூட்டமைப்பினருக்கு தவிர்க்க முடியாததாக இருக்கிறது..

இந்த நிலையில் தமிழ் மக்களுக்காக சில விடயங்களில் அரசுடன் இணங்குவதா அன்றி, வெறுமனே பதவிக் கதிரைகளுக்காக புலம்பெயர் அமைப்புக்களின் தாளங்களுக்கு ஆடுவதா என்பதே தமிழ் கூட்டமைப்பினரின் தலையாய பிரச்சினையாகும்.

இந்த நெருக்கடியில் தென்னிலங்கை எவ்வாறு சிந்திக்கிறது. தமிழ் விவகாரத்தில் இது அரசுக்கு எவ்வாறு சாதகமாக அமைந்த விடுகிறது என்பதையெல்லாம் சிந்திக்கத் தவறியதன் பலனை இப்போது வடமாகாண சபை அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

இந்த இடத்தில் தென்னிலங்கை மக்கள் தமிழ் மக்கள் விவகாரத்தில் அரசை நோக்கி எவ்வாறு சிந்திக்கிறார்கள் என்பதை கலாநிதி தயான் ஜயதிலக தூர நோக்குடன் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இதனை தமிழ் கூட்டமைப்புக்கு முண்டு கொடுக்க நினைப்பவர்கள் கவனத்தில் கொள்வார்களாயின் அது தமிழ் மக்களுக்கு இனிவருங்காலங்களிலாவது நன்மை பயப்பதாக அமையும்.

## உழைப்பு மட்டும் போதாது!



ஓர் ஏழை விவசாயி தனது தோட்டத்தில் உள்ள பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்காக கிணறு தோண்ட ஆரம்பித்தான். தண்ணீர் வரவில்லை. சிறிது தூரம் தள்ளி மற்றொரு கிணற்றைத் தோண்டினான். அதிலும் தண்ணீர் வரவில்லை. சிறிது மனம் சோர்ந்த அவன், எதற்கும் முயற்சி செய்து பார்ப்போமே? என்று நினைத்து மூன்றாவதாக ஒரு கிணற்றைத் தோண்டினான். அதிலும் தண்ணீர் வரவில்லை. மிகவும் சோர்ந்து போனான். கிணறு வெட்டுவதற்காகச் சிறிது கடனும் வாங்கியிருந்தான். எந்த வேலையும் செய்யாமல் வீட்டுக்குள் முடங்கிக் கிடந்தான்.


அதைப் பார்த்த அவனுடைய மனைவி, வயதிலும் அறிவிலும் முதிர்ந்த ஒரு பெரியவரை வீட்டுக்கு அழைத்து வந்தாள். பெரியவர் அவனிடம், "நீ மூன்று கிணற்றிலும் சேர்த்து எத்தனை அடிகள் ஆழம் தோண்டினாய்?" என்று கேட்டார்.

"முதல் கிணற்றில் 40 அடி, இரண்டாவது கிணற்றில் 30 அடி, மூன்றாம் கிணற்றில் 30 அடி ஆக மொத்தம் 100 அடி" என்றான்.

"ஒரே கிணற்றையே தோண்டிக் கொண்டிருந்தாய் என்றால், தண்ணீர் 50 அடியிலும் கூட உனக்குக் கிடைத்திருக்குமே?" என்றார்.

"கடின உழைப்பு மட்டும் போதாது; புத்திசாலித்தனமும் தேவை" என்பதை உணர்ந்த அவன் முதலில் தோண்டிய கிணற்றை இன்னும் ஆழமாகத் தோண்டக் கிளம்பினான்.

## தோரியம் கார்!



காரில் இப்போது பயன்படுத்தப்படும் பெற்றோலிய எரிபொருள்களுக்குப் பதிலாக தோரியத்தை எரிபொருளாகப் பயன்படுத்தும் ஆராய்ச்சி வெற்றி பெற்றுள்ளது. இப்போதுள்ள காரின் என்ஜின் பாகத்தை மட்டும் மாற்றினால் போதும்.

அமெரிக்காவைச் சேர்ந்த லேசர் பவர் சிஸ்டம்ஸ் என்ற நிறுவனம் இந்த என்ஜினைத் தயாரித்துள்ளது. ஒரு கிராம் தோரியம் 28 ஆயிரம் லீற்றர் எரிபொருளுக்குச் சமமானது. 8 கிராம் தோரியத்தைப் பயன்படுத்தி ஒரு காரை 100 ஆண்டுகளுக்கு இயக்க முடியுமாம்! கடற்கரை மணலில் இருந்து தோரியம் எடுக்கப்படுகிறது.

தோரியம் கார்களைப் பயன்படுத்தும் போது சுற்றுச்சூழலும் பாதுகாக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. காரணம் பெற்றோலிய எரிபொருள்களில் இருந்து வெளியாகும் கரியமில வாயு, இதில் இருந்து முற்றிலும் வெளிவராது.

இந்தக் கார் நடைமுறைக்கு வந்தால், உலகின் முக்கிய பிரச்சினையான எரிபொருள் பிரச்சினை தீர்ந்துவிடும் என்கிறார்கள்.

## உலக நாடுகளின் செய்தி நிறுவனங்கள்

| | |
|---|---|
| ஈராக் | INA |
| பிலிப்பைன்ஸ் | PNA |
| பாகிஸ்தான் | APP |
| ஜப்பான் | Kyodo |
| பிரான்ஸ் | AFP |
| இத்தாலி | ANSA |
| ஜெர்மனி | DPA |
| செக்கோஸ்லோவாகியா | CTK |
| யுகோஸ்லேவியா | Tanjug |
| ரஷ்யா | TASS |
| எகிப்து | MENA |
| டுனீஸியா | TAP |
| மொராக்கோ | MAP |
| கானா | GNA |
| கியூபா | Prensa |
| பிரேசில் | AN |
| ஆர்ஜென்டீனா | Telam |
| மலேசியா | MNNA |
| இந்தியா | PTI, UNI |



## பன்னிரண்டு!

- ஒரு மகாமகம் என்பது 12 ஆண்டுகள்.
- ஓர் ஆண்டுக்கு 12 மாதங்கள்.
- ஒரு டசின் என்பது 12 உருப்படிகள்.
- ஓர் அடிக்கு 12 அங்குலங்கள்.
- ஒரு கலம் என்பது 12 மரக்கால் அளவு.
- தமிழில் உயிர் எழுத்துகள் 12.
- தமிழில் தொகுக்கப் பெற்ற திருமுறைகள் 12.
- குறிஞ்சிப் பூ 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும்.
- யேசுநாதரின் சீடர்களின் எண்ணிக்கை 12.

## மக்கள் மனங்களில் மறுசீரமைப்பு

# பெற்றோர்களே! விளையாட்டாய் விடலாமா...? அதிர்ச்சி தரும் ஆய்வு!

அண்மையில் எடுக்கப்பட்ட ஓர் ஆய்வில் கிடைத்த தகவல் இலங்கைக் குழந்தைகள் குறித்து அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சாதாரண கருத்துக்கு வலிமைசேர்க்கும் வகையில் இந்த ஆய்வு முடிவுள்ளது.

தொலைக்காட்சி, வீடியோ கேம், கணனி விளையாட்டுகள் வந்த பின்பு நம் குழந்தைகள் வீதிக்கு வந்து விளையாடுவதை விட்டு விட்டார்கள். பெற்றோர்கள் வெட்டவெளிக்கொட்டலுக்கு குழந்தைகளை அழைத்துச் சென்று விளையாடிய காலம் ஒன்று உண்டு. ஆனால், இன்றைய நிலை அப்படி இல்லை.

பெற்றோர்களே! தொலைக்காட்சி முன் அமர்ந்து கிரிக்கெட் பார்த்தால் குழந்தைகள் எப்படி வெளியில் போய் விளையாடும்? ஓடி ஆடி விளையாடும் உடற்பயிற்சி விளையாட்டு மரபு நம்முடையது. சென்ற நூற்றாண்டில் வந்து சேர்ந்த கால்பந்து, கைப்பந்து, ஹொக்கி, வலைப் பந்து, பூப்பந்து, கூடைப்பந்து போன்றவை கூட உடற்பயிற்சியை அளிக்கும் விளையாட்டுத் தான்.

கடந்த 15 ஆண்டுகளுக்கு முந்தைய 50 ஆண்டுகளில் பள்ளிகளில் இந்த விளையாட்டுகளை அன்றைய மாணவர்கள் விளையாடினார்கள். அதன் பயனாய் இன்று 70 வயது முதுமையிலும் சுறுசுறுப்பானவர்களை அதிகம் பார்க்கிறோம்.

ஆனால், இன்றைய இளைஞர்களின் நிலை என்ன? 20 முதல் 25 வயதுடைய இளைஞர்களில் பெரும்பாலும் உடல் வலுவில் இளைத்தவர்களாக இருக்கிறார்கள். நோயாளிகளாக இருக்கிறார்கள்.

காரணம் பள்ளிக்காலங்களில் கூட இவர்கள் விளையாட்டு மைதானங்களுக்குச் செல்லவில்லை. அப்படிச் சென்றாலும் அதிகம் ஓடாமலும், ஒரே இடத்தில் நின்று ஆடும் கிரிக்கெட்டை ஆடியவர்கள். அதன் விளைவே இத்தகைய சோகநிலை.



இதற்கும் அடுத்து தற்போதைய தலைமுறையைப் பற்றியதே இப்போது வந்திருக்கும் ஆய்வு. இலங்கை முழுவதுமுள்ள 54 நகரங்களில் 104 பள்ளிகளில் பயிலும் 7 முதல் 17 வயதுடைய 49,046 சிறுவர் சிறுமியரிடம் ஓர் ஆய்வு எடுக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் அறிந்த உண்மை இதுதான். 50 வீதம் விழுக்காடு சிறார்களுக்கு விளையாடும் உடற்தகுதி இல்லை என்பதுதான் அந்த அதிர்ச்சிக்குரிய உண்மை. 39.2 விழுக்காடு சிறார்களுக்கு body mass iedex எனச் சொல்லப்படும் உடலின் உயரத்திற்கேற்ற எடை அளவு சரியாக இல்லை அதாவது body mass iedex கணக்கீட்டின்படி தேவையான அளவு இல்லை. இவர்களில் 20 விழுக்காட்டினர் மிகவும் உடல் பருமனாக இருக்கின்றனர். இவரகளுக்கு நீரிழிவு, இதயநோய்கள் எளிதில் தாக்கும் அபாயம் இருக்கிறது.

ஒரு நாளைக்கு குறைந்தது 3 மணி நேரம் உடற்பயிற் சியை அளிக்கும் விளையாட்டுகளை விளையாடவேண்டும் என்பது உடலியல் நிபுணர்களின் கருத்து. ஆனால், பெரும்பாலான இந்தியப் பள்ளிகளில் விளையாட்டு மைதானங்கள் இருந்தும் கூட மாணவர்களை விளையாட பள்ளிகள் விடுவதில்லை.

விளையாட்டு வகுப்பு நேரங்களையும் படிப்புக்கே மாற்றிவிடும் போக்கு பெரும்பான்மையான பள்ளிகளிடம் உள்ளது. இதனால் பிற பொது இடங்களிலும் மாணவர்கள் விளையாடுவதில் ஆர்வம் காட்டுவதிலலை என்றும் அந்த ஆய்வு சுட்டிககாட்டுகிறது. மாறாக விளையாட்டினைப் பார்வையிடுபவர்களாக அவர்கள் மாறிவிட்டார்கள்.

இந்த நிலை நீடித்தால் இலங்கைக் குழந்தைகளின் எதிர்காலம் என்னவாகும் என்ற கவலை சமூக ஆர்வலர்களிடம் மேலோங்கி இருக்கிறது. திடமான உடல் பலமிருந்தால் உறுதியான உள்ளம் தானாகவே உருவாகிவிடும். மனித உயிரைக் காப்பது உடல்தானே!

அந்த உடல் உறுதி இல்லாமல் உருக்குலைந்தால் உயிர் நீடிக்குமா? இளம் சிறார்களுக்கு விளையாட்டுக்கு நேரம் ஒதுக்கித்தருவது பள்ளிகளின் கடமை மட்டுமல்ல: பெற்றோர்களின் கடமையும் தான்! எந்நேரமும் படிப்பு... படிப்பு.. என்றிருந்தால் உடலும் மனமும் வலுப்படுமா என்பதுதான் அடுதத தலைமுறையைப் பற்றி சிந்திப்போரின் கேள்வி.





## புதிர்ப் போட்டி 73



புதிர்ப்போட்டி 73 இற்குரிய விடைகள் அனுப்பவேண்டிய இறுதித் திகதி 25.01.2014

**அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் மூவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.**

### சரியான விடை எழுதி பாராட்டுப்பெறுபவர்கள் விபரம்

பெயர்:- சி.தேனுஜான்
பாடசாலை :- யா/ பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம்.

பெயர்:- வி.நிலேக்கா
பாடசாலை :- யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.

பெயர்:- யோ.தனுசன்
பாடசாலை :- யா/ நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்.

பெயர்:- இ.கஜிந்தன்
பாடசாலை :- கிளி/ கட்டைக்காடு அ.த.க.பாடசாலை.

01 தொடக்கம் 05 வரையுள்ள வினாக்கள் எழுத்துக்கள் உள்ள பின்வரும் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டவை. வினாக்களில் உள்ள சொற்களின் அதே கருத்துள்ள சொற்கள் இச்சட்டத்தில் மறைந்திருக் கின்றன. அச்சொற்களைக் கண்டுபிடித்துப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ப | னை | தி | ல் | லை | ந | க | ர் |
| தி | உ | ப | யோ | க | ம் | க | செ |
| நி | ந் | சொ | ல் | ட | ப | செ | வ் |
| ரு | தி | க | ப | ட | ம் | ரு | வ |
| ப | க | து | தி | க | தி | க் | ந் |
| ம் | வி | க | வி | ன் | ட | கு | தி |
| கா | ந் | த | ள் | கே | தா | ர | ம் |
| து | ம் | பி | மு | தி | ர் | ச் | சி |

1) கடிதம் (................)

2. பயன் (................)

3. அகங்காரம் (................)

4. வஞ்சகம் (................)

5. பக்குவம் (................)

6 தொடக்கம் 10 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் குறித்த ஒரு கோலத்தில் அமையும் சோடிச் சொற்கள் முதலில் தரப்பட்டுள்ளன. அதே கோலத்தில் அமையும் இரண்டாம் சோடியின் வெற்றிடத்தில் வர வேண்டிய சொல்லை இனங்கண்டு. அதனைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

6. துருவி - விருது - குலவி - (................)

7. கூலம் - காலம் - பூட்டு - (................)

8. லாபம் - பாலம் - மாசம் (................)

9. ஆரம் - ஈரம் - ஊகம் (................)

20. மூக்கு - மூச்சு - பத்து (................)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 கா | 2 வே | 3 ரி | | 4 ம | க் | 5 செ | 6 சே |
| 7 போ | லி | க் | | ட | | 8 க | ரி |
| ஐ | | | 9 கா | வ | ல | ன் | |
| 10 த | 11 தா | 12 க | த | ன் | | | 13 து |
| 14 ரே | டி | ய | ம் | | 15 பா | வ | ல் |
| ந் | | மு | | 16 ச | தி | | லி |
| | 17 யா | னி | 18 ய | ம் | | 19 ச | ய |
| 20 போ | லி | | 21 தி | சா | மு | க | ம் |

**மாணவர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்! புதிர்பபோட்டி வீடைகளுடன் உங்களது போட்டோப் பிரதி ஒன்றையும் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.**

### அனுப்பவேண்டிய முகவரி

*புதிர்ப்போட்டி இல --------*
*தினமுரசு*
*இல. 373, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*

### விண்ணப்பதாரரின் விபரம்

மாணவர் முழுப்பெயர்:- ----------------------------------------

பாடசாலையின் பெயர் :- ----------------------------------------

தரம் :- ----------------------------------------

தொலைபேசி இல :----------------------------------------

முகவரி :- ----------------------------------------

# யாழ். கல்வி வலயத்திலிருந்து 23 ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட 23 ஆசிரியர்கள் ஜனவரி முதலாம் திகதி முதல் புதிய பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக யாழ். வலய கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் அறிவித்துள்ளார்.

இதன்படி இடமாற்றம் செய்யப்பட்டுள்ள ஆசிரியர்கள் மற்றும் பாடசாலைகளின் விபரம் வருமாறு

கலாமதி கமலேந்திரன் யாழ். ஊரெழு கணேஷா வித்தியாலயம்) விஜயகுமாரி சிவபாலன் (யாழ். கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்) மைதிலி மார்க்கண்டு (யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை) ஏ.செபரட்ணராஜா (யாழ்.பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம்), ரி.யசோதை (யாழ். புனித திரேசா பெண்கள் கல்லூரி), ஜி.வி.ஜி.ஏ.ஜோஜியானா (யாழ். கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்), எம்.மனேந்திரன் (யாழ். நீர்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை), ஜெ.சிறீஸ்கந்தராசா (யாழ். கோப்பாய் நாவலர் வித்தியாலயம்), எம்.எம். ஜெயகீதன் (யாழ். புனித ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை) வீ.இந்துமதி(யாழ். உரும்பிராய் இந்துக் கல்லூரி), நிருபா இரட்ணவடிவேல் (யாழ். உயரப்புலம் மகாவித்தியாலயம்), ரி.திருலோகவிந்திரா (யாழ். கட்டைக்காடு மகா வித்தியாலயம்), வசந்ததேவி சண்முகநாதன் (யாழ். கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயம்), வீ.சதீஸ்குமார் (யாழ். கோண்டாவில் பரம்சோதி வித்தியாலயம்), வி.ஒளிவண்ணன் (யாழ்.கோண்டாவில் பரம்சோதி வித்தியாலயம்), ஏ.விமலன் (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), வி. அருளானந்தன் (யாழ். கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம்), வி.சதானந்தன் (யாழ். இந்து மகளிர் கல்லூரி), ஆர்.வல்லிபுரநாதன் (யாழ். சன்மார்க்க மகா வித்தியாலயம்), ஜி.ஆரூரன் (யாழ். நல்லூர் ஸ்தான சி.சி.த.கபாடசாலை), செலஸ்ரின் காயத்திரி அருள்நேசன் (யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்), எமிலிஜோலா தியானமுத்து (யாழ். புனித ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை), கலாமலர் சிறிதரன் (யாழ். கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை).

# அமாவாசை தின நிகழ்வு



(நெடுங்கேணி)

நெடுங்கேணி தெற்கு முதியோர் சங்கத்தினால் புதுவருடத்தை முன்னிட்டு மருவத்தூர் அம்மாவின் நல்லாசியுடன் மாதாந்தம் நடாத்தும் அமாவாசை தின நிகழ்வு கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

நெடுங்கேணி நாகதம்பிரான் கோவில் மண்டபத்தில் சங்கத்தின். தலைவர் விநாயகமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் புதுவருட தினத்தில் தனிமையில் இருக்கும் முதியோர்களை சந்தோசப்படுத்தும் வகையில் முதியோர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டு அவர்களுக்கு மதிய போசனம் வழங்கப்பட்டது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வவுனியா வடக்கு பிரதேசசெயலாளர் க.பரந்தாமன், வட மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன். நெடுங்கேணி வர்த்தக சங்கத்தலைவர். தேவராஜா பல நோககு கூட்டுறவு சங்கத்தலைவர் தேவராஜா. ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (40)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை புகையிரத திணைக்களத்தினால் யாழ். மாவட்டத்தின் எழுதுமட்டுவாள், மிருசுவில், மீசாலை, சங்கத்தானை, தச்சன்தோப்பு, புங்கன்குளம், கொக்குவில், இணுவில், மல்லாகம், தெல்லிப்பளை, மாவிட்டபுரம் போன்ற உப புகையிரத நிலையங்களுக்கு, உதவி புகையிரத நிலைய அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. க.பொ.த சாதாரண தரத்துடன் விண்ணப்பிக்க முடியும். இது நிரந்தரமான பதவி இல்லை எனினும் க.பொ.த சாதாரண தரத்துடன் உள்ளவர்களுக்கு உகந்ததாக இருக்கும். . சம்பளம் புகையிரத நிலையத்தின் வருவாய்க்கு ஏற்ப அதிகரிக்கப்படும் விண்ணப்பிக்க விரும்புவோர் 03.01.2014 ஆம் திகதிய வர்தமானியை பார்வையிடலாம்.(90)


# “அகரம்” கலை இலக்கிய நிறுவனத்தால் பாடலாசிரியர்களுக்கான பயிற்சி

இலங்கையின் கலை இலக்கிய வரலாற்றில் முதன் முறையாக “அகரம” கலை இலக்கிய ஊடக நிலையத்தினால் புதிய தலைமுறை கலைஞர்களை, படைப்பாளிகளை உருவாக்கும் செயற்றிட்டத்தின் முதற்கட்டமாக திரைப்பட பாடலாசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறையினை நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மிகவிரைவில் கொழும்பில் பிரமாண்டமான முறையில் நடைபெறவுள்ள இப் பயிற்சிப்பட்டறையில் திரைப்படத்தில் பாடல் எழுதும் நுட்பங்களையும் தன் அனுபவங்களையும் பிரபல கவிஞரும் திரைப்பட பாடலாசிரியரும் வசந்தம் தொலைக்காட்சியின் நிகழ்ச்சித் தயாரிப்பாளருமான பொத்துவில் அஸ்மின் வழங்க இருக்கின்றார்.

இந்நிகழ்வில் கலந்துகொள்ளும் அனைவருக்கும் தென்னிந்திய சினிமாவில் கால்பதிப்பதற்கான வழிகாட்டுதல்கள் வழங்கப்படுவதோடு பாடலாசிரியருக்கான பெறுமதியான சான்றிதழும் பதக்கமும் வழங்கப்படும். இப்பயிற்சிப்பட்டறையின்போது உருவாக்கப்படும் பாடல்கள் இசையமைக்கப்பட்டு இறுவட்டுக்களாக வெளியிடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.பயிற்சிப்பட்டறையில் திறமை காட்டும் பாடலாசிரியர்களுக்கு விருதுகளும் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சிப்பட்டறையில் வயது வேறுபாடின்றி கவிதைத்துறையில் ஆர்வமுள்ள அனைவரும் கலந்து கொள்ளலாம். விண்ணப்பங்களை அமைப்பாளர், “அகரம்” கலை -இலக்கிய -ஊடக நிலையம், இல.77, அருணோதய மாவத்தை ,ராஜகிரிய. என்ற முகவரிக்கும் அல்லது E-mail: agaramfm@gmail.com அல்லது 0771600795 என்ற தொலைபேசி இலக்கத்தோடு தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ளலாம். என அறிவிக்கப்பட்டுள்ளது.



கைதடி வடக்கு நவபுரம் ஊடாக மட்டுவில் சிவன்கோவில் செல்லும் 1.8 கிலோ மீற்றர் நீளமான பகுதி பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் புறநெகும திட்டத்தின் கீழ் 21.3 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது. (90)

# வாரம் ஒரு காரம்

## இந்த வருடமே தீர்வு

2014ஆம் ஆண்டு பிறந்த அதிகாலைப்பொழுதில் அனைவரிற்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் வகையில் பத்திரிகைத் தலைப்புச் செய்திகள் பிரசுரமாகி இருந்தன. அது யாதெனில் “சர்வதேச உதவியுடன் இந்த வருடமே தீர்வு” என தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுதியளித்துள்ளது. இது வரவேற்கத்தக்க அறிவிப்பு என்பதுடன் இது இந்த வருடத்துக்குள் அரங்கேறுமானால் அவர்களை நாம் போற்றவும் செய்யலாம். ஆனால், இந்த அரசியல்வாதிகள் முன்பு சொன்னதெல்லாம் நடந்ததா? என சிந்தித்தோமானால் அந்த செய்திகள் அக்கணமே வலுவிழக்கின்றன.

மாகாணசபை எமது கைக்கு வந்தால் இராணுவத்தை வடக்கில் இருந்து வெளியேற்றுவோம் என்றார்கள்... இன்னும் சூளுரைத்தபடியேதான் உள்ளார்கள். ஆளுநரை மாற்றுவோம் என்றார்கள்... ஆனால் இன்று முதலமைச்சரைத்தான் எங்கே என்று தேடும் நிலை உண்டாகி விட்டது. இவர்கள் நினைத்தாலும் செயற்படுத்தமுடியாத அதிகார மட்டுப்படுத்தல்களின் மத்தியில் வெறும் வேடிக்கை வாக்குறுதிகள்தான் அன்றும் இன்றும் மிச்சமாகி வருகின்றன. மாகாணசபை அதிகாரங்களைப் பயன்படுத்தி நிறைவேற்றுவோம் என்றார்கள் இப்போது சர்வதேச உதவியுடன் நிறைவேற்றுவோம் என்கிறார்கள். நாளை எதைக் கூற வேண்டும் என சிந்திப்பதுதான் ஊடகப் பேச்சாளர்களின் ஆற்றலில் தங்கியுள்ளது. இது ஒருபுறமிருக்க.

சர்வதேச நாடுகளின் உதவியுடனான தீர்வு எனக்கூறிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளர் சுரேஸ் பிரரேமச்சந்திரன் அது எப்படிப்பட்ட தீர்வு எனக் கூறவில்லை. மாகாண சபைத் தேர்தலிற்கு முன் கூறிவந்த வடக்குகிழக்கு இணைந்த சுயாட்சி என்பதை வைத்து இனிவரும் காலத்தில் மக்களையும் ஏமாற்ற முடியாது என்பது இவர்களிற்கே தெளிவாகிவிட்டது. தற்போது இவர்கள் உறுதியளித்துள்ள தீர்வு எப்படிப்பட்டது என்பதுதான் அன்றைய செய்தியின் முடியாத முன்னுரையாக இருந்தது.

இதுவும் ஒரு துருவத்தில் ஊடகப் பேச்சாளர்களின் ஆற்றலாக இருக்கலாம். “இதுவுமொரு தீர்வா? – எனும் போது இதைத்தான் நாம் உறுதியளித்தோம் என முடித்துவிடலாமல்லவா”

உண்மைக்கும் நேர்மைக்கும் சம்பந்தமில்லாத அரசியல் போக்குகள் ஆங்காங்கே அரங்கேறிவருகிறது. மக்களின் வலிகளை மறந்த அரசியல்வாதிகள் மனங்களில் தோற்றுவதையெல்லாம் பேசிவருகின்றார்கள். இறந்தவர்களிற்கு அர்த்தமற்ற இருண்டயுகமொன்று இன்று உருவாகியுள்ளது. மீண்டும் ஓர் இன அழிவினை தூண்டும் பொறுப்பற்ற அரசியல்வாதிகள் எமக்குள்ளே வலுப்பெற்றுள்ளனர். நடைமுறைக்கு சாத்தியமற்ற வியூகங்களை அடுத்த தேர்தலிற்கான நாடகங்களாக அரங்கேற்றுகின்றனர்.

அன்று தொட்டு இன்றுவரை சர்வதேசம் தீர்வைத் தேடித்தருமென எதிர்பார்த்திருக்க வைக்கப்பட்டோம். இறுதியில் என்ன நடந்தது? முள்ளிவாய்க்காலில் ஏற்பட்ட முழு அழிவினையும் சர்வதேசம் பார்த்துக் கொண்டுதானே இருந்தது. தற்போது மனித உரிமைகள் பற்றிப் பேசி என்ன பயன்? அழிவுகள் நடந்துவிட்டதே. ஓர் ஜனநாயக நாட்டில் அதனது இறைமைக்கு அப்பால் சர்வதேச நாடுகளின் தலையீடு என்றுமே இருக்காது. கண்ணாடிக்கூட்டிற்குள் இருந்து அவர்களால் கல்லெறிய முடியாது.

மனித உரிமை மீறல்களும், இன அழிப்புக்களும் இலங்கையில் மாத்திரம் நிகழ்ந்தன அல்ல. ஒவ்வொரு நாடுகளிலும் பல்வேறு மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வருகின்றன. ஒவ்வொரு நாட்டு அரசியல் பின்னணியிலும் மனித உரிமைக் குற்றங்கள் உள்ளன: உதாரணமாக பிரிட்டன் பிரதமர் கமரூன் பலதையும் பத்தையும் பேசினார். ஆனால் அவரின் அரசியல் பின்னணியில் பல குற்றச்சாட்டுக்கள் உலகளாவிய ரீதியில் உள்ளது. ஆகவே “பொல்லுக் கொடுத்து அடி வாங்கும்” செயற்பாட்டை எந்த ஓர் நாடும் உருவாக்கிக் கொள்ளாது. இலங்கையின் இறைமைக்குள் தலையிட்டு வில்லங்கத்தை விலைக்கு வாங்காது.

வெறும் வெட்டிப்பேச்சும் வீர வசனமும் பேசும் அரசியல் சூழல் இலங்கையில் தற்போது தமிழரிற்குத் தேவையில்லை. அதில் பிரச்சினையைத் தீர்க்கும் விவேகம் இல்லை. சாதுரியமாக சிலவற்றை வென்றெடுக்கக் கூடிய அரசியல் திட்டங்களையே நாம் வகுக்க வேண்டும். முதலில் பிரசார வீரஅரசியல் அறிக்கைகளை தமிழ் அரசியல் வாதிகள் நிறுத்தவேண்டும். தீர்வினை நாம் திருத்தமாக அணுகவேண்டும். அடுத்தவரை நம்பி நாம் பட்ட அவதிகள் போதும். பொறுப்புடன் சிந்தியுங்கள் பெரும் போரை மீண்டும் மூட்டாதீர்கள். – **வெண்கட்டியன்.**

# சாதனை மாணவர்களின் உள்ளத்திலிருந்து.....

## சிவானந்தன் நிதுர்சன்



யாழ்.ஹாட்லிக் கல்லூரி
உயிரியல் பிரிவு -A 2B
மாவட்ட நிலை : 33
தேசிய நிலை: 955

நான் குழுவாக நண்பர்களுடன் இணைந்து கற்றதாலேயே இப்பெறுபேற்றைப் பெற முடிந்தது. மாணவர்கள் கஷ்டப்பட்டு நம்பிக்கையுடன் கற்கவேண்டும். ஆசிரியர்களையும் பெற்றோரையும் மதித்து நடக்கவேண்டும்.

நான் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 135 புள்ளிகளையும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 9 ஏ பெறுபேற்றையும் பெற்றேன்.

எனது தந்தை வர்த்தகர். நான் ஆசிரியர் மற்றும் பெற்றோரின் ஆலோசனையுடன் கற்றேன். அதிகமாக பயிற்சிகள் தான் செய்வேன். நண்பர்கள் ஒத்துழைத்தனர். அந்தவகையில் நான் இப்பெறுபேற்றை பெற்றதையிட்டு அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

## சிறீகாந்தரங்கநாதன் தினேஷ்

யாழ்.ஹாட்லிக் கல்லூரி
கணிதப் பிரிவு -3A
மாவட்ட நிலை : 35
தேசிய நிலை : 591



குறிக்கோளுடன் கற்றால் பரீட்சையில் நிச்சயம் வெற்றிபெறலாம். அந்த வகையில் நான் கற்கின்ற விடயங்களை சிறு குறிப்பெடுத்து கற்பேன். அத்துடன் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் அதிக ஆர்வத்துடன் ஈடுபடுவேன்.

நான் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 153 புள்ளிகளையும் க.பொ.த சாதாரண பரீட்சையில் 4ஏ, 4பி, சி பெறுபேற்றையும் பெற்றேன். எனது சகோதரன் வயம்ப பல்கலைக்கழகத்தில் படிக்கின்றார்.

எனக்கு தாய் தந்தை இல்லை. சித்தியுடன் இருக்கின்றேன். அவர் ஆசிரியராக கடமையாற்றுகிறார். அவர் எனது கல்விக்குமிக ஒத்துழைப்பு வழங்கினார். நான் இப்பெறுபேற்றை பெற்றதற்கு அதிபர் ஆசிரியர்கள் மற்றும் சக மாணவர்களுடன் எனது சித்தியும் காரணமாகும். அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

## அழகராசா ஜெயஈஸ்வரன்

யாழ்.ஹாட்லிக் கல்லூரி
வர்த்தகப்பிரிவு -2A C
மாவட்ட நிலை : 18
தேசிய நிலை : 1537




தந்தை இல்லை. க.பொ.த சாதாரண தரத்தில் சித்தி பெற்று உயர்தரத்திற்கு வரும்போது பாடரீதியான துறைத் தெரிவு முக்கியம். தினமும் படிக்கவேண்டும்.

அந்தவகையில் நான் விடாமுயற்சியுடனும் நம்பிக்கையுடனும் கற்றேன். அதன்மூலமே இப்பெறுபேற்றைப் பெற முடிந்தது. நான் இப்பெறுபேற்றை பெற்றதையிட்டு அதிபர், ஆசிரியர்கள், சகமாணவர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்

திட்டமிட்டுக் கற்றல். ஆசிரியர்களை நம்பிக் கற்றல் வேண்டும். கைத்தொலைபேசி இணையம் என்பவற்றை கற்கும் காலத்தில் தவிர்க்க வேண்டும். நம்பிக்கையுடன் கற்றால் வெற்றி பெறலாம்.

## கமலநாதன் பிரஷாந்

யாழ்.ஹாட்லிக் கல்லூரி
கணிதப் பிரிவு -2AB
மாவட்ட நிலை : 28
தேசிய நிலை : 473



தொடர்ந்து முயற்சித்தால் நிச்சயம் வெற்றி பெற்று விடலாம். நம்பிக்கையுடனும் விடாமுயற்சியுடனும் கற்றல் வேண்டும். அந்தவகையில் நான் முதல் தடவை தோற்றினேன். எதிர்பார்த்த பெறுபேறு கிடைக்கவில்லை.

எனினும் ஆசிரியர்கள் சக மாணவாகளின் ஒத்துழைப்பும் அக்கறையுமே நான் இரண்டாவது தடைவை பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றதற்கு காரணமாகும். நான் தரம் 5 புலமைப்பரிசில் பரட்சையில் 136, புள்ளிகளையும், க.பொ.த சாதாரணப் பரீட்சையில் 9ஏ பெறுபேற்றையும் பெற்றேன். எனது தந்தை கல்வியியற் கல்லூரி விரிவுரையாளராகவுள்ளார்.

தொகுப்பு : கணாநாதன்

க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்த மாணவர்களில் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவர்கள் தமது சாதனை பகிர்வை தினமுரசில் வெளியிடவிரும்பினால் 0777193264, என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

# நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கவேண்டும்



(கொழும்பு)

நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதிமுறை ஒழிக்கப்பட வேண்டும் என கொழும்பு கோட்டை பிரதம தேரர் கலாநிதி மாதுலுவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

கலாநிதி ரி.பி.ஜாயாவின் 124 ஆவது வருட நினைவுச் சொற்பொழிவு நேற்று முன்தினம் கொழும்பு முஸ்லிம் பெண்கள் கல்வி வட்ட நிலையத்தில் நடைபெற்றது. இவ் வைபவத்தில் பிரதம பேச்சாளராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு உரையாற்றுகையில்,

இந்த நாட்டிற்கு சுதந்திரம் பெற்றுத் தந்த தலைவர்களுள் ஒரு சிரேஷ்ட தலைவர் ரீ.பி. ஜாயா ஆவார். அவர் போன்ற தலைவர் இந்த நாட்டில் இன்னும் எந்தச் சமூகத்திலும் உருவாகவில்லை. இந்த நாட்டின் அரசியல் முறையில் உள்ள அதிகாரம் பெற்ற ஜனா திபதி முறைமையை நாம் ஒழிக்க வேண்டும்.

அதற்காக முஸ்லிம்களாகிய நீங்களும் அணிதிரளவேண்டும். இந்த நாட்டில் உள்ள சுயாதீன தேர்தல், பொலிஸ், நீதி நியாயம், கல்வி மற்றும் நிர்வாக முறைமைகளை மாற்றியமைப்பதற்கு முன்வாருங்கள்.

என கோட்டே பிரதம தேரர் கலாநிதி மாதுலுவே சோபித்த தேரர் அழைப்பு விடுத்தார்.

நெல்சன் மண்டேலா போன்றோர் தென்னாபிரிக்காவில் சகல சமூகங்களும் சமமாக வாழ்வதற்காக ஏற்படுத்திக் கொடுத்த அரசியல் முறைமை போன்று இலங்கையிலும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

ரி.பி. ஜாயா பௌத்த பாடசாலையான ஆனந்தக் கல்லூரியை ஆசிரியராக சேவையாற்றும்போது அப் பாடசாலை நிர்வாகம் பிலிப் குணவர்த்தனவை அகற்ற முற்படும்போது தன்னையும் சேர்த்து விலக்குமாறு ஜாயா கேட்டுக்கொண்டார். அதற்காக பிலிப்குணவர் தனவை்யை அப்பாடசாலையில் இருந்து அகற்றாமல் அவரோடு சேர்ந்து சேவையாற்ற பாடுபட்டவர் ஜாயா.

அவர் போன்ற தலைவர்கள் தற்காலத்தில் நமது நாட்டில் இல்லை. இந்த நாட்டில் உள்ள பொலிஸாரைக்கூட நாம் நம்ப முடியவில்லை. அவர்களே போதைப் பொருள் விற்பவர்கணளாக மாறியுள்ளனர். இந்த நாட்டில் உள்ள இலஞ்ச ஆணைக் குழுத் தலை வரையே கைது செய்ய வேண்டிய நிலை உருவாகியுள்ளது என்றார்.

# வங்கி ஊழியர் வடிவிலும் மோசடி
# 50 ஆயிரத்தை இழந்தார் கிராமப்பெண்

தனியார் வங்கியின் வெளிக்கள உத்தியோகத்தர் எனத் தனனை அறிமுகப்படுத்திய பெண்ணொருவர் கிராமப்புற பெண்ணொருவரிடம் கடனட்டையை மோசடி செய்து 50 ஆயிரம் ரூபாவை அபகரித்துச் சென்றுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக கலேவெல பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கலேவெல பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வலஸ்வெவ கிராமத்தில் வசிக்கும் சீலவதி என்ற குடும்பப் பெண்ணின் வீட்டிற்குப் “பைல்”களுடன் சென்ற நடுத்தர வயதுப் பெண்ணொருவர் பிரபல தனியார் வங்கியொன்றின் பெயரைக் குறிப்பிட்டு அவ்வங்கியின் கடன் பிரிவில் வெளிக்களப் பிரிவின் உத்தியோகத்தரெனத் தனனை அறிமுகம் செய்துள்ளார்.

மிகவும் குறைந்த வட்டியில் 10 இலட்சம் ரூபா பணத்தை இரண்டே வார காலத்தினுள் கடனாகப் பெற்றுக் கொள்ளலாம் என சீலவதிக்கு ஆசைகாட்டி 10 இலட்சம் ரூபா கடனைப் பெறுவதற்கு இணக்கத்தைப் பெற்றுள்ளார்.

குறித்த தனியார் வங்கியில் கணக்கொன்றை மறுதினமே ஆரம்பித்து 50 ஆயிரம் ரூபாவை வைப்பிலிடுமாறும் பணத்தை மீளப்பெறுவதற்கான “கடனட்டை” ஒன்றையும் தவறாது பெற்றுக் கொள்ளுமாறும் ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

இதனையடுத்து கிராமப் பெண் எவ்வாறோ 50,000 ரூபாவை தேடிப் பெற்று வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டு விட்டு வங்கி ஊழியர் போல் நடித்த பெண்ணிடம் தகவலை வழங்கியுளளார்.

மறுநாள் விரைந்து வந்த போலி வங்கி ஊழியப் பெண் சீலவதியிடம் இருந்த வங்கி அட்டையை ஒருவாறாகப் பெற்றுச்சென்று வங்கியிலிருந்த ரூ. 50,000 ரூபா பணத்தையும் எடுத்துள்ளார்.

குறித்த வங்கிக்கு சீலவதி கடன் பெறுவதற்காகச் சென்றபோது அவ்வாறானதொரு பெண ஊழியர் அங்கு வேலை செய்வதில்லை எனத் தெரிய வந்து வந்துள்ளது.

# இளைஞர்களின் அட்டகாசம்

மூளாய் மேற்கு பகுதியில் மாலை வேளையில் இளைஞர்கள மதுபோதையில் அட்டகாசம் செய்வதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அப்பகுதியால் போக்குவரத்தினை மேற்கொள்ளும் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களை அவர்கள் அவதூறான வார்த்தைகளைப் பிரயோகித்து பேசுகின்றனர்.

அவர்கள் பயன்படுத்திய வெற்றுப்போத்தல்களையும், பீங்கான் போத்தல்களையும் அருகில் உள்ள வீடுகளில் எறிந்து விட்டுச் செல்வதாகவும் அங்குள்ள மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேணடும் எனவும் அவர்கள் கோருகின்றனர். (சி)

# 14 ஆயிரம் யூரோவை கடத்தியவர் கைது

இந்தயா - மும்பையில் இருந்து இலங்கைக்கு சட்ட விரோதமாக யூரோ நாணயத் தாள்களை கொண்டு வர முயன்ற நபரை போதைப் பொருள் தடுப்பு பொலிஸார் கட்டு நாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர் கல்முனையைச் சேர்ந்த 32 வயதுடையவராவார். தனது கைப்பையில் 14 ஆயிரம் யூரோ நாணயத்தாள்களை மறைத்து வைத்துக்கொண்டு வரும்போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவற்றின் பெறுமதி 25 இலட்சம் ரூபா எனவும் சந்தேக நபரை மேலதிக விசாரணைக்காக சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# இளம் சமூகத்தின் விரக்தியை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்

(கொழும்பு)


வடக்கில் இளைஞர்கள் வனமுறைகளில் ஈடுபட்டமைக்கு, இளைஞர்களின் விரக்தியே காரணம் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பின்மை, போதிய அரச சேவைகள் இன்மை போன்றவற்றால் விரக்தி நிலைமை ஏற்பட்டிருந்தது.

இதன்காரணமாகவே வடக்கை போன்று, தெற்கிலும் இளைஞர்கள் வன்முறைகளில் ஈடுபட்டனர்.

ஆனால் தற்போது இந்த விரக்தி நிலையை போக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக ஜனாதிபதி இதன்போது தெரிவித்துள்ளார்.



# தரம் 9- 10 மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்
# Grade 9- 10 Examination model Paper

## தமிழ்மொழியும் இலக்கியமும்

1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

**பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01) "அடையா நெடுங்கதவு **மஞ்சலென்ற** சொல்லும்" இங்கு அஞ்சல் என்பதன் பொருள்
1) தெளிவு 2) பயம் 3) மயக்கம் 4) துணிவு

02) "**கண்ணிமைத்த லாலடிகள் காசினியில் தோய்தலால்**" காசினி என்பதன் கருத்தாவது
1) ஆகாயம் 2) பொய்கை 3) பூமி 4) விண்

03) "**கண்ணகல் ஞாலம் களிகூர்**" இங்கு களி என்பதன் எதிர்க்கருத்து
1) துன்பம் 2) மகிழ்ச்சி 3) வலிமை 4) புன்னகை

04) அவனின் கண்கள் நியாயத்தைப் பேச நிலை குத்தி நின்றன. நியாயம் என்பதன் எதிர்ப்பொருட் சொல்.
1) அநியாயம் 2) நிம்மதி 3) நியமம் 4) நீதி

05) பாலகன் செய்வதறியாது திகைத்து நின்றான். பாலகன் என்பதன் பெண்பாற் சொல்
1) குழந்தை 2) பாங்கை 3) சிறுமி 4) பாலகி

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

06) அன்பு, நாண், ஒப்பரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் குணங்களைச் சேர்ந்த பண்பு
1) சால்பு 2) ஐவகை குணம் 3) குரவா 4) ஐம்பொருள்

07) வாழையில் பிஞ்சு கச்சல், நெல்லின் இளமைப் பெயர்
1) கன்று 2) நாற்று 3) சதை 4) தாள்

08) ஐம்பதாம் ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா
1) வைர விழா 2) மணி விழா 3) பொன் விழா 4) வெள்ளிவிழா

09) விடம், ஒரு மரம், மழை என்ற பல பொருள் குறிக்கும் ஒரு சொல்
1) நஞ்சு 2) ஆலம் 3) தரும் 4) நீர்

10) மறை, சுருதி, ஆரணம் என்ற சொற்கள் தரும் பொருள்
1) வேதம் 2) மாலை 3) இசை 4) காடு

11) குழந்தைப் பருவத்தைக் குறிக்க மிகப் பொருத்தமான அருஞ்சொற்றொடர்
1) துள்ளித் திரிகின்ற காலம்
2) குறு குறு நடந்து குதலை மொழியும் காலம்.
3) நரை திரை மூப்புறு காலம்.
4) படபடக்கும் காலம்.

12) சிறுவனுக்கு எனேமியா (Anemia) ஏற்பட்டுள்ளது என்று வைத்தியர் கூறினார். எனேமியா என்ற சொல்லின் தமிழ்ச்சொல்
1) தொற்றுநோய் 2) குடல்நோய்
3) குருதிச்சோகை 4) வாந்திபேதி

13) ச்னக்கூட்டம் என்பது போல தோழியர்
1) கும்பல் 2) திரள் 3) ஆயம் 4) படை

14) நிறுத்தக் குறிகளில் விட்டிசைக் குறி எனப்படுவது
1) : 2) இ 3) - 4) ˙

15) உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்யலாகாது. இரண்டகம் என்பதன் கருத்து
1) துரோகம் 2) இரண்டு வேலை 3) பரிவு 4) வெறுப்பு

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

16) வெளிப்படையாகக் கேட்டல் என்ற பொருள் அமைந்த மரபுத் தொடராவது,
1) வாய்விடுதல் 2) வாய் மூத்தல்
3) வாய் திறத்தல் 4) வாய்பூட்டுப் போடுதல்

17) "முகம் புகுதல்" என்ற மரபுத்தொடரின் பொருள்
1) உடன்படல் 2) விரும்புதல்
3) முகம் கழுவுதல் 4) எதிர்ச்சென்று நிற்றல்

18) தருமம் செய்து கெட்டவர்கள் இல்லை என்ற கருத்தைத் தரும் பழமொழி
1) தருமம் தலைகாக்கும் 2) தருமம் வாழ வைக்கும்.
3) இட்டுக்கெட்டார் எங்குமில்லை 4) புண்ணியம் ஏழு பிறவி தொடரும்

19) கொடுக்கக் கொடுக்கக்கூடுமே என்ற கருத்தைத் தரும் உவமைத் தொடர்
1) சூரியனைக் கண்ட தாமரை போல
2) தொட்டனைத் தூறும் மணற் கேணி போல
3) அள்ளி இறைத்தாற் போல
4) அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல

20) அச்சாணியில்லாத தேர் முச்சாணும் ஓடாது என்ற பழமொழியின் உட்கருத்து
1) தேரின் மகிமை 2) ஓடாத தேர்
3) முக்கியத்துவம் 4) அசைவு

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

21) இடைச்சி என்பதில் இடம்பெற்றுள்ள இ என்பது
1) சாரியை 2) விகுதி 3) விகாரம் 4) சந்தி

22) மரம் வேரோடு சாய்ந்தது. இங்கு இடம்பெற்றுள்ள வேற்றுமை.
1) நான்காம் 2) மூன்றாம் 3) ஆறாம் 4) ஐந்தாம்

23) பின்வருவனவற்றுள் ஆக்கப் பெயராவது
1) எலிவ்ளை 2) மண்வெட்டி 3) தொழிலாளி 4) ஏவுகணை

24) பின்வருவனவற்றுள் பெயரும் வினையும் சேர்ந்த கூட்டு வினைக்கு உதாரணம்
1) தந்தியடி 2) கண்காட்சி 3) காட்டிக்கொடு 4) புத்திசாலி

25) பின்வருவனவற்றுள் தொழிற் பெயரல்லாதது
1) ஆடுதல் 2) சாக்காடு 3) போக்கு 4) படித்தான்

26) தேவாரம் என்ற சொல்லை பிரித்தால்
1) தே + வ் + ஆரம் 2) தேவு + ஆரம்
3) தேவார் + அம் 4) தே + வாரம்

27) மன்னர் புறநகரைச் சுற்றிப் பார்த்தார். புறநகர் என்பது
1) மரூஉ 2) இலக்கணப் போலி
3) எழுத்துப் போலி 4) இலக்கணமுடையது

28) வல்லினம் மிகுதலுக்கு உதாரணம்
1) நடு + தெரு 2) அ + ஞானம்
3) அ + நூல் 4) பனை + ஓலை

29) அந்தக் கிழத்தைப் பார்த்து கண்ணம்மா பெருமையால் பொருமினாள் இங்கு இடம்பெற்றுள்ள வினைச்யெச்சமாவது
1) அந்த 2) பார்த்து 3) பெருமை 4) ஆல்

30) மரத்தின் கிளை முறிந்தது. இங்கு இடம்பெற்றுள்ள ஆகுபெயராவது
1) இடவாகு பெயர் 2) தொழிலாகு பெயர்
3) சினையாகு பெயர் 4) பொருளாகு பெயர்

**பின்வருவனவற்றுள் எழுத்துப் பிழையற்ற வாக்கியமாவது**

31) 1) உலக வழக்கில் தளர்ச்சியின்றி முன்னேறி வருவது தாய்மொழியாகும்.
2) உலக வலக்கில் தளர்ச்சியின்றி முன்னேறி வருவ்து தாய்மொழியாகும்.
3) உலக வழக்கில் தலர்ச்சியின்றி முன்னேறி வருவது தாய்மொழியாகும்.
4) உலக வழக்கில் தளர்ச்சியின்றி முன்னேரி வருவது தாய்மொழியாகும்.

32) 1) இயங்குகின்ற இயந்திரத்துக்கு எண்ணய் போட்டால் அது தடங்கல் இன்றி இயங்கும்.
2) இயங்குகின்ற இயந்திரத்துக்கு எண்ணெய் போட்டால் அது தடங்கல் இன்றி இயங்கும்.
3) இயங்குகின்ற இயந்திரத்துக்கு எண்ணை போட்டால் அது தடங்கல் இன்றி இயங்கும்.
4) இயங்குகின்ற இயந்திரத்துக்கு எண்ணெய் போட்டால் அது தடங்கல் இன்றி இயங்கும்.

**பின்வரும் வினாக்களிலுள்ள வாக்கியத்தின் முற்பகுதிக்கு மிகப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

33) நோதலும் தணிதலும் பிறரால், வருவன
1) அல்லவே 2) அல்ல 3) அன்று 4) தானே

34) யானைக் கூட்டங்கள் காட்டை நோக்கி
1) நகர்ந்தது 2) நகர்கின்றது 3) நகரும் 4) நகர்ந்தன

35) ஒவ்வொரு பாடலும்
1) இனிமையானது 2) இனிமையானவை
3) இனிமையதே 4) இனிமையுடையவை

36) அவள் அழகுக்கும் கற்புக்கும் அரசியென்று மாதர்களாற்
1) பாராட்டினர் 2) பாராட்டினார்கள்
3) பாராட்டப்பட்டது 4) பாராட்டப்பட்டாள்

**பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

37) இவ்வாண்டின் பின்னரைப் பகுதியில் .................. மிதமடைகின்ற தன்மை காணப்பட்டது.
1) பணவீக்கத்தில் 2) ஏற்றுமதி
3) இலாபம் 4) நட்டம்

38) தேசிய .................. என்ற அடிப்படையிலான தீர்வுக்கு நாம் செல்ல வேண்டும்.
1) ஒற்றுமை 2) இணைப்பு 3) சுயநிர்ணயம் 4) பாதுகாப்பு

39) தமது கோரிக்கைகள் அடங்கிய .................. அமைச்சரிடம் கையளித்தனர்.
1) அறிக்கையை 2) மகஜரினை
3) வேண்டுகோளை 4) குறிக்கோளை

**சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. பந்தியை அமைப்பதற்கு மிகப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.**

40) அ - அவர்கள் குகைகளில் வாழ்ந்தனர்
ஆ - இவ்வாறான வாழ்க்கையை வாழ்ந்தவர்கள் படிப்படியாக முன்னேறினர்.
இ - உணவை சமையாது உண்டனர்.
ஈ - ஆதிகால மனிதர் நாகரிகமற்றவர்களாய் வாழ்ந்தனர்
உ - முதன் முதலாக நெருப்பைக் கண்டு பிடித்து முன்னேற்றமடைந்தனர்.

1) ஈ, அ, இ, ஆ, உ
2) இ, அ, ஆ, உ, ஈ
3) அ, ஈ, இ, உ, ஆ
4) ஈ, இ, அ, ஆ, உ

## பகுதி II

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
**இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.**

**01. சுருக்கமான விடை எழுதுக.**

1) பின்வரும் தொடரைப் பிரித்து எழுதுக.
விண்ணரச ரெல்லாம் வெள்கி மனஞ்சுளிக்கக்

2) பாரதி குயில்பாட்டு எழுதினான். இதனை செயப்பாட்டு வினை வாக்கியமாக எழுதுக.

3) (அ) பகுபதம் என்றால் என்ன?
(ஆ) பகுதி, விகுதி, இடைநிலை வர உ + ம் தருக.

4) பின்வருவனவற்றுள் கருத்தில் வேறுபடும் தொடர் யாது?
மூலை முடுக்கு, சந்துபொந்து, சின்னஞ்சிறிய, வரவு செலவு

5) சுருக்கத்தில் தவிர்க்க வேண்டிய விடயங்கள் இரண்டு தருக.

6) தன்வினையும், பிறவினையும் வர வாக்கியங்கள் எழுதுக.

7) செய்து, படித்து, நடிக்கும், நின்ற, நடந்து, ஓடும்
பெயரெச்சம், வினையெச்சம் என வகைப்படுத்துக.

8) பின்வருவனவற்றுள் மரபுத் தொடர்புகளை எழுதுக.
அருமையாதல், கண்விடல், அடிபிறக்கிடல், இடம் பெயர்தல்

9) வில்லுப் பாட்டின் உறுப்புக்களாக அமைந்த இசைக்கருவிகள் யாவை?

10) தொழிற்பெயர் விகுதிகள் நான்கு தருக.

**02) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கள் இடுக.**

(அ) தொழிற்கல்வியின் அவசியம், தொழிலின்றி வளமில்லை. தொழிற்கல்வி மூலம் உற்பத்தி அதிகரிக்கும். வாழ்க்கைத்தரம் உயரும் வகையில் விளக்கக் கட்டுரை எழுதுக.

ஆ) வாசிப்பின் முக்கியத்துவம், வாசிப்பு வீதம் மிகவும் குறைந்து வருகின்றது. இதனால் ஏற்படும் விளைவு பற்றிய உரையாடல்.

இ) இன்று முதியோர் இல்லம் அதிகரித்து வருகின்றது. பிள்ளைகள் பெற்றோர்களை அநாதை இல்லத்தில் விட்டுவிட்டு சுதந்திரமாக வாழ்கின்றனர். இது தவறு என்ற ரீதியில் மேடைப்பேச்சு.

ஈ) பெற்றோரை இழந்த கமலன் திக்கற்றவனாகத் திகழ்கின்றான். கல்வியிலும் கெட்டிக்காரன். கமலனை நண்பன் ஒருவன் அவனது வீட்டிற்கு அழைத்துச் செல்கிறான். பெற்றோருடன் கதைத்து ஒரு முடிவுக்கு வருவது தொடர்பான சிறுகதை ஒன்றினை எழுதுக.

**03) கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 35 - 40 சொற்களில் அமையுமாறு எழுதுக.**

புராதனம் என்பதற்காக அனைத்தையுமே நான் வேறுபாடின்றிக் கண்மூடித்தனமாய்க் கொண்டாடுகிறவன் அல்லன். எவ்வளவு புராதனம் உடையவனாய் இருப்பினும் நல்லொழுக்கத்திற்குப் புறம்பானவையாயும் தீயனவாயும் இருக்கின்றவற்றை அழிக்க முயலுவதில் நான் சிறிதும் தயங்குவதில்லை. புராதனமாய் உள்ள நிலையங்களைக் கௌரவிப்பவன் நான். சிலர் புராதனமாக உள்ளவற்றைப் புறக்கணிப்பது எனக்கு வருத்தத்தைக் கொடுக்கிறது.

நவீன நாகரிகம் என்னும் மோகத்திலே மயங்கி, புராதன பழக்கவழக்கங்கள் யாவற்றையுமே அவர்கள் இகழ்ந்து ஒதுக்குகிறார்கள். நமது முன்னோரின் நடையுடை பாவனைகள் யாவும் மூடப்பழக்க வழக்கங்களின் குவியல்களைத் தவிர வேறில்லை எனக் கீழைத்தேசத்தவராகிய நாம் அவசரப்பட்டு எண்ணி விடுகின்றோம். அவர்களிடம் மதிப்பிட முடியாத பொக்கிஷங்கள் பல இருக்கின்றன.

அவற்றிலே மூடப்பழக்க வழக்கங்கள் இருப்பினும், அளவிட முடியாத சிறந்த அம்சங்களும் இருக்கத்தான் செய்கின்றன. எனவே புராதனமானவற்றில் மூடப்பழக்க வழக்கங்கள் அல்லாதவற்றை நன்கு புரிந்து கொண்டு, அவற்றை வாழ்க்கையில் கடைப்பிடிப்போமானால், அவை ஒருவனுக்கு நல்வாழ்வைத் தந்து அவனை மேன்மைப்படுத்தும். எனவே, மயக்கந் தருகின்ற மேலைநாட்டு வெளிப்பகட்டைக் கண்டு நாம் ஏமாந்து போகாமல் இருப்போமாக!

**04) பின்வரும் பாடலை வாசித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பூரணமான வாக்கியங்களில் விடை எழுதுக.**

தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

கமழும் மறுமலர்ச்சித் தேன் சொரிந்தே
ஞாலமீ திருபதாம் நூற்றாண்டில் - தமிழ்
நாடடிற் புதுமை செய்த ஞான கவி

உள்ளத் துணர்ச்சி பொங்கப்பாடுங் கவிஞன் - உடல்
உதிரம் கொதித் துருகப் பாட்டினிலே
வீரக் கனல்பறக்கப் பாடுங்கவிஞன்

1) இப்பாடல் யாரைப் பற்றி கூறப்படுகிறது? அவர் எத்தனையாம் நூற்றாண்டில் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது?

2) ஞானகவி எவ்வாறான பாடலைப் பாடியதாகக் கூறப்படுகிறது?

3) இப்பகுதியில் வருகின்ற அணி எது? விளக்குக.

4) இக்கவிஞர் நாட்டிற்கு என்ன செய்ததாகக் கூறப்படுகிறது?

5) கனல், உதிரம் என்பவற்றிற்கு பொருள் தருக.

05) அரசாங்கம் பாடசாலை மாணவர்களுக்கு சீருடைகளை இலவசமாக வழங்கி வருவதோடு, பாடப் புத்தகங்களையும் வழங்கி மாணவர்களை கல்வியில் நாட்டம் செலுத்தப் பாடுபடுகிறது. கல்வியின் பயன்பாடு மாணவர்களுக்காக அரசாங்கம் காட்டும் அக்கறை என்பவற்றை வலியுறுத்தி 100 சொற்களில் பத்திரிகைக்கு ஒரு கடிதம் எழுதுக.

*அல்லது*

டெங்கு நோய் பரவுவதால் பல உயிர்கள் அழிந்த வண்ணம் உள்ளன. இதனை இல்லாது செய்ய நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி 100 சொற்களில் துண்டுப்பிரசுரம் ஒன்று எழுதுக.

# புலமைப் பரிசில் மாணவர்களுக்கான பொதுஅறிவு

## நிறுவனங்களும் இலட்சினைகளும்

நிறுவனங்கள் பலவித நோக்கங்களைக் கொண்டு இயங்குகின்றன. அவை தமது செயற்பாட்டை வெளிப்படுத்தும் விதமான இலட்சினைகளைக் கொண்டுள்ளன.

**அரச நிறுவனங்கள்**

வீதி அபிவிருத்தி அதிகாரசபை

இலங்கை மின்சார சபை

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

சமுர்த்தி அதிகார சபை

மத்திய சுற்றாடல் அதிகார சபை

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை

இலங்கைத் துறைமுக அதிகார சபை

இலங்கை கட்டளைகள் நிறுவனம்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை

நகர அபிவிருத்தி அதிகாரசபை

இலங்கை சுற்றுலாச் சபை

நாடாளுமன்ற செங்கோல்

ஊழியர் நம்பிக்கை நிதிய சபை

**வங்கிகள்**

இலங்கை வங்கி

மக்கள் வங்கி

தேசிய சேமிப்பு வங்கி

ஹற்றன் நஷனல் வங்கி

கொமர்சல் வங்கி

சம்பத் வங்கி

ஐக்கிய நாடுகள் சபை

சர்வதேச தொழிலாளர் நிறுவனம்

# குற்றச்செயல் புரிந்த 215 பேர் யாழ்.குடாவில் கடந்த வாரம் கைது

(யாழ்ப்பாணம்)

கடந்தவாரம் யாழ். மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுகளில் நீதிமன்றப் பிடியாணையின் பிரகாரமும் பல்வேறு குற்றச்செயல்களின் நிமித்தமும் 215 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருப்பதாக யாழ். உதவிச் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் பெரேரா தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ் பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டே அவர் இந்த விபரத்தை வெளியிட்டார்.

மேலும் இந்த செய்தியாளர் சந்திப்பில் தகவல் வெளியிட்ட அவர்,

யாழ் மாவட்டத்தில் தொடர்ந்து காசோலை மோசடிச் சம்பவங்களே அதிகமாக இடம்பெறுவதாகவும் கடந்த வாரம் மட்டும் 34 இலட்சத்திற்கு மேற்பட்ட பெறுமதியுடைய சுமார் ஐந்து காசோலை மோசடிச் சம்பவங்கள் பதிவாகியிருப்பதாகவும் தெரிவித்த அவர், அவை வியாபார நோக்குடனேயே மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்தச் சம்பவங்கள் குறித்து பொலிஸார் புலன் விசாரணைகளில் ஈடுபட்டிருப்பதாகவும் இருந்தும் எவரும் கைது செய்யப்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை தமிழ்மொழி மூலமான பொலிஸ் சேவையை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில் சிங்களப் பொலிஸாருக்கு ஐந்துமாதகால தமிழ்மொழிப் பயிற்சிநெறி ஒன்று நடைமுறையில் இருந்து வருவதாகவும் இவ்வாறு தமிழ்மொழிப் பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்த பொலிஸார் வடபகுதியிலேயே சேவைக்கமர்த்தப்படவிருப்பதாகவும் தகவல் வெளியிட்டார். (பா)



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் கிளிநொச்சி சென்திரேசா மகளிர் பாடசாலையில் கல்வி கற்கின்ற மாணவி ஒருவருக்கு புதிய துவிச்சக்கரவண்டி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் அந்த மாணவியின் கற்றல் செயற்பாடுகளுக்காக மாதாமாதம் 2000 ரூபா நிதியினை வழங்கி வருவதாக வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினர் தெரிவித்தனர். (54)

# புதிய பாடசாலை திறப்பு

மன்னார் - முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட "வேப்பங்குளம் பிச்சை வாணிப நெடுங்குளம்" கிராமத்தில் மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட புதிய பாடசாலை. நேற்றுமுன்தினம் காலை திறந்து வைக்கப்பட்டது.

வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் இதனைத் திறந்து வைத்தார். மீள் எழுச்சித்திட்டத்தின் நிதியுதவியுடன் சுமார் 18 இலட்சம் ரூபாய் செலவில் இப்பாடசாலை அமைக்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலை தரம் 1 முதல் தரம் 5 வரை இயங்கவுள்ளது.

இப்பாடசாலைக்கு அதிபர் ஒருவரும் 4 ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கான நியமனக்கடிதங்களை வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் நேற்றுமுன்தினம் காலை குறித்த நிகழ்வில் வைத்து வைபவ ரீதியாக வழங்கினார்.

இந்நிகழ்விற்கு முசலி பிரதேச சபையின் தலைவர் எம்எம்எஹியா, உப தலைவர் எஸ்.எம்.பெளறூஸ், மன்னார் வலயக் கல்விப் பணிமனையின் பிரதிக்கல்விப் பணிப்பாளர் லியோன் ரெவல், அமைச்சர் றிசாட் பதியுதீனின் இணைப்புச் செயலாளர் அலிக்கான் செரீப், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வன்னி மாவட்ட பணிப்பாளர் என்.எம்.முனவ்பர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

# வெளிநாடுகளில் புகலிடம் கோரியோர் நாடு திரும்புவதில் பாரியளவு வீழ்ச்சி

இலங்கைக்கு நாடு திரும்பும் புகலிடக் கோரிக்கையாளர்களின் எண்ணிக்கையில் பாரியளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ள தாக ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

2013 ஆம் ஆண்டில் வெளிநாடுகளில் புகலிடம் கோரி சென்றவர்களில் சொற்ப அளவிலானவர்களே இலங்கை திரும்பியுள்ளனர்.

அதற்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும்போது இந்த எண்ணிக்கை 51 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. 2011 ஆம் ஆண்டு முதல் இந்த வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

2012 ஆம் ஆண்டில் சுயவிருப்பின் அடிப்படையில் 1480 இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

எனினும், 2013 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 718 ஆக வீழ்ச்சியடைந்துள்ளது.

2013 ஆம் ஆண்டு புள்ளி விபரத் தகவல்களின் அடிப்படையில் 124, 436 புகலிடக் கோரிக்கையாளர்கள் வாழ்ந்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழக அகதி முகாம்களில் தங்கியிருக்கும் இலங்கையர்களே அதிகளவில் நாடு திரும்பியுள்ளனர்.

UNHCR
The UN
Refugee Agency

ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஒத்துழைப்புடன் குறித்த புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு திரும்பியுள்ளனர் என மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

# வறட்சியான காலநிலை நீடித்தால் தெற்கில் நீர்விநியோகம் தடைப்படும்

நாடளாவிய ரீதியாக வறட்சியான காலநிலை நீடித்தால் நீர் விநியோகம் தடைப்படலாமென்று தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை தெரிவித்துள்ளது.

ஆறுகள் மற்றும் நீர்த்தேக்கங்களிலுள்ள நீர் மட்டம் குறைந்துள்ளதால், நீரை குறைந்தளவில் பயன்படுத்துமாறு பாவனையாளர்களிடம் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகலாமைப்புச் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

தற்போது களனி கங்கையிலும் களு கங்கையிலும் நீர்மட்டம் குறைந்துள்ளது. அத்துடன், கடல் நீர் ஆறுகளில் பாயக் கூடிய சாத்தியம் உள்ளது. ஆகையால், கடல் நீர் நுழைவதைத் தடுக்கும் வகையில் மணல் மூடைகள் இடப்பட்டுள்ளதாகவும் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபையின் பொது முகாமையாளர் ரஞ்சித் பாலசூரிய தெரிவித்துள்ளார்.

இவ்வாறு மணல் மூடைகள் இடும் நடவடிக்கை அம்பத்தலே நீர் வடிகட்டும் அலகைச் சுற்றி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபையானது தற்போது நாளொன்றுக்கு 1.6 மில்லியன் கன மீற்றர் நீரை 06 மில்லியன் பாவனையாளர்களுக்கு வழங்கிவருகின்றது.

இதில் கொழும்புப் பகுதிக்கு 550,000 கன மீற்றர் நீரும் கொழும்பு நகருக்கு 300,000 கன மீற்றர் நீரும் விநியோகிக்கப்படுகின்றது.

# பேராதனை பல்கலைக்கழக வெளிவாரி பரீட்சை முடிவுகள்

இலங்கை பேராதனைப் பல்கலைக்கழ பி.ஏ.பட்ட இறுதிப் பரட்சை (வெளிவாரி 2012) முடிவுகள் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இவ் இறுதிப் பரீட்சைக்கு யாழ்ப்பாண உயர் கலைக் கல்லூரியிலிருந்து தோற்றி சித்தியடைந்துள்ள மாணவர்கள் விபரம் வருமாறு,

ப.ஜனார்த்தனன் (இணுவில்), தெ.ரஜீவன் (மிருசுவில்), செ.லிங்கநாதன் (மானிப்பாய்), அ.ஜசிகரன் (கோண்டாவில்), சு.வரதராசா (கைதடி), செ.பகீரத குமார் (ஏழாலை), லோ.ரஜீவன் (மானிப்பாய்), பொ.சசிரூபன் (புத்தூர்), இ.கருணாகரன் (யாழ்ப்பாணம்), வ.யசோதன் (கொடிகாமம்), ர.வாகீசன் (நீர்வேலி), சி.ரணீசன் (கொக்குவில்), அ.தினேஷ் (கொக்குவில்), த.தர்ஷிகன் (சங்கானை), நா.ஜெயகாந்தன் (இளவாலை), வ.சசிகரன் (ஆனைக்கோட்டை), ர.ருசீபன் (ஆனைக்கோட்டை), ஜெ.ஜெயதீஸ்வரன் (மானிப்பாய்), சி.ரவிசாந் (கரணவாய்).

ம.கிருஸ்ணகுமார் (வல்வெட்டித்துறை), ச.ஜெசிந்தன் (காரைநகர்). சி.மேனகதீபன் (மானிப்பாய்), அ.மதன்ராஜ் (சாவகச்சேரி), சி.சிவநிறோசன் (சாவகச்சேரி), ம.சந்திரமோகன் (கரணவாய்), வ.சதிஸ் கரன் (கரவெட்டி), நர்.துர்க்காயினி (கொக்குவில்) சி.தனுஷியா (கோண்டாவில்), கு.றினோயா (கோப்பாய்), பா.சுஜிதா (கோண்டாவில்), பு.தினேஸ்கௌரி (மானிப்பாய்), மு.சுபாஜினி (அச்சுவேலி), ஜெ.தர்மிதா (யாழ்ப்பாணம்), ந.சபிதா (பண்டத்தரிப்பு), த.சிந்துஜா (மானிப்பாய்), ப.தனரஞ்சினி (சுழிபுரம்), சி.விஜிதா (மானிப்பாய்).

சி.சிவதாரணி (மானிப்பாய்), த.சுகன்யா (கரவெட்டி), செ.சதினி (உடுப்பிட்டி), க.நித்தியா (கரவெட்டி), ம.ரஜிந்தா (உடுப்பிட்டி), சி.பிரதீபா (கரவெட்டி), சி.கிருஸ்ணவேணி (புலோலி), த.வானிதி (புலோலி), ர.பிரதயானி (நல்லூர்), ந.யாழினி (உரும்பிராய்), சோ.நிஷாந்தினி (யாழ்ப்பாணம்), ந.நதியா (புங்குடுதீவு), ஜீ.துஷ்யந்தி (கோண்டாவில்), அ.அமிர்தினி (யாழ்ப்பாணம்), அ.மயூரதி (நீர்வேலி), க.ராதிகா (யாழ்ப்பாணம்), சி.மனோகரி (யாழ்ப்பாணம்), ர.டிலானி (அல்வாய்).

தி.அருணா (புலோலி), மா.தர்ஷிகா (கோண்டாவில்), ந.பிரபாவதி (கொக்குவில்), ஜெ.சுதர்சினி (மானிப்பாய்), க.லோகேஸ்வரி (நயினாதீவு), வா.திரியாம்பிகை (நயினாதீவு), ப.சர்ஷினி (மிருசுவில்), க.சுகந்தினி (சாவகச்சேரி), த.கவிதா (சாவகச்சேரி), எம்.செல்வரதி (வட்டுக்கோட்டை), தெ.ரூபிகா (கோண்டாவில்), சி.சிவஜிக்கா (உடுப்பிட்டி), த.கலைமகள் (சுண்ணாகம்), ஸ்ரீ.ஸ்ரீவித்யா (கொடிகாமம்), த.சகிலா (ஆனைக்கோட்டை), கா.நிறஞ்சினி (திருநெல்வேலி), தி.நிஷாந்தினி (கைதடி), க.செலிசியா டெல்வின் (புதுக்குடியிருப்பு), கே.கானசிரூபி (யாழ்ப்பாணம்), எஸ்.கலைவாணி (கைதடி), ஜி.பசித்ரா (கைதடி), ரி.மஞ்சுளா (கொக்குவில்).(01)

# முகாமைத்துவ உதவியாளருக்கு நியமனம்

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் புதிதாக தெரிவு செய்யப்பட்ட அரச முகாமைத்துவ உதவியாளர்கள் 2700 பேருக்கு நியமனம் வழங்கும் வைபவம் நேற்று பிற்பகல் கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் நாடுமுழுவதிலுமிருந்து தெரிவு செய்யப்பட்ட இந்த அரச முகாமைத்துவ உதவியாளர்களுக்கு ஜனாதிபதி நியமனக் கடிதங்களை வழங்கினார்.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன, பிரதி அமைச்சர் வஜிய தசநாயக்க, பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் பீ. பி. அபேகோன் மற்றும் நியமனம் பெறுவோரின் பெற்றோர் உட்படப் பெருந்திரளானோர் இந்த வைபவத்தில் கலந்துகொண்டனர்.


வாழ்க வளமுடன்

பெயர் : ச.நிருக்ஷன்

முகவரி : புதுக்குளம், வவுனியா.

அகவை 6 இல் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................


பிறந்த ஆண்டு :- ..............................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# ஆர்ஜன்ரீனாவில் கடும் வெப்பம்
# ஏழு பேர் உயிரிழப்பு




108 வருடங்களின் பின் ஆர்ஜன்ரீனாவில் கடும் வெப்பம் காரணமாக ஏழு பேர் பலியாகியுள்ளனர்.

வடக்கு ஆர்ஜன்ரீனாவில் அதிக வெப்ப காலநிலை நிலவுகின்றது. வடக்கு ஆர்ஜன்ரீனாவில் 45 செல்சியஸ் வெப்ப நிலை நிலவுவதாக அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

1906 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மிக அதிகளவில் பதிவாகியுள்ள வெப்பநிலை இதுவென குறிப்பிடப்பட்டுள்ளது.

வெப்ப காலநிலையில் இருந்து தப்புவதற்காக பொது மக்கள் நீர்தேக்கங்கள் மற்றும் பூங்காக்களை நோக்கி படையெடுக்கின்றனர். இதுதவிர, வடக்கு ஆர்ஜன்ரீனாவில் மின்சாரத் தடையும் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புத்தாண்டை வரவேற்பதற்காக 1067 கார்கள் தீயிட்டு எரிப்பு



பிரான்சில் 2014ஆம் ஆண்டை வரவேற்பதாக 1067 கார்கள் தீயிட்டு கொளுத்தப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரான்சில் புத்தாண்டுக்கு முதல் நாள் அதாவது டிசம்பர் 31ஆம் திகதி, இரவில் பழைய கார்களை எரித்து அழிக்கும் சம்பவம் பாரம்பரியமாக நடைபெற்று வருகிறது.

இதன்படி இந்த ஆண்டு மட்டும் சுமார் 1067 கார்கள் அழிக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து உள்துறை அமைச்சர் மானுவல் வால்ஸ் கூறுகையில், எதிரிகளை பழி வாங்கும் நோக்கில் புத்தாண்டு உற்சாகத்தை காரணமாக வைத்து காரை எரிப்பதை சிலர் வழக்கமாக கொண்டுள்ளனர்.ஆனால், கடந்த ஆண்டுடன் ஒப்பிடு கையில், இது போன்ற சம்பவம் இந்த ஆண்டு 10 சதவிகிதம் குறைந்துள்ளது.

மேலும் கொண்டாட்டங்கள் நடக்கும் விபரீதங்களை தவிர்ப்பதற்காக 53 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். எனினும் வன்முறைச் சம்பவங்களில் 3பேர் கத்தியால் குத்தப்பட்டு உயிரிழந்தனர் எனத் தெரிவித்துள்ளார்.


# பள்ளத்தில் பாய்ந்தது பேருந்து இந்தியாவில் 27பேர் பலி

இந்தியாவின் மகாராஷ்டிர மாநிலத்தில் அரசுப் பேருந்து ஒன்று பள்ளத்தாக்கில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 27பேர் உயிரிழந்துள்ளனர்.11 பேர் காயமடைந்துள்ளனர்.நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் விபத்து ஏற்பட்டுள்ளது.

400 அடி பள்ளத்தில் பேருந்து கவிழ்ந்து விழுந்ததில் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

அகமதுநகர் நோக்கிச் சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து டோகாவடே பகுதியைக் கடந்த போது ஓட்டுநர் கட்டுப்பாட்டில் இருந்து விலகி பள்ளத்தாக்கில் கவிழ்ந்துள்ளது. விபத்துக் குறித்து தகவல் கிடைத்தவுடன் சம்பவ இடத்திற்கு விரைந்த பேரிடர் மேலாண்மைக் குழுவினர் மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

# இலங்கை அகதிகள் உள்ளிருப்புப் போராட்டம்



திருச்சியில் அகதிகளுக்கான சிறப்பு முகாமில் அடிப்படை வசதி கோரி இலங்கை அகதிகள் கடந்த ஆறு நாட்களாக உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

திருச்சி மத்திய சிறை வளாகத்தில் அகதிகளுக்கான சிறப்பு முகாம் உள்ளது. இந்த முகாமில் உள்ள இலங்கை அகதிகள் 19 பேர் உணவுப் படியை இந்திய ரூ. 150ஆக உயர்த்த வேண்டும். சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் உறவினர்களை சந்திக்க அனுமதிக்க வேண்டும் எனக்கோரி கடந்த 29ஆம் திகதி முதல் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

30ஆம் திகதி உதவி ஆளுநர நடராஜன், இலங்கை அகதிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். இதில் உடன்பாடு ஏற்படாததையடுத்து தொடர் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

உலகச் செய்திகள்

# தனித்தெலுங்கானாவுக்கு எதிர்ப்பு: ஒருநாள் கதவடைப்புப் போராட்டம்



இந்தியாவில் ஆந்திர மாநிலத்தை பிரித்து தனி தெலுங்கானா அமைக்க எதிர்ப்புத் தெரிவித்து, சீமாந்திராவில் உள்ள 13 மாவட்டங்களிலும் நேற்று ஒரு நாள் முழு அடைப்புப் போராட்டம் நடைபெற்றது இதனால் அங்கு பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பெருமளவில் பாதிக்கப்பட்டது.

ஆந்திர சட்டமன்ற குளிர் கால கூட்டத்தொடர் நேற்று மீண்டும் கூடியது: காலை 9 மணிக்கு சட்டசபை தொடங்கியது. சில நிமிடங்களிலேயே, தனித் தெலுங்கானா அமைக்க எதிர்ப்புத்தெரிவித்து ஆந்திர சட்டமன்றத்தில் அமளி ஏற்பட்டதால் அது ஒத்திவைக்கப்பட்டது.

அவை தொடங்கியவுடன், தெலுங்கு தேசம், வை.எஸ். ஆர். காங்கிரஸ் கட்சியினர் ஆந்திரா பிரிவினைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கோசங்கள் எழுப்பினர்.

மேலும், கேள்வி நேரத்தை ஒத்திவைத்து விட்டு தெலுங்கானா விவகாரம் குறித்து விவாதிக்கக் கோரி ஒத்திவைப்பு தீர்மானம் கொண்டு வந்தனர். ஆனால் இதனை ஏற்க ஆந்திரா சட்டமன்ற சபாநாயகர் மறுத்துவிட்டார். இதனால் அவையில் கடும் அமளி ஏற்பட்டது.

மேலும், ஆந்திரா, ராயல் சீமா எம்.எல்.ஏ.க்கள் சபாநாயகர் இருக்கையை முற்றுகையிட்டு கோசங்கள் எழுப்பினர். தொடர் அமளியை அடுத்து அவை ஒத்திவைக்கப்பட்டது. ஆந்திரா மாநில சட்டமன்றத்தின் குளிர் கால கூட்டத்தொடர் கடந்த டிசம்பர் 12-ஆம் திகதியன்று தொடங்கியது. தெலுங்கானா மாநிலம் அமைப்பது தொடர்பான வரைவு மசோதா மீது எந்த ஒரு விவாதமும் நடத்தப்படாமலேயே அவை நேற்றைய தினம் ஒத்திவைக்கப்பட்டது.

நேற்று மீண்டும் கூடும் சட்டமன்றம் ஜனவரி 10 வரையிலும், பின்னர் ஜனவரி 16 முதல் 23 வரையிலும் இரண்டு கட்டங்களாக நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், நேற்று அவை கூடியவுடன் அமளி நீடித்தது. தெலுங்கானா மசோதா குறித்து கருத்து தெரிவிக்க ஆந்திர அரசுக்கு வரும் 23-ஆம் திகதி வரை மத்திய அரசு அவகாசம் அளித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# நீதிமன்றம் செல்லும் வழியில் முஷாரப்பிற்கு நெஞ்சு வலி


தேசத் துரோக வழக்கில் ஆஜராவதற்காக நீதிமன்றத்துக்கு நேற்று முன்தினம் சென்று கொண்டிருந்த பாகிஸ்தான் முன்னாள் அதிபர் முஷாரப் திடீரென நெஞ்சு வலி காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ராவல்பிண்டியில் உள்ள இராணுவ மருத்துவமனையில் இவர் அனுமதிக்கப்பட்டார்.

பல்வேறு வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த முஷாரப், அந்த வழக்குகளில் பிணை பெற்று அண்மையில்தான் வீட்டுக்காவலில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

தேசத் துரோக வழக்கில் அவர் சிறை வைக்கப்படலாம் என்று கூறப்படுவதால் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் முஷாரப் தவிர்த்து வருவதாக அரசுத் தரப்பு வழக்கறிஞர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். பாதுகாப்பு காரணங்களை சுட்டிக்காட்டி ஏற்கெனவே 2 முறை நீதிமன்றத்தில் முஷாரப் ஆஜராகவில்லை. ஜனவரி 2ஆம் திகதி அவர் கண்டிப்பாக ஆஜராக வேண்டும், இல்லையெனில் பிடியாணை பிறப்பிக்கப்படும் என்று நீதிபதிகள் எச்சரித்திருந்தனர்.

இந்நிலையில், நீதிமன்றத்துக்கு ஆஜராகச் சென்றுகொண்டிருந்தபோது, நெஞ்சுவலி என்று



கூறி மருத்துவமனையில் முஷாரப் சேர்ந்துள்ளார்.

இதுதொடர்பாக முஷாரபின் செய்தித் தொடர்பாளர் டாக்டர் ரஸா புஹாரி தெரிவிக்கையில் இராணுவ மருத்துவமனையில் முஷாரபுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தற்போது அவர் சுயநினைவுடன் உள்ளார் என்றார்.

# கிறிஸ்மஸ்தீவு அகதி முகாமில் பெண் மீது பாலியல் வல்லுறவு



கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள புகலிடக் கோரிக்கையாளரான பெண்ணொருவர் மீது மற்றொரு புகலிடக் கோரிக்கையாளர் பாலியல் வல்லுறவு புரிந்ததாக பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

கிறிஸ்மஸ் தீவில் தலா ஐந்து குடும்பங்களை தங்க வைப்பதற்காக பல முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. அத்தகைய முகாமொன்றில் பெண்மீது பாலியல் வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதாக தீவிற்குப் பொறுப்பான நிர்வாக உத்தியோகத்தர் கோர்டன் தொம்சன் தெரிவித்தார். பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் பெண் முறைப்பாடு செய்ய முன்வந்த சமயம். இந்தச் சம்பவம் பற்றி கடந்த வாரம் தெரியவந்ததாக அவுஸ்ரேலிய ஊடகங்கள் அறிவித்துள்ளன. கிறிஸ்மஸ் தீவு தடுப்பு முகாமில் இடம்பெறும் சம்பவங்கள் குறித்து எவரும் வாய் திறப்பதில்லையென அவர் தெரிவித்தார்.

இந்தத் தீவில் 2,200 இற்கு மேற்பட்ட புகலிடக் கோரிக்கையாளர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இங்குள்ள மோசமான நிலை குறித்து பல்வேறு குற்றச்சாட்டுக்களும், விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தடைசெய்த மீன்பிடியில் ஈடுபட்டால் இழுவைப் படகுகள் பறிமுதல்

## தேசிய கடற்றொழில் சம்மேளனம் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

தடையையும் மீறி இழுவைப் படகுத் தொழிலில் ஈடுபடும் உள்ளூர் இழுவைப்படகுகள் எதிர்வரும் 14 ஆம் திகதிக்குப் பின்னர் பறிமுதல் செய்யப்படவிருப்பதாக தேசிய கடற்றொழில் சம்மேளனத்தின் உபதலைவர் நாகநாதி பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

தற்சமயம் யாழ். குடாநாட்டில் தடைசெய்யப்பட்டிருக்கும் இழுவைப் படகுத் தொழில் நடவடிக்கை நிறுத்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படும் நிலையில் ஒருசில படகுகள் தொடர்ந்து தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எமது கடல்வளம் இந்த இழுவைப் படகுத் தொழிலினால் அழிக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறு இழுவைப் படகுத் தொழிலை அறிமுகம் செய்து வைத்த நோர்வே அரசாங்கம் கூட அதனை தனது நாட்டின் வளம் அழிக்கப்படுவதைக் காரணம் காட்டி தடைசெய்துள்ளது.

இந்நிலையில் எமது கடற்றொழில் அமைச்சும் இதனைத் தடைசெய்துள்ளது. எனவே இதனடிப்படையில் உள்ளூர் மீனவர்களினால் அதாவது குருநகர், வல்வெட்டித்துறையில் வரும் உள்ளூர் இழுவைப் படகுகளின் தொழில் நடவடிக்கையை முற்று முழுதாக நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்துடன் இந்திய மீனவர்களின் அத்துமீறிய தொழில் நடவடிக்கையை நிறுத்துவதற்கு கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்னவால் இருதரப்புப் பேச்சுவார்த்தை ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுடன், அது எதிர்வரும் 20 ஆம் திகதி இந்தியாவில் நடைபெறவுள்ளது.

இந்தப் பேச்சுக்களின் வட பகுதியிலிருந்து பெருமளவு கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவிருப்பதாகவும் தெரிவித்ததுடன், ஏற்கனவே இந்திய மீனவர்களுடன் நடைபெற்ற பேச்சுக்களில் பங்குபற்றியவர்கள் இந்தப் பேச்சுக்களில் பங்குகொள்ளவில்லை என்றும் தகவல் வெளியிட்டுள்ளார்.

மேலும் கடற்றொழில் அமைச்சுடன் சம்பந்தப்பட்ட சட்டரீதியான நடவடிக்கைகளில் கடற்றொழில் அமைச்சின் கீழ் உள்ள அமைப்புக்களே ஈடுபடமுடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (பா)

# இன்று ஆரம்பமாகிறது உதைபந்து தொடர்

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி செலான் வங்கி அனுசரணையுடன் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் செலான் வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டத் தொடர் இன்று ஆரம்பமாகிறது.

30 அணிகள் பங்குபற்றும் இச்சுற்றுப்போட்டியில் இன்று இடம்பெறவுள்ள ஆட்டங்கள் -

குழு ஏ போட்டிகள் வதிரி டயமண்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுளளன.

கலட்டி விளையாட்டுக் கழகம் எதிர் டயமண்ஸ் வி.க. காலை 8.00, பூமகள் வி.க எதிர் உதயதாரகை வி.க. காலை 8.30, அல்வாய் நண்பர்கள் எதிர் சென் சேவியர் வி.க 9.00, மனோகரா வி.க எதிர் உடுப்பிட்டி யூத் வி.க 9.30, கருணாகரன் விக.எதிர் வல்வை வி.க 10.00, சென் அன்ரனீஸ் எதிர் நவசக்தி வி.க 10.30, பொலிகை பாரதி எதிர் நவஜீவன்ஸ் 11.00

குழு பீ போட்டிகள் பொம்மர்ஸ் வி.க மைதானத்தில் இடம்பெறவுள்ளன. பொம்மர்ஸ் வி.க எதிர் நெடியகாடு வி.க 9.00, பருத்தித்துறை யுனைட்டட் வி.க எதிர் யங்கம்பன்ஸ் வி.க 9.30, சென். பீற்றர்ஸ் வி.க எதிர் ரேஞ்சர்ஸ் வி.க 10.00, நக்கீரன் வி.க எதிர் விண்மீன் வி.க 10.30, கலைமதி வி.க எதிர் சுடரொளி வி.க 11.00, இமையாணன் மத்தி வி.க எதிர் அல்வாய் பாரதி வி.க 11.30, இமையாணன் யூத் வி.க எதிர் கரவை சுடர் வி.க 12.00 (48)

# வெடிகுண்டு மீட்பு

(பொலிகண்டி)

பொலிகண்டி மேற்கு செம்மீன் படிப்பகத்திற்கு அருகில் நேற்றுமாலை மண்ணில் புதையுண்ட நிலையில் மோட்டார் குண்டொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த படிப்பகத்திற்கு அருகிலுள்ள மைதானத்தில் இளைஞர்கள் கரப்பந்தாட்டத்தில் ஈடுபடுவது வழக்கமாகும். எனினும் அண்மைய சில நாட்களாக இந்த மைதானத்தில் இளைஞர்கள் விளையாடாத நிலையில் பற்றைகள் வளர்ந்த நிலையில் நேற்றுமாலை இளைஞர்கள் சிரமதானப் பணி மூலம் துப்புரவில் ஈடுபட்டனர். இதன்போதே குறித்த குண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து பருத்தித்துறை பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் அறிவிக்கப்பட்ட நிலையில் அவ்விடம் வந்த அவர்கள் குறித்த குண்டைப் பார்வையிட்டதுடன், இன்றைய தினம் இராணுவத்தின் 521 ஆவது படைப்பிரிவின் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினரால் அது செயலிழக்கச் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (116)

## வாள்வெட்டில்...

அந்தப் பகுதியிலுள்ள வழிபாட்டிடம் ஒன்றிற்கு முன்னால் கூடியிருந்து கதைத்துக் கொண்டிருந்த இளைஞர்கள் மீதே இவ்வாறு வாள்வெட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் வசாவிளான் செல்வநாயகபுரம் பகுதியினைச் சேர்ந்த திலீப் துஷாந்தன் (வயது - 18), வள்ளிபுரம் ரூபவதனன் (28) குழந்தைவேல் கலியுகவரதன் (வயது - 45), முத்துலிங்கம் ஜெகநாதன் (வயது - 30), துஷாந்தன் குணசீலன் (வயது - 18), திலிப் ஜெயரூபன் (வயது - 21) ஆகியோரே காயமடைந் துள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை அச்சுவேலிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (48)

## இனப்பிரச்சினைக்கான...

செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த பிரதமர் மன்மோகன், இலங்கைத் தமிழர்களின் நலனுக்காக இந்திய அரசு இலங்கை அரசாங்கத்துடன் தொடர்ந்தும் பேசும் என்று கூறினார்.

தமிழக மீனவர் பிரச்சினை பற்றி பேசிய பிரதமர், நாங்கள் பல தடவைகள் இலங்கை அரசாங்கத்துடன் பேசியிருக்கிறோம் என்று கூறினார்.

இப்போது வடக்கு இலங்கையில் தமிழர்களே அரசாங்கம் அமைத்துள்ளார்கள். எனவே இலங்கையிலுள்ள தமிழர்களும் தமிழ் நாட்டுத் தமிழர்களும் ஒன்றாக அமர்ந்து பேசி இருநாட்டு மீனவர்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாணமுடியும் என்றும் மன்மோகன் சிங் கூறினார்.

இதேவேளை ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு ஆட்சிக்கு வந்தால் மீண்டும் பிரதமராகும் எண்ணமில்லை என்றும் மன்மோகன் சிங் கூறினார்.

## படையினர்...

பொழுது போக்கு மத்திய நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கிளிநொச்சி படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் உதயபெரேரா, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டு காணி உரிமையாளர்களிடம் அதற்கான ஆவணங்களை கையளித்தனர்.

கடந்த காலங்களில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் அவர்களது முகாம்களாக இருந்து பின்னர் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த 24 காணிகளுமே நேற்று உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இதில் கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவில் 22 காணிகளும், பூநகரியில் ஒரு காணியும் புதுக்குடியிருப்பு பிரசேத செயலக விசுவமடு பிரதேசத்தில் ஒரு காணியும் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட வறியகுடும்பங்களைச் சேர்ந்த 20 பேருக்கு வாழ்வாதார உதவியாக பால் மாடுகளும் வழங்கப்பட்டன.

## இந்திய...

பரப்பில் இந்திய மீனவர்கள் 10 பேர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை 5.30 மணியளவில் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தாழ்வுபாட்டு கடற்பரப்பில் 2 இழுவைப் படகுகளுடன் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்ததாகக் கூறப்படும் இராமநாதபுரம் மாவட்டத்தின் தங்கச்சிமடம் கிராமத்தைச் சேர்ந்த இந்திய மீனவர்கள் 10 பேரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் வி.எஸ்.மெராண்டா தெரிவித்தார்.

இந்திய மீனவர்கள் 10 பேரையும் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாக மன்னார் மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் வி.எஸ்.மெராண்டா தெரிவித்தார்.

# மழைவேண்டி இறைவழிபாடு

(மல்லாவி)

மல்லாவி பிரதேசத்திலுள்ள விவசாயிகள் மழைவேண்டி இறைவழிபாட்டை மேற்கொண்டுள்ளனர்.

மல்லாவியிலுள்ள திருநகர் சுப்பிரமணியசுவாமி ஆலயத்தில் கடந்த புதன்கிழமை 1008 இளநீர் கொண்ட நீராலான அபிஷேகம் இடம்பெற்றது.

இம்முறை காலநிலை மாற்றத்தால் மழை பொய்த்துள்ளது. இதனால் நெற்செய்கை பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனைத் தடுக்கும் வகையில் விவசாயிகளும் கமக்கார அமைப்புக்களும் இணைந்து மழையை வேண்டி இறைவழிபாட்டை மேற கொண்டுள்ளனர். (140)

## மேலும் நான்கு...

டி.எல்.வைத்தியரெட்ண ஆகியோர் முன்னிலையில் நேற்றுக் காலை 8 மணிமுதல் மாலை 2.15 மணிவரை குறித்த மனிதப் புதைகுழி தோண்டப்பட்டு மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.

ஏற்கனவே 11 மனித எலும்புக்கூடுகள் முழுமையாகவும் சில மனித எலும்புக்கூடுகள் துண்டு துண்டுகளாகவும் மீட்கப்பட்டிருந்தன. இந்நிலையில் மேலும் 4 மனித எலும்புக்கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இதேவேளை சில தடயப்பொருட்களும் குறித்த புதைகுழியில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

குறித்த மனிதப் புதைகுழி தோண்டும் பணி இன்று காலை மீண்டும் மன்னார் நீதவான் முன்னிலையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிலையில் தற்போது மீட்கப்பட்டுள்ள மனித எலும்புக்கூடுகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதன் போது சம்பவ இடத்திற்கு மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துஸார தலுவத்தை வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (113)

## வலி. வடக்கு...

முல்லைத்தீவிலும் பல வீடுகளை மக்களுக்கு கட்டிக்கொடுத்துள்ளோம். தற்போது மீள்குடியமர்விற்கென பல மக்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

அவர்களின் பிரச்சினைக்கு தீர்வாக விரைவில் காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலைக்கு வழங்கிய காணிகளில் அவர்களை மீள்குடியமர்த்துவது தொடர்பில் பிரதேச செயலர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இந்த விடயங்களை முழுமையாக பெறமுடியாத நிலையுள்ளது. சுனாமி இடப்பெயர்வின் பின் ஒரு குடும்பம் மீளக்குடியமரும்போது அக்குடும்பம் 3 குடும்பமாக மாறியிருந்தது. இவ்வாறு உப குடும்பங்கள் மீள்குடியமர்வு தொடர்பில் கவனம் செலுத்தி இதற்கு தீர்வுகாண்பேன் என்றார் அமைச்சர்.

இக்கலந்துரையாடல் அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் இடம்பெற்றது. இதில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார், சில்வேஸ்திரி அலன்ரின் ஆகியோரும் கலந்துகொண்டு இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வு தொடர்பில் சரியான விபரங்களை மீள்குடியேற்ற அமைச்சருக்கு விளக்கிக் கூறியிருந்தனர். (இ)

## கூரை மீது...

சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

அங்கிருந்து 250 கைதிகள் வெலிக்கடை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த விடயமும் கைதிகளின் உண்ணாவிரதத்திற்கு காரணமாக இருக்கலாம் எனத் தாம் நம்புவதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## கைத்தொழில்...

மலிவாகவும் கைத்தொழிலாளர்கள் பெற்றுக் கொள்வதற்கான வழிவகைகள் குறித்து ஆராயப்பட்டது.

மேற்படி அமைச்சின் கீழுள்ள கைத்தொழில் அபிவிருத்தி சபையின் ஊடாக சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிலாளர்களின் தொழில் முயற்சிகள் பாதுகாக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்படுமென்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அத்துடன் அரச நிறுவனங்களிலிருந்து ஒதுக்கப்படுகின்ற உலோகத் துண்டங்களை கொள்வனவு செய்து அவற்றை மூலப் பொருட்களாக வழங்குவது பரவலாக்கப்படுமெனத் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் பிரதியமைச்சர் வீரகுமார திஸநாயக்க, அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, மேலதிக செயலாளர் திருமதி மங்கலிக்கா அதிகாரி, கைத்தொழில் அபிவிருத்தி சபைத் தலைவர் நவாப் ரஜாப்தீன் உட்பட துறைசார்ந்த அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

# மத்திய சுகாதார அமைச்சருடன் மாகாண சுகாதார அமைச்சர் சந்திப்பு



வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம் மத்திய சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து கலந்துரையாடியுள்ளதாக வடமாகாண சுகாதார அமைச்சின் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பில் அமைந்துள்ள மத்தியசுகாதார அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் வடமாகாணத்தில் நிலவும் வைத்தியர், தாதிய உத்தியோகத்தர், துணைமருத்துவ உத்தியோகத்தர்களுக்கான தட்டுப்பாடுகள் பற்றி கலந்துரையாடப்பட்டதுடன் மத்திய அரசின் ஒத்துழைப்பு மற்றும் மாகாண சுகாதார சேவைகள் முன்னேற்றப்பட அவசியமென வடமாகாண சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளதாகவும் சிநேகபூர்வமான இந்தச் சந்திப்பில் மாகாண சுகாதார சேவையை மேம்படுத்த பூரண ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாக மத்திய சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன வடமாகாண சுகாதார அமைச்சருக்குத் தெரிவித்தாகவும் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, வடமாகாண சபை பொறுப்பேற்றபின்னர் மாகாண அமைச்சர் ஒருவர் மத்திய அமைச்சரைச் சந்தித்தது இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

இச் சந்திப்பில் வடமாகான சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர்.இரவீந்திரன், மாகாண சுகாதாரப்பணிப்பாளர் எஸ்.ஆர். ஜுட் மற்றும் அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் ப.சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# புலமைப் பரீட்சை; இரத்து இல்லை

(கொழும்பு)

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையை இரத்து செய்வது தொடர்பில் அமைச்சரவையில் தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்படவில்லை என தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.


அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ,ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று பிற்பகல் தகவல் ஊடகத்துறை அமைச்சில் நடைபெற்றபோதே அமைச்சர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அமைச்சர் மேலும் கூறியதாவது-

ஐந்தாம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சை எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் நடைபெறாது எனக் கல்விச் சேவைகள் ஆணைக்குழுவின் அறிக்கைக்கு இணங்க கல்வி அமைச்சர் அண்மையில் அறிவித்திருந்ததார்.

அமைச்சரின் இந்த அறிவிப்பிற்கு கல்வி அமைப்புக்கள் உள்ளிட்ட பல தரப்பினரும் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர். சில ஊடகங்களும் தொடர்ச்சியான எதிர்ப்பை வெளியிட்டன.

எனினும், அமைச்சரவையில் அப்படி யோசனைகள் எதுவும் சமர்பிக்கப்படவில்லை. எனவே வழமைபோல் தொடர்ந்தும் ஐந்தாம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சை நடைபெறும் என அமைச்சர் கூறினார்.

# விதிகளை மீற மறுக்கும் பசு இதுவும் யாழ்.நகரில் தான்



படிப்பிடிப்பு : இ.ராஜகுமார்

# மத்திய கிழக்கு நோக்கி அமைச்சர் பீரிஸ்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இன்று மத்திய கிழக்கு நாடுகளுக்கான சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டு பலஸ்தீனம் நோக்கி பயணமாகவுள்ளார்.

பலஸ்தீனம் செல்லும் அவர், அங்கிருந்து இஸ்ரேல் மற்றும் ஜோர்தான் ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்வார்.

எனினும் இந்தப் பயணத்தை முடித்துக் கொண்டு எதிர்வரும் 10 ஆம் திகதி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நாடு திரும்புவார் என்று வெளிவிவகார அமைச்சு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வரும் மார்ச் மாதம் ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடருக்கு முன்பாக நட்பு நாடுகளுக்கு நேரில் சென்று, இலங்கையின் நிலைப்பாடு குறித்து விளக்கமளிக்கும் நோக்கிலேயே ஜி.எல்.பீரிஸ் மத்திய கிழக்கிற்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

எனினும், வரும் 10 ஆம் திகதி அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வால் கொழும்பு வரவுள்ளதால், அதற்கு முன்னர் வெளிவிவகார அமைச்சர் நாடு திரும்புவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, பலஸ்தீனம், மற்றும் இஸ்ரேலுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வாழ்வின் எழுச்சி திணைக்களம் நேற்று முதல் செயற்பாடுகள்

(கிளிநொச்சி)

நேற்று முதல் நடைமுறைக்கு வந்த வாழ்வின் எழுச்சி திணைக்கள செயற்பாடுகளின் தேசிய நிகழ்வுகள் கிளிநொச்சியிலும் இடம்பெற்றுள்ளது.

வாழ்வின் எழுச்சி திணைக்கள செயற்பாடுகளை ஆரம்பிக்கும் வகையில் நேற்றுக்காலை கிளிநொச்சி பிள்ளையார் ஆலயத்தில் மாவட்ட மேலதிக அரச அதிபர் ஸ்ரீநிவாசன் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் ஆகியோர் கலந்து கொண்ட விசேட பூசை நிகழ்வுகள் இடம்பெற்றன அத்தோடு கரைச்சி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்திலும் பூசை வழிபாடுகள் இடம்பெற்றுள்ளன.

இந்நிகழ்வுகளில் கரைச்சி பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன், மாவட்டச் செயலக உதவி திட்டப்பணிப்பாளர் கேதீஸ்வரன், கௌரிதாசன், மாவட்ட சமூர்த்தி ஆணையாளர் இர்பான், சமூர்த்தி இணைப்பாளர் சிவகுமார்.மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அரச உழியர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# தாதியர் பற்றாக்குறை, விடுதி வசதியை நிவர்த்திக்க கோரி பணிப்புறக்கணிப்பு




(யாழ்ப்பாணம்)

தாதியர் பற்றாக்குறையான வேளையில் தாதியர் இடமாற்றத்தை நிறுத்துமாறும், தாதியர்களுக்கான விடுதி வசதிகளை மேற்கொள்ளுமாறும் கோரி அரச தாதி உத்தியோகத்தர் சங்கத்தினர் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

நேற்று நண்பகல் 12 மணியிலிருந்து ஒரு மணி வரை போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுக்கு முன்னால் சுலோக அட்டைகளுடன் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இது குறித்து அரச தாதி உத்திகோகத்தர் உப தலைவர் சிவயோகம் கருத்து தெரிவிக்கையில்,

வடமாகாண வைத்தியசாலைகளிலும் போதனா வைத்தியசாலையிலும், தாதியர் பற்றாக்குறையை நிவர்த்திக்க மாகாணசபை உட்பட்ட வைத்தியசாலைகளுக்கு 80 பேர் தருவதாக உறுதியளித்த போதிலும், இறுதியில் 46 பேரின் பெயர் வந்துள்ளது.

அதிலும் 41 பேர் வருகை தந்துள்ளனர். இதேபோல் யாழ். போதனா வைத்தியசாலைக்கு 150 தாதி யர்களைத் தருவதாக உறுதி யளிக்கப்பட்ட போதிலும் 70 பேரின் பெயர்களே வந்தன. இறுதியில் 61 பேரே இன்று கையொப்பம் இட்டுள்ளனர்.

இதிலும் 2 பேரை இன்று இடம்மாற்றியுள்ளனர். எனவே இவ்வாறு ஆள் பற்றாக்குறை நிலவும் வேளையில் இவ்வாறு இடமாற்றம் செய்து நோயாளரை மிகவும் பாதிப்பதாகவும் இதனை உடன் நிறுத்துமாறும், மாற்றலாகி வரும் தாதியருக்கான விடுதி வசதிகளை மேற்கொண்டு தருமாறும் கோரியே நாம் பணிப்புறக கணிப்பில் ஈடுபடுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# ஜனாதிபதியுடன் சம்பந்தன் விரைவில் சந்திப்பு

## சுமந்திரன் தகவல்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தனுக்கும் இடையில் இந்த மாதம் விசேட சந்திப்பு ஒன்று நடைபெறவுள்ளது.

இந்த மாதத்தின் நடுப்பகுதியில் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பிலான கூட்டமைப்பின் நிலைப்பாட்டை சம்பந்தன் ஜனாதிபதியிடம் தெளிவுபடுத்துவார் என கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

சம்பந்தன் இப்போது இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

சம்பந்தன் நாடு திரும்பியதன் பின்னர் ஜனாதிபதியின் அழைப்பு தொடர்பில் கட்சி பேச்சுவார்த்தை நடத்தும். அண்மையில் சபாநாயகரின் இல்லத்தில் நடைபெற்ற விருந்துபசாரமொன்றில் ஜனாதிபதி கூட்டமைப்பு உறுப்பினர்களை சந்தித்து பேசினார்.

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாக அப்போது அவர் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதிக்கும் சம்பந்தனுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு காண்பதில் சாதக பலன்களை ஏற்படுத்தும் என நம்புவதாகவும் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஜனவரி 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.